# கச்சியப்ப சிவாச்சாரியார் அருளிய
# கந்த புராணம் - பகுதி 12
# 6. தக்ஷ காண்டம் / படலம் 14 -20
# (908-1562 )

# kantapurANam of kAcciyappa civAccAriyAr
# part 12 /canto 6 taksha kANTam (verses 908 - 1562)
# In tamil script, Unicode/UTF-8 format

---


## Acknowledgements:

Our Sincere thanks go to Dr.

Thomas Malten & colleagues of the Univ. of Koeln, Germany for providing with a transliterated/romanized version of this work and for permissions to release the Tamil script version as part of Project Madurai collections.
Our thanks also go to Shaivam.org for the help in the proof-reading of this work in the Tamil Script format.

Preparation of HTML and PDF versions: Dr. K. Kalyanasundaram, Lausanne, Switzerland.
© Project Madurai, 1998-2008.

Project Madurai is an open, voluntary, worldwide initiative devoted to preparation of electronic texts of tamil literary works and to distribute them free on the Internet.
Details of Project Madurai are available at the website http://www.projectmadurai.org/
You are welcome to freely distribute this file, provided this header page is kept intact.

---

# கச்சியப்ப சிவாச்சாரியார் அருளிய கந்த புராணம் - பாகம் 11

## 6. தக்ஷ காண்டம்/ படலம் 14-20 (908 -1562)

| | |
|---|---|
| 14. கயமுகன் உற்பத்திப் படலம் | 908 - 1172 |
| 15. அனந்தன் சாப நீங்கு படலம் | 1173 - 1210 |
| 16. தானப் படலம் | 1211 - 1256 |
| 17. வேள்விப் படலம் | 1257 - 1265 |
| 18. உமைவரு படலம் | 1266 - 1326 |
| 19. வீரபத்திரப் படலம் | 1327 - 1386 |
| 20. யாகசங்காரப் படலம் | 1387 - 1562 |

## **14.** கயமுகன் உற்பத்திப் படலம் **(908-1172)**

908 பாக சாதனன்
தொல்லைநாள் வானவப்

படையோ
டேகி யேயசு ரர்க்கிறை
தன்னைவென் றிகலில்
வாகை சூடியே
விஞ்சையர் முதலினோர்
வாழ்த்தப்
போக மார்தரும் உலகிடை
மீண்டுபோய்ப் புகுந்தான். 1

909 பொன்ன கர்க்கிறை
போதலும் பொறாமையிற்
புழுங்கி
வன்னி யுற்றிடும்
அலங்கல்போ லுளநனி
வாடி
வென்ன ளித்திடும்
அவுணர்தங் கோமகன்
வினையேற்
கென்னி னிச்செயல்

எனப்பெரி துன்னியே
இனைந்தான். 2

910 பொன்ன கர்க்கிறை
போதலும் பொறாமையிற்
புழுங்கி
வெருவ ரும்படி
மலைந்திடும் அமரர்பான்
மேவிப்
பொருது வென்றிகொண்
டேனக்குமப் பெரும்புகழ்
புனைய
ஒருவ ரெங்குலத்
தில்லைகொ லோவென
உரையாக்
குருவி ருந்துழி அணுகியே
வணங்கினன்
கொடியோன். 3

911 பொன்ன கர்க்கிறை
போதலும் பொறாமையிற்
புழுங்கி
பொற்றை யின்சிறை
தடிந்தவன் கரரொடும்
போர்மேல
உற்ற காலையில்
படையுடன் யான்பொரு
துடைந்து
மற்ற வற்குவென்
னளித்தனன் நம்பெரு
மரபிற்
கொற்ற வீரர்க ளியாவரு
முடிந்தனர் கூற்றால். 4
912 கழிய மாசினை
அடைந்தனம் இன்னலே
கரையாம்
பழிகொள் வேலையில்

அழுந்தினம் உடைந்திடு
பகைவர்க்
கழிவும் உற்றனம்
பெருந்திறல் அற்றம்
அவுணர்
ஒழியும் எல்லைவந்
தெய்திய தோவிவண
உரைத்தி.

913 சிறுவ ராயினோர்
பெருமையிற்
பிழைப்பரேல் தெருட்டி
உறுதி பற்பல
கொளுத்திமற் றவர்தமை
உயர்ந்த
நெறியின் ஆக்குதல்
குரவர்தங் கடனது நீயே
அறிதி யாதலின் உய்யுமா
றுரைத்தியென்

றறைந்தான். 6
914 உரைத்த வாசகங்
கேட்டலும் மன்னநீ
உளத்தில்
வருத்த முற்றிடல்
என்னவே தேற்றிமேல்
வருவ
கருத்தி லுன்னினன்
தெரிதலும் வெதும்பிய
காயத்
தரைத்த சாந்தினை
அப்பினன் போலஒன்
றறைந்தான். 7
(1. பாகசாதனன் -
இந்திரன். விஞ்சையர் -
வித்தியாதரர்.
2. வினையேற்கு -
பாவியாகிய எனக்கு.

3. குரு - சுக்கிரன்.
கொடியோன் - அசுரர்
அரசன்.
4. பொற்றை - மலை.
7. வெதும்பிய -
வெப்பமுற்று. சாந்து -
சந்தனம்.)

915 வேறு

ஆதியம் பரமன் தாளே
அடைதரு புனிதன்
தொல்லை
வேதியர் தலைவ னான
வி£¤ஞ்சன்மெய்
யுணர்விற் பூத்த
காதலன் புலன்க ளாய
பகைஞரைக் கடந்த காட்சி
மாதவ முனிவர்க் கீசன்
வசிட்டனென் றுரைக்கும்

வள்ளல். 8

916 அன்னவன் மரபின்
வந்தோன் அறிஞர்க்கும்
அறிஞன் மேலாய்
மன்னிய நெறிக்கண்
நின்றோன் மாகதன்
என்னும் பேரோன்
உன்னரு மறைகள் யாவும்
உணர்ந்தவன் உயர்ந்த வீடு
தன்னையிங் கடைவன்
என்னாத் தவந்தனை
இயற்ற லுற்றான். 9

917 ஆயவன் தன்பால்
இன்றோர் அசுரகன்
னிகையைத் தேற்றி
ஏயினை என்னின்
அன்னாள் எய்தியே
அவன்ற னோடு

மேயின காலை ஆங்கோர்
வேழமா முகத்தன் உங்கள்
நாயகன் ஆகத் தோன்றி
நற்றவம் புரிவன் அன்றே. 10
918 நற்றவம் புரிதல் காணா
நண்ணலர் புரங்கள்
மூன்றுஞ்
செற்றவன் மேவி மேலாஞ்
செல்வமுந் திறலும் நல்க
மற்றவன் வானோர்
தொல்சீர் மாற்றியெவ்
வுலகும் ஆளுங்
கொற்றவ னாவன் என்று
கூறினான் குரவ
னானோன். 11
919 அவ்வுரை கேட்ட லோடும்
அடித்துணை இறைஞ்சி
ஈது

செவ்விது செவ்வி
தெந்தாய் செய்வல்நீ
பணித்த தென்ன
எவ்வமில் புகரும் அற்றே
இயற்றிய சென்மோ என்ன
மைவரை அனைய மேனி
மன்னவன் கடிது 12
மீண்டான்.
மீண்டுதன் னிருக்கை
எய்தி விபுதையென்
றொருத்தி அன்னாள்
காண்டகும் எழிலின் மிக்க
கன்னிதன் குலத்தில்
வந்தாள்
பூண்டகு நாணி னோடும்
பொருந்தினள் அவளை
எய்தி
ஈண்டொரு மொழிகேட்

டன்னாய் என்னிடர் சீர்த்தி
யென்றான். 13

921 மன்னவர் மன்னன் கூறும்
மாற்றமங் கதனைக்
கேளாக்
கன்னிகை யாகி நிற் காமரு
வல்லி அன்னாள்
நின்னடித் தொண்டு
செய்யும் நிருதர்தங்
குலத்து வந்தேன்
என்னுனக் கியற்றுஞ்
செய்கை இசைந்தன
இசைத்தி என்றாள். 14

922 உரையென லோடு
மன்னன் உன்குலத் தோரை
விண்ணோர்
பொருதுவென் கண்டு
மீண்டு போனதை அறிதி

அன்றே
மருவருங் குழலாய்
போரில் வானவர் தம்மை
வெல்ல
ஒருவரும் இல்லை
நின்னால் உற்றிட
வேண்டுங் கண்டாய். 15
923 ஆங்கதற் கேதுக் கேட்டி
அம்பொன்மால் வரைத்தெ
னாது
பாங்கரில் அரிய நோன்பு
பயிலுமா கதன்பாற்
சென்று
நீங்கல்செல் லாது
பன்னாள் நினைவறிந்
தொழுகிக் காலந்
தீங்கற நாடி அன்னான்
செய்தவஞ் சிதைத்துச்

சேர்தி. 16
9243 சேருதி யென்னின்
அங்கோர் சிறுவன்நின்
இடத்தில் தோன்றிப்
பாருல கனைத்தும்
மேலாம் பதங்களும்
வலிதிற் கொண்டு
வீரரில் வீர னாகி
வெம்பகை வீட்டி எங்கள்
ஆரஞர் துடைக்கும்
அன்னாய் அன்னவா
றமைதி என்றான். 17
(8. விரிஞ்சன் : காதலன் -
சனகாதியோர்.
9. அன்னவன் -
அவ்வசிட்டன்.
மாகதன் - ஒரு முனிவன்.
12. புகர் - சுக்கிரன். 13.

விபுதை - இவள் ஒரு அசுர
கன்னிகை.
15. வென் - முதுகு. 16.
ஏது - காரணம்.)

925 வேந்தன் துரையைக்
கேட்ட விபுதையம்
முனிவன் தன்பால்
போந்துன தெண்ண
முற்றப் புதல்வனை
அளித்து மீள்வல்
ஏந்தல்நீ இரங்கல் என்றே
ஏகினள் இறைவன்
வானோர்
மாய்ந்தனர் இனியென்
றுன்னி மகிழ்ச்சியோ
டிருந்தான் அங்கண். 18

926 ஏகிய அசுர கன்னி ஏமமால்
வரையின் சார்போய்

மாகதன் பாற்சென் றன்னான்
மாதவத் திறத்தை நோக்கி
ஆகொடி திவனே அல்லா
தாரிது புரியும் நீரார்
மோகமிங் கிவனை யாக்கி
முயங்குவ தெவ்வா
றென்றாள். 19

927 நேமிகள் அனைத்தும் ஆர
நிவந்தெழும் வடவை
தன்னை
மாமுகில் மாற்ற அற்றோ
மாற்றவே வல்ல தென்னில்
காமவேள் எடுத்த செய்ய
கணையெலாம் ஒருங்கு
சென்றித்
தோமில்சீர் முனியை
வாட்டித் துறவையும்
மாற்றும் என்றாள். 20

928 வானுயர் தவத்தின் நிற்கும்
மாகதன் யானே யல்ல
மேனகை வரினும்
நோக்கான் விண்ணவர்
பகைஞர் தங்கள்
கோனி· துணரான் போலுங்
குறுகிநீ புணர்தி என்றால்
நானதற் சிசைந்த வாறும்
நன்றென நகைத்து நின்றாள். 21
929 போந்தனென் மீண்டும்
என்னிற் போற்றலர்க்
குடைந்து சோரும்
வேந்தனென் னுற்றாய்
என்று மீளவும் விடுப்பன்
அம்மா
ஏய்ந்தநே யத்தி லென்பால்
எய்திமற் றிவனே எற்குக்
காந்தனே யாக நோற்றுக்

காலமும் பார்ப்பன்
என்றாள். 22
930 என்றிவை உன்னி
உற்றோர்க் கினிதருள்
புரியும் வெள¢ளிக்
குன்றுறை பெருமான்
செய்ய குரைகழல் கருத்துட்
கொண்டு
வன்றிறல் நோன்பின் மிக்க
மாகத முனிவன் நேரா
நின்றருந் தவத்தை யாற்ற
நெடும்பகல கழிந்த தன்றே. 23
931 மாதுசெய் தவத்தி னாலும்
வரன்முறை வழாத ஊழின்
ஏதுவி னாலும் அங்கண்
இருங்களிற் றொருத்தல்
ஒன்று
காதலம் பிடியி னோடு

கலந்துடன் புணரக் காணுஉ
ஆதரம் பெருகப் பல்கால்
நோக்கினன் அருந்த
வத்தோன். 24

932 மறந்தனன் மனுவின்
செய்கை மனப்படு
பொருளை வாளா
துறந்தனன் காமம் என்னுஞ்
சூழவலைப் பட்டுச்
சோர்வுற்
றிறந்தனன் போல மாழ்கி
இன்னுயிர் சுமந்தான் இன்று
பிறந்தனன் இனைய
கூட்டம் பெற்றிடு வேனேல்
என்றான். 25

933 என்றிது புகன்று முன்செய்
தவக்குறைக் கிரங்கி என்றும்

நின்றது பழியே யேனும்
நீடுமேற் காமச் சூர்நோய்
தின்றுயிர் செகுக்கும்
அந்தோ செய்வதிங்
கெவனோ என்னா
வென்றிகொள் முனிவன்
தானும் மனத்தொடு
வினவல் உற்றான். 26

(18. மீள்வல் -
திரும்புவேன். 20. நேமிகள்
- கடல்கள்.
21. மேனகை - தேவ
மாதரில் ஒருத்தி.
22. காந்தன் - காதலன். 24.
களிறு ஒருத்தல் - ஆண்
யானை.
பிடி - பெண் யானை.
25. மனுவின் செய்கை -

மந்திரம் செபிக்கும்
தொழில்.
26. (சூர் - அச்சம்.)

934 தீவிடந் தலைக்கொண்
டாங்கே தெறுதரு காமச்
செந்தீ
ஒய்வது சிறிதும் இன்றி
உள்ளுயிர் அலைக்கும்
வேலை
யாவதென் றாக்கின்
இன்னும் அருந்தவங் கூடும்
ஆவி
போவதிற் பயனியா
தென்னாப் புணர்ச்சிமேற்
புந்தி கொண்டான். 27

935 பேவதற் கெண்ணுப்
போதில் பொருவில்சீர்

அசுரர்க் கெல்லாங்
காவலின் ஏவல் போற்றும்
கன்னிகை முனிவன் காமத்
தோய்வதும் பிறவும்
எல்லாம் ஒருங்குடன்
நோக்கி எண்ணம்
யாவதும் முடிந்த தென்னா
எல்லையில் மகிழ்ச்சி
பெற்றாள். 28

936 ஈங்கிது கால மாகும்
இடனுமாம் இதற்கு வேறு
தீங்கிலை இனைய கூட்டஞ்
செய்தவஞ் செய்த தென்னா
வாங்கிய நுதலி னாளும்
வல்விரைந் தெழுந்து
தூயோன்
பாங்கரின் அணுகிப்
பொற்றாள் பணிந்தனள்

பரிவு கூர.
29

937 மின்னிடை பணிந்து நிற்ப
மெய்யுறுப் பனைத்தும்
நோக்கிப்
பின்னரும் மால்மீக்
கொள்ளப் பித்தரின்
மயங்கா நின்று
கன்னியும் என்னை வெ·குங்
காந்தரு வத்தி னாளும்
இன்னவ ளாயின் அன்றோ
என்னுயிர் உய்யும் என்னா.
30

938 கருத்திடை உன்னி யார்நீ
கன்னியோ என்ன லோடும்
அருத்திகொள் முனியை
நோக்கி அன்னதாம் என்ன
நம்பால்

வரத்தகுங் கருமம்
என்கொல் வல்லையில்
இயம்பு கென்றான்
விரத்தரில் தலைவ னாகி
வீடுபெற் றுய்ய நோற்றான். 31
939 முருந்தெனும் முறுவ
லாளும் முனிவநீ கணவ
னாக
இருந்தவம் புரிந்தேன்
பன்னாள் இன்றது முடிவ
தாகப்
பொருந்தினன் ஈண்டு
நின்னைப் புல்லிய வந்தேன்
என்ன
வருந்துறா தமுதம் பெற்ற
மாக்கள்போல் மகிழ்ச்சி
உற்றான். 32

940 என்பெருந் தவமும்
பன்னாள் என்பொருட் டாக
நோற்ற
நின்பெருந் தவமும்
அன்றோ நின்னுடன்
என்னை ஈண்டே
அன்புறக் கூட்டிற் றம்மா
அடுகளி றென்னப் புல்லி
இன்புற வேண்டும் நீயும் 33
இரும்பிடி யாதி என்ன.
941 மெல்லியல் தானும்
அங்கோர் வெம்பிடி யாகித்
தோன்றி
எல்லையில் காதல் பின்னும்
ஈதலும் முனிவன் தானும்
மல்லலங் களிற தாகி
வானுயர் புழைக்கை நீட்டிப்
புல்லினன் ஊற்றந் தானே

புணர்ச்சியிற் சிறந்த தன்றே. 34
942 நையுறும் உள்ளம் ஆதி
நான்மையும் பொறியில்
நண்ணி
ஐயுறு புலனோர் ஐந்தும்
ஆவியின் ஒருங்க
அன்னாள்
மெய்யுறு புணர்ச்சித் தாய
வேட்கையின் மேவ லுற்லுச்
செய்யுறு காம முற்றித்
தீர்ந்திடு காலை தன்னில். 35
(29. கூட்டம் - சேர்க்கை.
பரிவு கூர - அன்புமிக.
32. முருந்து - மயிலிறகின்
அடி.
35. உள்ளம் ஆதீ நான்மை -
மனம் முதலிய அந்தக்
கரணங்கள் நான்கும்.)

943 அயன்முதல் தலைவர்
வானத் தமர்தரு புலவர்
ஆற்றுஞ்
செயன்முறைக் கடன்கள்
யாவுஞ் சிந்தினன்
சிதைக்கும் வண்ணம்
வயமுகத் தடவு கொண்ட
வயிர்த்திடு மருப்பின்
நால்வாய்க்
கயமுகத் தவுணன் ஆங்கே
கதுமென உதயஞ்
செய்தான். 36
944 பற்றிய பலகை ஒள¢வாள்
விதிர்த்தனன் பரவை
ஞாலஞ்
சுற்றினன் வரைகள் யாவுந்
துகள்படத் துணைத்தாள் உந்தி

எற்றினன் உருமே றஞ்ச
இரட்டினன் உலக
மெல்லாஞ்
செற்றிடுங் கடுவ தென்னத் 37
திரிந்தனன் சீற்றம் மிக்கான்.
அன்னதோர் பிடியு ரோமம்
அளப்பில அவற்றில்
ஆங்கே
மின்னிலங் கெயிற்றுப்
பேழ்வாய் விளங்கெழில்
செக்கர் வாய்ந்த
சென்னியங் குடுமி வீரர்
தெழித்தெழீஇச் செங்கை
தன்னில்
துன்னிரும் படைக ளோடுந்
தோன்றினர் தொகையில்
ஆன்றோர்.
38

946 இன்னவ ரோடு கூடி
இபமுகத் தவுணன் ஆர்ப்பத்
தன்னையும் பயந்தோன்
தானுந் தளர்ந்தனர் இரியல்
போகி
முன்னுறும் உருவங்
கொள்ள முனிவரன்
உணர்வு தோன்ற
உன்னிநின் றிரங்கி யேங்கி
ஊழ்முறை நினைந்து
நைந்தான். 39

947 மாயமாங் காமம் என்னும்
வலையிடைப் பட்டு நீங்குந்
தூயவன் முன்னம் நின்ற
தோகையைச் சுளித்து
நோக்கி
நீயெவர் குலத்தில் வந்தாய்
நினைந்ததென் கழறு

கென்னச்
சேயிழை மரபும் வந்த
செய்கையும் உணர்த்தி
நின்றாள். 40

948 வரன்முறை ணர்த லோடும்
மாகத முனிவன் யானே
தரணியில் உயிர்க ளான
சராசரந் தனக்கு மேலாஞ்
சுரகுலந் தனக்கும் இன்றே
துன்புறு வித்தேன் என்னா
எரியுறு தளிர்போல் வாடி
இன்னலங் கடலுட்
பட்டான். 41

949 சிலபொழு திரங்கித் தேறிச்
செயிழை மடந்தை
நுங்கோன்
மெலிவுநின் னெண்ணந்
தோனும் வீடுபெற் றுய்ய

யான்முன்
பலபகல் புரிந்த நோன்பும்
பாருல கனைத்தும்
வானோர்
உலகமு முடிந்த வேநீ
ஒல்லையிற் போதி
என்றான். 42
போதிநீ என்ன லோடும்
பொன்னடி வணங்கிச்
சென்று
தாதுலாந் தெரிய லாகத்
தயித்தியர்க் கிறைபால்
எய்தி
ஈதெலாம் உரைத்த
லோடும் எல்லையின்
மகிழ்ச்சி யாகிக்
காதல்கூர் தபனற் காணுங்
காலையங் கமலம்

போன்றான். 
(36. வய - பெருமை.
தடவு - வளைவு.
வயிர்த்திடும் - வைரம்
பொருந்திய. நால்வாய் -
தொங்குகின்ற வாய்.
37. பலகை - கேடகம்.
39. இபமுகம் -
யானைமுகம்.
40. தூயவன் - இங்கு
மாகத முனிவன். சுளித்து -
கோபித்து.
சேயிழை - இங்கு விபுதை.
41. சராசரம் - சரம் +
அசரம். சரம் - அசையும்
பொருள்; இது இயங்கியற்
பொருள் (இயங்குதிணை)
அல்லது சங்கமம் எனவும்

பெயர்பெறும்.
அசரம் -
அசையாப்பொருள் இது
நிலையியற் பொருள்
(நிலைத்திணை)
அல்லது தாவரம் எனவும்
பெயர்பெறும்.
43. தாது - மகரந்தம்.
தயிர்த்தியர் - அசுரர்.
தபனன் - சூரியன்.
காணும் காலை -
உதயகாலம்;
கண்டபொழுதுமாம்.)
951 தாங்கரும் உவகை
யோடுந் தானவர்க் கரசன்
நண்ண
ஈங்குறு முனிவன்
முன்போல் இனிதுநோன்

பியற்றப் போனான்
ஆங்கவண் உதித்த
மைந்தர் அனைவரும்
முதல்வன் தன்னோ
டோங்கலின் குலங்கள்
மேரு வுடன்நடந் தென்னச்
சென்றார். 44

952 சீற்றங்கெகள் தறுகண்
நாகம் ஒருவழித் திரண்ட
தென்னக்
கூற்றம்பல் லுருவு
கொண்டு குலாயகொட்
பென்ன ஊழிக்
காற்றெங்கும் பரவிற்
றென்னக் கடலிடைப்
பிறந்த நஞ்சம்
ஊற்றங்கொண் டுலாய

தென்ன உலகெலாந் திரிதந் 45
துற்றார்.

953 மலையிஆ¨பி பொடிப்பர்
ஏனை மண்ணினை
மறிப்பர் வாரி
அலையினைக் குடிப்பர்
கையால் ஆருயிர்த்
தொகையை அள்ளி
உலையினைப் பொருவு
பேழ்வாய் ஒச்சுவா₵ பரிதி
யோடு
நிலையினைத் தடுப்பர்
சேடன் நெறிதரப்
பெயர்வர் மாதோ. 46

954 தக்கதோர் அவுண ரோடுந்
தந்திமா முகத்து வீரன்
திக்கெலாம் உலவி
யெல்லாத் தேயமும்

ஒருங்கே சென்று
மக்களே யாதி யான
மன்னுயிர் வாரி நுங்கித்
தொக்கதோர் செந்நீர்
மாந்தித் துண்ணெனத்
திரியும் அன்றே. 47
955 அத்திறம் வைகல் தோறும்
அவுணரும் இறையும்
ஏகிக்
கைத்துறும் உயிர்கள்
யாவுங் கவர்ந்தனர்
மிரைந்தா ராகப்
பொய்த்தவர் வெறுக்கை
என்னப் பொயின
உயிர்கள் சால
எய்த்தனர் முனிவர் தேவர்
இறந்தது மறையின் நீதி. 48

956 முகரிமை அடைந்த
வன்தோன் முகத்தவன்
அவுண ரோடும்
அகலிட மிசையே இவ்வா
றமர்தலும் அனைய
தன்மை
தகுவர்கள் முதல்வன்
ஓர்ந்து தமதுதொல் குரவ
னான
புகரினை விடுப்ப
அன்னான் போந்திவை
புகலல் உற்றான். 49

957 வேறு
ஒள¢ளி தாகிய உங்குலத்
துற்றுள
மள்ளர் யார்க்குமொர்
வான்குரு வாயினேன்

தெள¢ளு பன்மறைத்
திட்பமுந் தேர்ந்துளேன்
வெள¢ளி என்பதொர் 50
மேதகு பேரினேன்.

958 உங்கு லத்துக் கொருமுத
லாகிய
சிங்க மன்ன திறலினன்
உய்த்திட
இங்கு நின்புடை
எய்தினன் மேல்நெறி
தங்கு நன்னயஞ் சாற்றுதற்
கேயென்றான். 51

959 குரவ னாகிக் குறுகிய
சல்லியன்
பரிவொ டீது பகர்தலும்
ஆங்கவன்
திருவ டித்துணை சென்று
வணங்கியே

கரிமு கத்தன் கழறுதல்
மேயினான். 52

(45. தறுகண் - அஞ்சாமை.
கொட்புஎன்ன -
உலவினாற்போல்.
46. சேடன் - ஆதி சேடன்.
47. நுங்கி - விழுங்கி.
செந்நீர் - இரத்தம்.
48. பொய்த்தவர் -
பொய்யுரைப்போர்.
49. முகரிமை - முதன்மை.
தோல்முகத்தவன் -
கயமுகாசுரன்.
50. மள்ளர் - வீரர். 52.
சல்லியன் - சுக்கிரன்.)

இறுவ தின்றிய எங்குலத்
தோர்க்கெலாம்

அறிவ நீஅரு ளால்அடி
யேற்கிவண்
உறுதி கூறுகின் றாய்இதன்
ஊங்கினிப்
பெறுவ தொன்றுள
தேயெனப் பேசினான். 53

961 அந்த வேலை அவுணர்கள்
யாவருஞ்
சிந்தைமேல் கொண்ட
தீதினை நீத்திடா
எந்தை யார்தங் குரவர்
இவரெனா
வந்து பார்க்கவன்
தாளில்வ ணங்கினார். 54

962 சீத வான்முகிற்
கோள்எனுஞ்
செவ்வியோன்

ஆதி தன்னரு ளால்அவு
ணர்க்கிறை
போத கன்முகம் நோக்கிப்
பொருவிலா
ஓதி மாண்பின் 55
இவையுரைக் கின்றனன்.

963 வேறு
மீயுயர் தவத்தை ஆற்றாய்
விமலனை உணராய்
ஒல்லார்
மாயமுந் திறலுஞ் சீரும்
வன்மையுஞ் சிறிதுந்
தேராய்
ஏயவிவ் வுடலம் நில்லா
தென்பதுங் கருதாய் வாளா
போயின பன்னாள் என்நீ
புரிந்தனை புந்தி இல்லாய்.
56

964 முப்பகை கடந்து மற்றை
முரட்பகை முடித்திட்
டைம்பான்
மெய்ப்பகை கடந்து
நோற்று விழுத்தகும்
ஆற்றல் பெற்றுத்
துப்பகை தொண்டைச்
செவ்வாய்ச் சூரொடு
புணரும் வானாட்
டப்பகை கடந்து தொல்சீர்
அடைந்திலை போலும்
அன்றே. 57

965 இம்மையில் இன்பந்
தன்னைப் புகழொடும்
இழத்தி மேலை
அம்மையில் இன்பந்
தானும் அகன்றஆ

போலும் அன்றே
உம்மையும் இன்பம் என்ப
துற்றிலை
என்னிறி¢பின்னை
எம்மையில் இன்பந்
துய்க்க இசைந்துநீ
இருக்கின் றாயால். 58
966 ஆக்கமுந் திறலுஞ் சீரும்
ஆயுவும் நலனும் மேலாம்
ஊக்கமும் வீடும் எல்லாம்
தவத்தின துற்றம அன்றோ
நோக்குறும் இந்நாள்
காறும் நோற்கலா தினை
வெல்லாம்
போக்குவ தென்னை
கொல்லோ புகலுதி
இகலும் வேலோய். 59
967 ஆற்றிடு தருமம் விஞ்சை

அரும்பெறல் மகவும்
சீர்த்தி
ஏற்றிடு கொற்றம் ஆற்றல்
இருநிதி பெருமை இன்பம்
நோற்றிடு விரதஞ் சீலம்
நூவலரும் போதம் யாவுங்
கூற்றுவன் கூவும் ஞான்று
குறித்திடிற் கூடு மோதான். 60

(53. இறுவது - அழிவது.
அறிவ - ஞானாசிரியனே.
54. பார்க்கவன் - சுக்கிரன்.
55. முகிற்கோள் எனும்
செவ்வியோன் - சுக்கிரன்.
57. முப்பகை - காமம்,
வெகுளி, மயக்கம்
என்னும் முப்பகை.
முரட்பகை - வலியபகை.

ஐம்பால் மெய்ப்பகை -
ஐம்புலனாகிய உட்கபகை.
58. அம்மை -
அவ்வுலகம். உம்மை -
நடுவணதான இக்காலம்.
எம்மை - எந்தச்சென்மம்.
60. விஞ்சை - வித்தை.
மகவு - புத்திரப்பேறு. சீலம்
- ஒழுக்கம்.
போதம் - நல்லுணர்வு.
குறித்திடில் - கருதினால்.)

968 காலனா கியதோர்
சேர்ப்பன் காலமாம்
வலையை வீசி
ஞாலமாந் தடத்தில்
வைகும் நல்லுயிர் மீன்கள்
வாரி
ஏலவே ஈர்த்து நின்றான்

இறுதியாங் கரைசேர்
காலை
மேலவன் கையுட் பட்டு
மெலிவொடு வீடும்
அன்றே. 61

969 சீரிர துடலம் என்கை
தெரிந்திலை நிலைத்தல்
செல்லா
தாருயிர் வகையும் என்ப
தறிந்திலை ஆயுட்
பன்னாட்
சாருதல் வேண்டு
மென்னுந் தகைமையும்
நினைத்தி அல்லை
பாருயிர் இறப்ப நுங்கி
இருப்பதோ பரிசு மாதோ. 62

970 மந்திரம் இல்லை மாயம்

இல்லையோர் வரமும்
இல்லை
தந்திரம் இல்லை மேலோர்
தருகின்ற படையொன்
றில்லை
அந்தர வமர ரெல்லாம்
அனிகமாய்ச் சூழ
நின்மேல்
இந்திரன் போருவான்
செல்லின் யாதுநீ செய்தி
மாதோ. 63

971 சிறியதோர் பயனைத்
தூக்கித் தீயவர் செய்யுஞ்
சூழ்ச்சி
அறிகில வாகி வீழவுற்
றகப்படு மாவும் மீனும்
பறவையும் என்ன எல்லார்
புணர்ப்பினிற் படுதி

இன்னே
விறலொடு வலியுஞ் சீரும்
மேன்மையும் இன்றி
உற்றாய். 64

972 ஆதலின் எவர்க்கும்
மேலாம் அரன்றனை
உன்னி ஆற்ற
மாதவம் புரிதி அன்னான்
வரம்பல கேட்ட வெல்லாந்
தீதற உதவும் பின்னர்த்
தேவர்உன் ஏவல்
செய்வார்
மேதகும் உலகுக்
கெல்லாம் வேந்தனாய்
இருத்தி என்றான். 65

973 சொன்னவை கேட்ட
லோடுந் தொழுதகை
அவுணர் தோன்றல்

முன்னிவை யாவ ரேனும்
மொழிந்தனர் இல்லை
யானும்
இன்னவை புரிதல்
தேற்றேன் இனித்தவம்
இயற்று கின்றேன்
அன்னவை புரியுந் தன்மை
அருள்செயல் வேண்டும்
என்றான்.
66

(61. காலன் - எமன்.
சேர்ப்பன் -
நெய்தனிலத்தவனான
செம்படவன்.
மேல் - பின்னர். அவன் -
அந்த எமன். வீடும் -
அழியும்.
63. அனிகம் - சேனை.

64. வீழவுற்று அகப்படும் - வலையிலும்,
தூண்டிலிலும்,
கண்ணியிலும்
முறையே அகப்பட்டுக்
கொள்ளுகின்ற. விறல் -
வெற்றி. )

974 வேறு
ஐயவினைசெய்
பொறிகளெலாம்
அரங்கமெனக்
கறங்கும்அறி வடங்கு
கின்ற
மெய்வினைய மந்திரமுந்
தந்திரமும்
அங்கமுறு விதியி
னோடு

கைவினையும்
உட்கோளும் புறங்காப்பும்
விரதஞ்செய் கடனும்
ஏனைச்
செய்வினையும்
உணர்வித்து
மேருவின்பால்
தவம்புரியச் செல்லு 67
கென்றான்.
ஏவுதலுங் கயமுகத்தோன்
அவுணரொடும்
புகரடியின் இறைஞ்சி
அங்கண்
மேவுவன்யான்
எனவுரையா
விடைகொண்டு
நோற்றிடுவான்
விரைவின் ஏகக்

காவதமங் கோரிரண்டு
கடப்பளவுந்
தானின்று கண்ணின்
நோக்கிப்
போவனினி எனமகிழ்ந்து
மீண்டுபோய்
அவுணர்பதி புகுந்தான்
அன்றே. 68

976 அக்காலத் தெதிர்வந்த
இறைவனுடன்
புகுந்தவெலாம்
அறைய அன்னான்
இக்காலந் தானன்றோ
அருள்செய்தீர்
எனவியம்பி ஏத்தி
அன்பால்
முக்கால்வந் தனைசெய்து
விடுத்திடப்போய்த்

தன்பதத்தின் முன்ன
மேபோல்
மிக்கானும் வீற்றிருந்தான்
கடவுளரும்
புரந்தரனும் விழுமங்
கொள்ள. 69

977 மாண்டகுமவ் வலியகலன்
மருப்பதனை
எதிர்ந்துதொல்லை
வைப்பின் ஈங்கு
மீண்டியதிண் காழிரும்பின்
எ·கமுதல்
வியன்படைகள்
இயற்சை என்னக்
காண்டகைய தங்குரவ
னானபுகர்
உரையதனைக்
கருத்துட் சேர்த்தி

ஆண்டகைசேர்
இபமுகத்தோன்
அவுணருடன்
தவம்புரிவான் அகலல்
உற்றான். 70

978 அங்கண்முகில்
படிந்தறியா மேருவினுக்
கொருசார்போய்
அவுணர் வேந்தன்
துங்கமிகு கருவிகளாய்
வேண்டுவன
கொணர்வித்துத் தூநீர்
ஆடிச்
செங்கதிரோன்
தனைநோக்கி ஆற்றுகடன்
முடித்துமுன்னைத்
தீர்வு நேர்ந்து
தங்கள்குர வன்பணித்த

பெற்றியினால்
மிக்கதவந் தன்னைச்
செய்வான். 71

979 பொறியிலுறு புலனவித்து
நவைநீக்கிக்
கரணவியல் போக்கி
ஆசான்
குறிவழியே தலைநின்று
மூலவெழுத்
துடனைந்துங்
கொளுவி எண்ணி
அறிவுதனில் அறிவாகி
உயிர்க்குயிராய்ப்
பரம்பொருளாய்
அமல மாகிச்
செறிதருகண் ணுதற்கடவுள்
அடிபோற்றி

அவனுருவைச் சிந்தை 72
செய்தான்.
(68. காவதம் - காதம்; ஓர்
அளவு. 69. விழுமம் -
துன்ப
70. அகலம் - மார்பு.
கயமுகன் தவத்திற்குச்
செல்கை, அவன்
தந்தங்களில்
பட்டுத் திரும்பும் எஃகம்
முதலிய ஆயுதத்தின்
மீட்சியை ஒத்து என்க.
71. செங்கதிரோன்தனை
நோக்கி ஆற்றுகடன் -
சூரிய நமஸ்காரம்.
72. முதல் இரண்டடிகள்
இறைவனைத் தியானிக்க
வேண்டும் முறையினை

விளக்குகின்றன. கரணம் -
அந்தக் கரணம்.
மூவவெழுத்து -
பிரணவம்.
ஐந்து - பட்சாட்சரம்.
கொளுவி - கலந்து.)

980 வேறு
ஆயிரம் ஆண்டுபுல் லடகு
மேயினான்
ஆயிர மாண்டுசில்
புனல்அ ருந்தினான்
ஆயிர மாண்டள வனிலம்
நுங்கினான்
மாயிரும் புவியுயிர்
மடுக்கும் வாயினான். 73
981 காலமு வாயிரங் கழிந்த
பின்முறை

மாலுறு மருத்தெனும்
மாவைத் தூண்டியே
மூலவெங் கனலினை
முடுக்கி மூட்டுறா
மேலுறும் அமிர்தினை 74
மிசைதல் மேயினான்.

982 கண்டனர் அதுசுரர்
கவலுஞ் சிந்தையர்
திண்டிறல் அவுணன்இச்
செய்கை முற்றுமேல்
அண்டமும் புவனமும்
அலைக்கு மேயெனாக்
கொண்டனர் தம்பதி
அறியக் கூறினார். 75

983 கூறிய செயலினைத்
தேர்ந்து கொற்றவன்
ஆறிய வெகுட்சியன்
அயர்ந்து சோர்வுறா

வீறியல் வாய்மையும்
விறலும் ஆண்மையும்
மாறிய வோவெனா
மறுக்கம் எய்தினான். 76

984 புலர்ந்தனன் இரங்கினன்
பொருமல் எய்தினான்
அலந்தனன் உயிர்த்தனன்
அச்சங் கொண்டனன்
உலந்தனன் போன்றனன்
ஒடுங்கித் தன்னுளங்
குலைந்தனன்
அவன்செயல் கூறற்
பாலதோ. 77

985 ஈசனை யன்றுகா றெதிரக்
கண்டிலன்
காய்சினம் அகன்றிடு
கயமு கத்தினான்

தேசிகன் அருளினால்
தீயின் கண்ணுறீஇ
மாசறு தவஞ்செய மனத்து 78
முன்னினான்.

986 சுற்றுற நாற்கனல் சூழ
நள்ளிடை
மற்றொரு பேரழ வதிய
அன்னதில்
கொற்றவெங் கயமுகக்
குரிசில் தாள்நிறீஇ
நற்றவம் இயற்றினான்
நாதற் போற்றியே. 79

(73. அடகு - இலைகள்.
அனிலம் - காற்று.
74. மருத்தெனும் மாவை -
பிராண வாயு என்னும்
குதிரையை.
மூல வெங்கனல் -

மூலாக்கினி. மூட்டுறா -
(பிரம நாடியில்)
மூட்டச்செய்து.
75. தம்பதி - தமது அரசன்;
இந்திரன்.
76. வெகுட்சி - கோபம்.
77. புலந்தனன் - வருந்தி.
பொருமல் - அழுதல்.
அலந்தனன் - துன்பமுற்று.
உலந்தனன் - வாடி.
78. தேசிகன் அருளால் -
(தவத்திற்கு இரங்கி
இறைவன் வராவிடில்
தீயினின்று தவம்செய்
என்று) சுக்கிரன்
அருளியபடி.
79. நள்ளிடை -
நடுவிடம்.)

987 மேயின கொழும்புகை
மிசைக்கொண் டாலெனத்
தீயழல் நடுவுறச் செந்நின்
றையிரண்
டாயிரம் ஆண்டையின்
அவதி ஆருயிர்
நோயுற இபமுகன்
நோற்றல் ஓம்பினான்.
80

988 புழைக்கையின்
முகத்தினன் புனித மார்தரு
தழற்சிகை மீக்கொளத்
தனது தாள்நிறீஇ
விழுத்தக நோற்றலை
வியந்து நோக்குறீஇ
அழற்பெருங் கடவுளும்
அருள்செய் தானரோ. 81

989 அன்னதோர் அமையில்
அவுணன் மாசுடல்
வன்னியில் உறுத்துகார்
இரும்பின் மாண்டது
பொன்னினும் மணியினும்
பொலிந்து பூத்தது
மின்னிவர் வச்சிர மிடலுஞ்
சான்றதால். 82

990 ஏற்றநந் தொன்மர பியல்வ
ழாமலே
போற்றிய வருமிவன்
பொறையும் மேன்மையும்
நோற்றிடு திட்பமும்
நுவலற் பாலவோ
நூற்றுதும் அலரெனா
அவுணர் தோன்றினார். 83
991 வீசினர் நறுமலர்

வியப்பின் நன்மொழி
பேசினர் புகழ்ந்தனர்
பிறங்கும் ஆர்வத்தால்
ஆசிகள் புகன்றனர் அமரர்
தானையை
ஏசினர் அவர்தம தின்னல் 84
நோக்குவார்.

992 தளப்பெரும் பங்கயத்
தவிசின் மீமிசை
அளப்பருங் குணத்துடன்
அமா¢ந்த நாயகன்
உளப்பட நோக்கினன்
உவந்து பூமுடி
துளக்கினன் அமரர்கள்
துணுக்கம் எய்தினார். 85

993 இன்னணம் அருந்தவம்
இயற்றும் எல்லையில்

பொன்னவிர் சடைமுடிப்
புனித நாயகன்
அன்னது நாடியே அவுண
ருக்கிறை
முன்னுற வந்தனன் மூரி 86
யேற்றின்மேல்.

(80. அவதி - காலம். 81.
புழைக்கை - துதிக்கை.
82. கார் இரும்பின் - காய
இரும்பைப்போல.
மாண்டது -
மாட்சிமையுற்றது. மிடல் -
வலிமை.
83. பொறை - சாந்த
குணம். திட்பம் - திண்மை.
85. நாயகன் - சிவன்;
கயமுகனுமாம்.
86. மூரி - வலிமை;

திமிலுமாம்.)

994 வேறு
வந்து தோன்றலும் மற்றது
நோக்கியத்
தந்தி மாமுகத் தானவன்
நோன்பொரீஇச்
சிந்தை அன்பொடு
சென்னியிற் கைதொழு
தெந்தை தன்னை
இறைஞ்சிநின்
றேத்தினான்.
87

995 போற்று கின்றுழிப்
புங்கவன் இன்றுகா
றாற்று நோன்பில்
அயர்ந்தனை நீயினிப்
பேற்றை வேண்டுவ
பேசினை கொள்கெனத்

தேற்ற மிக்கவன் செப்புதல்
மேயினான். 88

996 வேறு
மாலயன் இந்திரன்
முதல்வ ரம்பிலோர்
மேலுறு தகையினர்
வெய்ய போரிடை
ஏலுவர் என்னினும்
எனக்கு வென்னிட
ஆலமர் கடவுள்நீ அருளல்
வேண்டுமால் 89

997 எற்றுவ வெறிகுவ ஈர்வ
எய்குவ
குற்றுவ முதலிய
குழுக்கொள் வான்படை
முற்றுற வரினும்யான்
முடிவு றாவகை
அற்றமில் பெருமிடல்

அளித்தல் வேண்டுமால். 90

998 மிக்கதோர் அமரரால்
வியப்பின் மானுட
மக்களால் அவுணரால்
மற்றை யோர்களால்
தொக்குறு விலங்கினால்
துஞ்சி டாவகை
இக்கணந் தமியனேற் கீதல்
வேண்டுமால். 91

999 என்னிக ராகிவந்
தொருவன் என்னொடு
முன்னுற வெஞ்சமர்
முயலும் என்னினும்
அன்னவன் படையினும்
அழிவு றாவகை
பொன்னவிர் வேணியாய்
புரிதல் வேண்டுமால்.

92

1000 வரந்தரு கடவுளர் முனிவர்
மற்றையோர்
இருந்திடும் உலகெலாம்
என்ன தாணையில்
திரிந்திடும் ஆழியுங்
கோலுஞ் சென்றிடப்
புரிந்திடும் அரசியல்
புரிதல் வேண்டுமால். 93

1001 அன்றியும் ஒன்றுள
தடியன் சூழ்ச்சியால்
பொன்றினும் பிறவியுட்
புகாமை வேண்டுமால்
என்றலு நோற்றவர்க்
கேதும் ஈபவன்
நன்றவை பெறுகென நல்கி
யேகினான். 94

1002 பெற்றனன் படைகளும்

பிறவுந் தன்புறஞ்
சுற்றிடு கிளையெலாந்
தொடர்ந்து சூழ்தர
உற்றனன் காண்டகும்
உம்பர் உங்குவன்
மற்றொரு கயமுகன் என்று
மாழ்கினார். 95

1003 காழுறு பெருந்தரு நாறு
காசினி
வீழுறு தூரொடு மெலிந்து
நின்றன
ஊழுறு பருவம்வந் துற்ற
காலையில்
சூழுறு தொன்னிலை
என்னத் தோன்றினான். 96

(89. ஆலமர் கடவுள் -
கல்லால் நிழலில் அமரும்

கடவுள்; தக்ஷிணாமூர்த்தி.
93. ஆழி - ஆக்கினா
சக்கரம். கோல் -
செங்கோல்.
94. சூழ்ச்சி - பகைவர்
வஞ்சனை.
95. தவம் செய்யு முன்
இரும்பென விளங்கிய
உடலம் தவம்செய்த
பின் பொன்னென
விளங்கியதால்
கயமுகனை,
“மற்றொரு கயமுகன்”
என்றார். 96. பெருந்தரு -
ஆலமரம்.
நாறு - நாறுகள். தூர் - சிறு
வேர்களான விழுதுகள்.
ஊழுறு பருவம் -

நற்பருவம். கயமுகன்
பிற்காலத்தில் தவப்
பெருமையால் சேனை
வன்மை, ஆயுத வன்மை
முதலியவற்றுடன்
விளங்கினான் என்பது
இச்செய்யுளின்
உட்கருத்து.)

1004 அற்புதம் எய்தினன்
அலைகொள் வாரியில்
புற்புத மாமெனப் புளகம்
பூத்துளான்
சொற்பகர் வரியதோர்
மதர்ப்பின் சும்மையான்
சிற்பரன் கருணையில்
திளைத்தல் மேயினான். 97

1005 அன்னது தேர்வுறீஇ
அவுணர் தொல்குல

மன்னனும் வெள¢ளியும்
மதங்க மாமுகன்
தன்னைவந் தெய்தியே
சயமுண் டாகெனப்
பன்னரும் ஆசிகள்
பகர்ந்து மேயினார். 98

1006 தண்ணளி யில்லதோர்
தந்தி மாமுகன்
அண்ணலங் கடகளிற்
றமரர் கோனையும்
விண்ணவர் பிறரையும்
வென்று மீண்டுபின்
மண்ணுல கதனிடை
வல்லை எய்தினான். 99

1007 வேறு
புவனி தன்னிடைப்
போந்துபின், அவுணர்

கம்மிய அறிஞனை,
நுவலும் அன்பொடு
நோக்குறா, உவகை
யால்இவை
யுரைசெய்வான். 100

1008 நாவ லந்தரு
நண்ணுமத்,
தீவின் மேதகு
தென்றிசைப்,
பூவி லோர்நகர்
புரிதியால்,
மேவ வென்று
விளம்பவே. 101

1009 பூவின் மேல்வரு
புங்கவத்,
தேவு நாணுறு
செய்கையில்,
காவன் மாநகர்

கண்டதிற்,
கோவி லொன்று
குயிற்றினான்.
102

1010 வேறு
வெங்கண் மேதகு
வேழமு கத்தனைத்
தங்கள் தொல்பகை
தாங்குவ தாமெனச்
சிங்க மாற்றுந்
திருமணிப் பீடமொன்
றங்கவன் வைக
ஆற்றினன் அவ்விடை. 103
1011 இனைத்தி யாவும்
இமைப்பினில்
கம்மியன்
நினைப்பி னில்செய்
நிலைமையை

நோக்கியே
சினத்தின் நீங்கிய
செய்தவத் தேசிகன்
மனத்தி னூடு
மகிழ்ச்சியின்
மேயினான். 104

1012 காமர் தங்கிய
காப்பியன் அந்நகர்
தூம தங்கெழு
தோல்முகற் காதலான்
மாம தங்க புரம்என
மற்றொரு
நாமம் அங்கதற்
கெய்திட நாட்டினான். 105
(98. அவுணர்
தொல்குல மன்னன் -
அசுரேந்திரன்.

104. தேசிகன் -
சுக்கிரன்.
105. காப்பியன் -
சுக்கிரன். தூ -
சிந்துகின்ற. மதங்கபுரம்
-
இது கயமுகன் நகரம்.)
1013 அந்த மாநகர் ஐதெனக்
கம்மியன்
சிந்தை நாடினன்
செய்திடு காலையில்
தந்தி மாமுகத் தானவன்
கண்ணுறீஇ
அந்தம் இல்லதொ
ரார்வமொ டேகினான். 106
1014 காத மங்கொரு
பத்தெனக் கற்றவர்
ஓதுகின்ற ஒழுக்கமும்

ஒன்றெனும்
பாதி யெல்லைப்
பரப்பும் பெறுநகர்
வீதி நோக்னின்
விம்மிதம் எய்தினான். 107

1015 அரக்கர் தொல்லை
அவுணர்க் கரசொடு
தருக்கு தானவர்
தம்முடன் எய்தியே
பெருக்க முற்றதன்
பின்னவர் இன்னவர்
இருக்க நல்கினன்
இந்நகர் யாவையும். 108

1016 அங்கண் மேவும்
அணிமணிக் கோயிலின்
மங்க லத்தொடு
வல்லையின் ஏகியே
சிங்க ஏற்றின்

சிரங்கெழு பீடமேல்
வெங்கை மாமுகன்
வீற்றிருந் தானரோ. 109

1017 போந்து பின்னர்ப்
பொருவருந் தானவர்
வேந்தன் மாமக ளான
விசித்திர
காந்தி தன்னைக்
கருதுநன் னாளினில்
ஏந்தல் முன்வரைந்
தின்புற மேவினான். 110

1018 விண்ணின் மாந்தர்கள்
மேதகு தன்குலம்
நண்ணு மாதர்கள்
நாகர்தம் மாதர்கள்
வண்ண விஞ்சையர்
மாதர்க ளாதியாம்

எண்ணில் மாதரைப்
பின்வரைந்
தெய்தினான். 111
1019 பொன்ன கர்க்கும்
பொலங்கெழு புட்பக
மன்ந கர்க்குமவ்
வானவர் ஈண்டிய
எந்ந கர்க்கும்
இலாவளம் எய்திய
அந்ந கர்க்கண்
அமர்ந்திடல்
மேயினான். 112
1020 சூழும் வானவர்
தானவர் துன்னியே
தாழ ஏழுல குந்தன
தாணையால்
வாழி சேர்கொடுங்
கோலொடு மன்னுபேர்

ஆழி செல்ல அரசுசெய்
தானவன். 113

1021 ஆவுஞ் சங்கமும்
அம்புய மும்மலர்க்
காவும் மாமணி யுங்கம
லாலயத்
தேவும் பின்வருந்
தேவரும் மாதரும்
ஏவல் செய்ய
இனிதிருந தானரோ. 114

(106. ஐது என -
அழகென. 109.
வெங்கைமாமுகன் -
கயமுகன்.
110. விசித்திர காந்தி -
இவள் கயமுகன்
மனைவி; அசுரேந்திரன்

மகள்.
111. வரைந்து -
மணந்து.
112. புஷ்பக மன் -
குபேரன். 114. ஆ -
காமதேனு. சங்கம் -
சங்கநிதி.
அம்புயம் - பதுமநிதி.
கா - கற்பகத்தரு.)

1022 புந்தி மிக்க புகரும் புகருடன்
அந்த மற்ற அவுணர்கள் மன்னனும்
தந்தி யின்முகத் தானவ னுக்குநன்
மந்தி ரத்துணை யாய்அவண் வைகினார்.

1023 அன்ன காலை அடுகரி
மாமுக
மன்னன் முன்வரும்
வாசவ னாதியாந்
துன்னு வானவர்
சூழலை நோக்கியே
இன்ன தொன்றை
இயம்புதல் மேயினான். 116

1024 வைக லும்மிவண்
வந்துழி நுங்கள்தம்
மொய்கொள்
சென்னியில் மும்முறை
தாக்கியே
கைகள் காதுறக்
கால்கொடு
தாழ்ந்தெழீஇச்
செய்க நம்பணி

தேவர்கள் நீர்என்றான்.
1170

1025 அன்ன தோதலும்
அண்டர்கள் யாவரும்
மன்னன் தானும்
மறுப்பதை அஞ்சியே
முன்னரே நின்று
மொய்ம்புடைத்
தோல்முகன்
சொன்ன தோர்புன்
தொழின்முறை
ஆற்றினார். 118
1026 எழிலி யூர்தியும்
ஏனைய வானவர்
குழுவி னோர்களுங்
குஞ்சர மாமுகத்
தழித கன்பணி
அல்கலும் ஆற்றியே

பழியெ னும்பர
வைப்படிந் தாரரோ. 119

1027 கரிமு கத்துக் கயவன
தேவலால்
பருவ ரற்பழி மூழ்குறு
பான்மையைச்
சுரர்க ளுக்கிறை
தொல்லைவி
ரிஞ்சன்மால்
இருவ ருக்கும் இயம்பி
இரங்கினான். 120

1028 இரங்கும் எல்லையில்
இந்திர முற்றுளந்
தரங்க மெய்தித்
தளர்ந்திடல் நீயெனா
உரங்கொள் பான்மை
உணர்த்தி அவனொடும்

புரங்கள் அட்டவன்
பொற்றையிற் 121
போயினார்.

1029 மாகர் யாவரும் வாசவ
னும்புடை
யாக வந்திட அம்புயன்
மாலுமை
பாகன் மேய
பனிவரைக் கோயிலுள்
ஏகி னார்நந்தி எந்தை
விடுப்பவே. 122

1030 கண்டு நாதன்
கழலிணை தாழ்ந்துநல்
தொண்டு காணத்
துதித்தலும் ஆங்கவன்
அண்ட ரோடும்
அலமரல் எய்தியே
வண்டு ழாய்முடி

வந்ததென் னென்னவே. 123

(119. எழிலி ஊர்தி -
இந்திரன். அல்கலும் -
நாடோறும்.
பழியெனும் பரவை -
துன்பக்கடல்.
122. மாகர் - தேவர்.
123. அலமரல் -
துன்பம்.)

1031 வேறு

ஆனதோர்
பொழுதின்மால்
அரனை நோக்கியோர்
தானவன் கயமுகன்
என்னுந் தன்மையான்
வானவர் தமையெலாம்
வருத்தி னானவன்

ஊனமில் தவம்புரிந்
துடைய வன்மையால். 124

1032 வெங்கய முகத்தினன்
விறலை நீக்குதல்
எங்களுக் கரியதால்
எவர்க்கும் ஆதியாம்
புங்கவ நினக்கது
பொருளன் றாகையால்
அங்கவன்
உயிர்தொலைத் தருள
வேண்டுநீ. 125

1033 என்றுரை செய்தலும்
ஈசன் யாமிவண்
ஒன்றொரு புதல்வனை
யுதவித் தோல்முக
வன்றிறல் அவுணனை
மாய்த்து மற்றவன்
வென்றிகொண்

டேகுவான்
விடுத்துமேல் என்றான். 126
1034 வீடிய பற்றுடை விரதர்க்
கென்னினும்
நாடிய அரியவன்
நவின்ற வாய்மையைச்
சூடினர் சென்னிமேல்
தொழுத கையராய்
ஆடினர் பாடினர் அமரர்
யாருமே. 127
1035 பாங்கரில் அனையரைப்
பரிந்து நோக்கியே
ஈங்கினி நும்பதிக் கேகு
வீரென
ஆங்கவர் எம்பிரான்
அடியில் வீழ்ந்தனர்
வீங்குறு காதலால்
விடைகொண்

டேகினார். 128

1036 ஏகிய எல்லையில்
எண்ணி லாவிதி
சேகரம் மிலைச்சிய
சென்னி வானவன்
பாகமுற் றுலகெலாம்
பயந்த சுந்தரத்
தோகையை நோக்கியே
இதனைச்
சொல்லுவான். 129

1037 யாம்பெரு விருபபுடன்
இயற்று வித்திடுந்
தேம்படு தருவனந்
தெரித்துஞ் செல்கென
வாம்பரி சருளினை
வருவன் ஆங்கெனாக்
காம்படு தோளுடைக்

கவுரி கூறினாள். 130

1038 ஆயது கேட்டனன்
அகிலம் யாவையுந்
தாயென அருளுமத்
தையல் தன்னொடுஞ்
சேயுயர் விசும்பினைச்
செறிதண் சோலையில்
போயினன்
மறைக்கெலாம்
பொருளா தாயினான். 131

1039 நீணுதற் கனல்விழி
நிமலத் தேவெனுந்
தாணுவைப் போலவே
தனது பாதமுஞ்
சேணுடைச் சென்னியுந்
தேவர் யாரினுங்
காணுதற் கரியதக்
கடிகொள் சோலையே.

(125. விறலை -
வெற்றியை. 129. விதி
சேகரம் - பிரமகபாலம்.
உலகெலாம் பயந்த
சுந்தரத் தோகை -
உமாதேவியார்.
130. காம்படு தோள் -
மூங்கிலைப்பழிக்கும்
தோள்.
131. தையல் -
உமாதேவியார். 132.
கடி - வாசனை;
இது முதல் சோலை
வருணனை ஆகும்.)

தேசுடைத் தருநிரை
திருமென் போதொடு
பாசடைத் தொகுதியும்

பரித்து நிற்பன
ஈசனுக் கருச்சனை
இயல்பின் ஆற்றிட
நேசமுற் றுடையவர்
நிலைய தொக்குமால். 133
1041 பாலுற வருவதோர்
பரைதன் மெய்யொளி
மேலுறு பைங்கொடி
வேத நாயகன்
ஏலுறு தாருக வனத்தில்
எய்தமுன்
மாலுறு மங்கையர்
வடிவம் போலுமால். 134
1042 கொடிகளுந் தருக்களின்
குழுவு மாதுடன்
அடிகளங் கேகலும்
அனையர் செம்மையுஞ்
சுடர்கெழு பசுமையந்

துவன்றி அன்னதோர்
வடிவுகொண்
டிருந்திடும் வண்ணம்
போலுமால். 135

1043 பூந்தரு நிரைகளில்
பொருவில்
கோட்டிடைச்
சேந்திடு நனைபல
திகழ்வ பார்ப்பதி
காந்தனை அன்பொடு
கண்டு பாங்குளார்
ஏந்திய தீபிகை என்ன
லானவே. 136

1044 வான்தரு ஓர்சில
மலரின் கண்டொறுந்
தேன்றுளி விடுவன
சிவனைக் கண்டுழி
ஆன்றதோர் அன்பினார்

அகம்நெ கிழ்ந்துகட்
கான்றதோர் புனலெனக்
கவின்று காட்டிய. 137
1045 வண்தரு ஓர்சில
மருப்பில் வானிறங்
கொண்டிடு மதுமலர்
குழுமி யுற்றன
எண்டிரு மலையிடை
வீழுங் கங்கையில்
தண்டுளி சிதறிய
தன்மை போன்றவே. 138
1046 கற்றையஞ் சுடர்மணி
கனகம் ஏனைய
பிற்றையென் னாதருள்
பெரியர் வண்மைபோல்
மற்றவ னுள்ளபவன்
மரமுந் தம்பயன்
எற்றையும் உலப்புறா

தீகை சான்றவே. 139

1047 காவதன் இயல்பினைக்
கண்டு தன்னொரு
தேவியொ டேயருள்
செய்து சிற்பரன்
ஆவியுள் ளுணர்வென
அதனுள் வைகுமோர்
ஓவிய மன்றிடை
ஒல்லை ஏகினான். 140

1048 எண்டகு பெருநகை
எய்தி ஐம்புலன்
விண்டிடல் இன்றியே
விழியின் பாற்படக்
கண்டனள் கவுரிஅக்
கடிகொள் மண்டபங்
கொண்டிடும் ஓவியக்
கோலம் யாவுமே. 141

(133. பாசடை - பசியஇலை.
135. கொடிகளின் பசுமையும் தருக்களின் செம்மையும் அம்மை அப்பரை ஒத்து விளங்குகின்றன.
136. தீபிகை - தீபத்தட்டு. 138. வான்நிறம் - வெண்ணிறம். மதுமலர் - தேன்மலர்.
140. கா - சோலை. ஓவிய மன்று - சித்திர மண்டபம்.
141. பெருநசை - பெருவிருப்பம். விண்டிடம் -

விலகாமல்.
ஒவியக்கோலம் -
சித்திர வடிவம்.)

1049 பாங்கரில் வருவதொர்
பரமன் ஆணையால்
ஆங்கதன் நடுவணில்
ஆதி யாகியே
ஒங்கிய தனியெழுத்
தொன்றி ரண்டதாய்த்
தூங்குகைம் மலைகளில்
தோன்றிற் றென்பவே. 142
1050 அன்னவை உமையவள்
காண ஆங்கவை
முன்னுறு புணர்ச்சியின்
முயற்சி செய்தலும்
என்னைகொல்
இதுவென எண்ணித்

தன்னொடு
மன்னிய முதல்வனை 143
வணங்கிக் கூறுவாள்.
1051 மூலமாம் எழுத்திவை
முயங்கி மால்கரிக்
கோலமாய்ப்
புணர்வதென் கூறு
கென்றலும்
ஏலவார் கருங்குழல்
இறைவி கேளென
ஆலமார் களத்தினன்
அருள்செய் கின்றனன். 144

1052 வேறு
முன்புநீ காண்டலின்
மூலமாய் உடையதோர்
மன்பெருந்
தொல்பொறி மருவியீர்

உருவுறீஇ
அன்பினால்
ஆனைபோற்
புணருமால் ஆகையால்
நின்பெருந் தகவினை 145
நினைகிலாய் நீயுமே.

1053 காட்சியால் இதுசெயுங்
காரணம் பெற்றநின்
மாட்சிதான் யாமலான்
மற்றியார் உணர்குவார்
ஆட்சியாய் உற்றதொல்
அருமறைக் காயினுஞ்
சேட்செலா நிற்குநின்
திருவருட் செய்கையே. 146

1054 என்னவே முகமனால்
எம்பிரான் அம்பிகை
தன்னொடே

மொழியஅத் தந்தியும்
பிடியுமாய்த்
துன்னியே புணர்வுறுந்
தூயசெய் தொழில்விடா
முன்னமே போன்றதால் 147
முடிவிலாக் குடிலையே.

1055 அக்கணத் தாயிடை
ஐங்கரத் தவன்அருள்
முக்கண்நால்
வாயினான் மும்மதத்
தாறுபாய்
மைக்கருங் களிறெனும்
மாமுகத் தவன்மதிச்
செக்கர்வார்
சடையன்ஓர்
சிறுவன்வந்
தருளினான். 148

1056 ஒருமையால்

உணருவோர்
உணர்வினுக்
குணா¢வதாம்
பெருமைதயான்
எங்கணும் பிரிவரும்
பெற்றியான்
அருமையான் ஏவரும்
அடிதொழுந்
தன்மையான்
இருமையாம் ஈசனே
என்னநின் றருளுவான். 149

(142. தனி எழுத்து -
ஏகாட்சரம்; பிரணவம்.
தூங்கும் -
தொங்குகின்ற.
கைம்மலைகள் -
யானைகள்.

144. மூலமாம் எழுத்து
பிரணவாட்சரங்கள்.
147. குடிலை -
ஓங்காரம்.
148. மும்மதம் -
கன்னமதம்,
கபோலமதம், பீசமதம்;
சிலர் பீசமதத்தை
நீக்கிக் கைம்மதம்
என்றும் கூறுவர்.)
1057 மருளறப் புகலுநான்
மறைகளில்
திகழுமெய்ப்
பொருளெனப்
படுமவன் புவனமுற்
றவர்கள்தம்
இருளறுத் தவர்மனத்
திடர்தவிர்த் தருளவோர்

அருளுருத் தனைஎடுத்
தவதரித் துளனவன். 150

1058 வந்துமுன் னிருவர்தம்
மலரடித் தலமிசைச்
சிந்தையார் வத்தொடுஞ்
சென்னிதாழ்த் திடுதலுந்
தந்தையுந் தாயுமுன்
தழுவிமார் புறவணைத்
தந்தமில் கருணைசெய்
தருளினார் அவ்வழி. 151

1059 என்னரே யாயினும்
யாவதொன்
றெண்ணுதல்
முன்னரே உனதுதாள்
முடியுறப் பணிவரேல்
அன்னர்தஞ்
சிந்தைபோல் ஆக்குதி

அலதுனை
உன்னலார் செய்கையை 152
ஊறுசெய் திடுதிநீ.
1060 சேயநன் மலர்மிசைத்
திசைமுகன் மால்முதல்
ஆயபண் ணவர்தமக்
காருயிர்த்
தொகையினுக்
கேயபல் கணவருக்
கெத்திறத் தோர்க்குநீ
நாயகம் புரிதியால்
நல்லருட் டன்மையால். 153
1061 கானுறுங் கரடவெங்
கயமுகத் தவனெனுந்
தானவன் வன்மையைச்
சாடியே தண்டுழாய்
வானவன் சிறுமையும்
மாற்றியே வருகெனா

ஆனையின் முகவனுக்
கைம்முகன்
அருள்செய்தான். 154

1062 மோனமே குறியதா
முதலெழுத் தருளிய
ஞானமா மதலைபால்
நண்ணவே பூதவெஞ்
சேனையா யினஅருள்
செய்துசிற்
பரையொடும்
ஆனைமா முகனொடும்
அமலன்மீண்
டருளினான். 155

1063 புங்கவர்க் கிறைவனாம்
புதல்வனை நோக்கிடா
நங்கடைத் தலையினில்
நாயகம் புரிகெனா
அங்கருத் தியொடிருத்

தினன்அணிக்
கோயிலுட்
சங்கரக் கடவுள்சுந்
தரியொடு மருவினான். 156
1064 தந்திமா முகமுடைத்
தனயன்அங் கணுகியே
முந்துபா ரிடமெலாம்
மொய்த்துமுன் சூழ்தர
நந்திவந் தனைசெய
நான்முகன் முதலினோர்
வந்துவந் தடிதொழ
மகிழ்வொடே
வைகினான். 157

(152. என்னரே
ஆயினும் -
எத்தகையோராயினும்.
அன்னவர்தம் சிந்தை

போல் - அவர் எண்ணம்போல.
உன்னலார் - நினைந்துவழிபடாதவர்.
ஊறு - இடையூறு.

153. நாயகம் - தலைமைத்தன்மை.

154. கான் - நாற்றம். கரடம் - மதம். சாடி - அழித்து. ஆனையின்முகவன் - விநாயகன். ஐம்முகன் - சிவபெருமான்.

155. மோனம் - மௌனம். முதலெழுத்து - பிரணவம். ஞானமாமதலை - விநாயகன்.

156. அருந்தி -
விருப்பம். மருவினான்
- சென்றான்.)

1065 அன்னதற் பின்னரே
ஆயிரம் பெயருடைப்
பொன்னுலாம்
நேமியான் புனிதனைக்
காணிய
மின்னுதண் சுடர்விடும்
வெள¢ளிமால்
வரைமிசைக்
துன்னினான் ஆலயச்
சூழல்முன்
அணுகினான். 158

1066 அந்தியார் சடைமுடி
அண்ணல்தன்
அருளினால்

நந்திதே வுய்த்திட
நங்கையோர் பங்கனாம்
எந்தைபா லெய்தியே
இணைமலர்த்
தாள்தொழாப்
புந்தியார் வத்தொடும்
போற்றிசெய் தருளவே. 159

1067 வேறு
நிருத்தனவ்
விடைதனில் நேமி
யான்தனை
இருத்தியென்
றருள்புரிந் திடத்தின்
மேவிய
ஒருத்தியை நோக்கிஒன்
றுரைப்பங் கேளெனா
அருத்திசெய் ஆடல்ஒன்
றருளிற் கூறுவான். 160

1068 சூதனை எம்மொடே
பொருதி தோற்றனை
ஆதியேல் நீபுனை
அணிகள் யாவையும்
ஈதியால் வென்றனை
என்னின் எம்மொரு
பாதியாஞ் சசிமுதற்
கலவுங் கோடியால். 161

1069 என்னலும் உமையவள்
இசைவு கோடலும்
அன்னதொ
ரெல்லையின் அரியை
நோக்கியே
தன்னிகர் இல்லவன்
இதற்குச் சான்றென
மன்னினை
இருத்தியான் மாயநீ

என்றான். 162

1070 பற்றிகல் இன்றியே
பழவி னைப்பயன்
முற்றுணர்ந் துயிர்களை
முறையின் வைப்பவன்
மற்றிது புகறலும்
வனசக் கண்ணினான்
நற்றிறம் இ·தென
நவின்று வைகினான். 163

1071 இந்தவா றாயிடை
நிகழும் எல்லையில்
சுந்தரன் முதலிய
உழையர் சுற்றினோர்
அந்தமில் பெருங்குணத்
தாதி ஏவலில்
தந்தனர் காசொடு
பலகை தன்னையே. 164

1072 அதுபொழு தண்ணலும்
அரியை நோக்கியிம்
முதிர்தரு கருவியை
முறையின் வைக்கெனக்
கதுமென வைத்தலுங்
கவுரி நீநமக்
கெதிருறு கென்றுமுன்
னிருத்தி னானரோ. 165

(158. நேமியான் - திருமால். 160. ஒருத்தி - ஒப்பற்ற உமாதேவியார்.
161. சூது - சூதாட்டம். சசி - சந்திரன். கோடி - கொள்வாய்.
162. சான்று - சாட்சி. மன்னினை - பொருந்தி.

163. இகல் - வெறுப்பு.
வனசக்கண்ணினான் -
திருமால்.
164. உழையர் -
ஊழியர்கள். காசு,
பலகை - இவை சூதாடு
கருவிகள்.)

1073 கவற்றினை முன்னரே
உய்ப்பக் கண்ணுதல்
அவற்றினைப் பின்னுற
அவளும் உய்த்தனள்
தவற்றியல் பல்லதோர்
வல்ல சாரியால்
எவற்றினும்
மேலையோர் இனிதின்
நாடினார். 166

1074 பஞ்சென வுரைசெய்வர்
பாலை என்பர்ஈர்

அஞ்சென மொழிவர்
அஞ்சென்பர் அன்றியுந்
துஞ்சலின் நடம்என்பர்
துருத்தியீ தென்பர்
விஞ்சிய மகிழ்வொடு
வெடியென் றோதுவார். 167

1075 அடியிது பொட்டைஈ
தென்பர் அ·தென
முடிவில குழூஉக்குறி
முறையின் முந்துறக்
கடிதினில் கழறினர்
கவறு சிந்தினார்
நொடிதரு கருவிகள்
எதிரிகள் நூக்கினார். 168

1076 வேறு

ஏற்றா னவன்எய்திய
இன்னருள் யாவ

தேயோ
தேற்றாம் அஃதியார்க்கு
மளப்பருஞ் செய்கை
யாலே
மேற்றான் எதிராவுடன்
ஆடிய மெல்லி யற்குத்
தோற்றான்
நெடுமாலயன் நாடவுந்
தோற்றி லாதான். 169

1077 ஒன்றாய பரஞ்சுட
ரோன்உமை தன்னை
நோக்கி
நன்றா யதுநின்
வலியென்று நகைத்து
நம்மை
வென்றா யலைதோற்
றனைமுன்னர் விளம்பு
மாற்றால்

நின்றா ரொடுபூணும்
எமக்கினி நேர்தி
என்றான். 170
1078 மூன்றாம் உலகங்களும்
ஆருயிர் முற்று
முன்னம்
ஈன்றாள் அதுகேட்டலுந்
தான்இகல் ஆடல்
அஞ்சி
வான்றா வியபே
ரடிமாயனை வல்லை
நோக்கிச்
சான்றா மெனவை
கினைநீயிது சாற்று
கென்றாள். 171
1079 சொல்லும் அளவிற்
சுடர்நேமியன் சூது
டைப்போர்

வெல்லுந் தகையோன்
பரனென்று விளம்ப
லோடும்
நல்லுண்மை சொற்றாய்
திறநன்றிது நன்றி
தென்னாச்
செல்லுண்ட ஐம்பால்
உமைஆற்றச் சினம்பு
ரிந்தாள். 172

1080 பாராயலை கண்ணனு
மாயினை பாலி
னுற்றாய்
தேராதது ஒன்றிலை
யாவருந் தேர
ஒண்ணாப்
பேராதி யோன்நவை
கூறினும்நீயிது பேச

லாமோ
காராமெய் என்பர்
மனமுங்கரி யாய்கொல்
மன்னோ. 173
(166. கவறு -
சூதாடுகருவி.
167. பஞ்சு, பாலை,
ஈரைஞ்சு, அஞ்சு, நடம்,
துருத்தி,
வெடி - இவை
சூதாட்டத்தின் குழூஉக்
குறிகள்.
168. அடி, பெட்டை -
இவை சூதாட்டத்தின்
குழூஉக்குறிகள்.
கவறுசிந்துதல் -
காய்களைவெட்டுதல்.
நூக்கினார் - தள்ளினார்.

169. ஏற்றான் - இடபத்தையுடையவன்.
170. வென்றாய் அலை - வெற்றி பெறவில்லை. தார் - மாலை. நேர்தி - அளித்தி.
171. இகல்ஆட - பகைத்து நானே வென்றேன் என்று கூற.
172. செல் - மேகம். ஐம்பால் - கூந்தல். ஆற்ற - மிகவும்.
173. கண்ணனுமாயினை - இங்கு, நீ கண்ணுடையவனான் இருந்தும் அதற்குரிய செயலினை

இழந்தாய் என்பது
குறிப்பு.பாலினுற்றாய் -
பக்கத்திலிருந்தாய்;
பாற்கடலிலிருந்தாய்;
பாலை
வைத்துக்கொண்டு
பொய் சொல்லலாகாது
என்பது கருத்து.)

1081 ஏம்பா லிதுசொற்
றனைஆதலின் என்று
மாயை
ஓம்பா வருவா
யுறுகைதவத் தூற்ற
மிக்காய்
பாம்பாதி யென்னப்
பகர்ந்தாள் பகர்கின்ற
எல்லை
ஆம்பால் உருவம்

அ·தங்கண் அடைந்த
தன்றே. 174
1082 அவ்வா றவன்பால்
அணைகின்றதொர்
போழ்தில் ஆழிக்
கைவா னவனும்
அதுகண்டு கவற்சி
எய்திச்
செவ்வான் உறழும்
முடியோன்அடி சென்று
தாழா
எவ்வா றெனக்கிவ்
வுருநீங்கும் இசைத்தி
என்றான். 175
1083 காலாய் வெளி¤யாய்ப்
புனலாய்க் கனலோடு
பாராய்
மேலாகி யுள்ள

பொருளாய்எவற்
றிற்கும் வித்தாய்
நாலாய வேதப்
பொருளாகி நண்ணுற்ற
நாதன்
மாலா யவனுக்
கி·தொன்று வகுத்து
ரைப்பான். 176
1084 என்பால் வருமன்பின்
இசைத்தனை ஈ·து
பெற்றாய்
நின்பால் வருமின்
னலைநீக்குவன் நீங்கு
கின்றாய்
தென்பா லுலகந்தனில்
அன்னதொர் தேய
மீதில்
முன்பால வனம்மென

ஒன்றுள மொய்ம்பின்
மிக்காய். 177
1085 ஆங்கே யினிநீ
கடிதேகினை அன்ன
கானில்
பாங்கே ஒருதொன்மரம்
நின்றது பார்த்த துண்டே
ஊங்கே பராரையின்
மேயபொந் தொன்றி
னூடு
தீங்கே குறப்போய்ப்
பெருமாதவஞ் செய்து
சேர்தி. 178
1086 அஞ்சேல் அவண்நீ
உறைகின்றதொர் காலை
யானே
எஞ்சே யவனாங்
கயமாமுகன் எய்து

வானச்
செஞ்சே வகனுக்
கெதிர்கொண்டனை
சென்று காண்டி
மஞ்சே யனையாய்
உனக்கிவ்வுரு மாறும்
அன்றே. 179

1087 வேறு
என்னுமள வில்தொழுதி
றைஞ்சிஇனி தேத்தி
அன்னதொர்
வனத்திடை
அமர்ந்ததொன் மரத்தில்
துன்னுவன் எனக்கடிது
சொல்லுதலும் யார்க்கும்
முன்னவ னுமேகென
முராரியை விடுத்தான். 180

1088 விட்டிடுத லுங்கயிலை
நீங்கினன் விரைந்தே
கட்டழகின் மேதகைய
காமனது தாதை
சிட்டர்கள் பயின்றுறை
தெனாதுபுலம நண்ணி
மட்டொழுகு தொன்மர 181
வனத்தினிடை உற்றான்.
(174. ஏம்பால் -
மகிழ்ச்சியால். கைதவம்
- வஞ்சனை.
பாம்பு ஆதி -
பாம்பாகக்கடவாய்.
175. கவற்சி - கலக்கம்.
செவ்வான் -
செவ்வானம்.
176. கால் . காற்று.
வெள¤ - ஆகாயம்.

நாதன் - சிவன்.
177. இசைத்தனை - தவறுகூறினை. ஈது - பாம்பு வடிவாகும் இச்சாபத்தினை. ஆலவனம் - திருவாலங்காடு. 178. தொன்மரம் - ஆலமரம். பராரை - பெரிய அடிப்பாகம்.
179. கயமுகன் - விநாயகன். சேவகன் - வீரன். மஞ்சே அனையாய் - மேக வண்ணனே!
இவ்வுரு - இப்பாம்பு வடிவம். 180. முரா£¤ - திருமால்.

181. காமனது தாதை -
திருமால். சிட்டர்கள் -
மேலானவர்கள்.
தெனாது புலம் -
தென்னாடு. மட்டு -
தேன்.)

1089 நன்மதி யுடைப்புலவர்
நால்வர்களும் உய்யச்
சின்மயம்
உணர்த்தியருள்
தேவன்அமர் தாருத்
தன்மையது பெற்றுநனி
தண்ணிழல் பரப்புந்
தொன்மர வியற்கைஅத
னிற்சிறிது சொல்வாம். 182
1090 பசுந்தழை மிடைந்தஉல
வைத்திரள் பரப்பி

விசும்பளவு நீடியுயர்
வீழினிரை தூங்கத்
தசும்பனைய
தீங்கனிகள் தாங்கியது
தாளால்
வசுந்தரை அளந்தநெடு 183
மாயவனை மானும்.
1091 அண்டநடு வாயவுல
கேழினையும் அந்நாள்
உண்டருளி
ஒல்லைதனில் ஓர்சிறுவ
னாகிப்
பண்டுகரி
யோன்தயில்கொள்
பாசடைகள் தன்பாற்
கொண்டவட
மன்னதொரு
கொள்கைய

துடைத்தால். 184
1092 மழைத்தபசு மேனியது
மாதிர வரைப்பில்
விழுத்தகைய
வீழினிரை வீசுவட
தாருத்
தழைக்குல மருப்புமிசை
தாங்கியிடை தூங்கும்
புழைக்கைகொடு
மால்களிறு நாடுகரி
போலும். 185
1093 பாசடை தொடுக்கப்பட
லைப்பழு மரத்தின்
வீசிநிமிர் கின்றபல
வீழின்விரி கற்றை
பூசலிடு கூளியொடு
பூதநிரை பற்றி
ஊசல்பல ஆடியென

ஊக்கியன அன்றே. 186

1094 ஆல்வரையின்
வீழ்நிரைகள் ஆசுகம்
உடற்றப்
பால்வரையின்
எற்றிவரு மாறிரவி
பாகன்
கால்வரையின்
ஏகவெழு கந்துகம
தென்னும்
மால்வரையின் வீசுபல
மத்திகைய தொத்த. 187

1095 ஆசறுதெ ளாதுதிசை
ஆளுமிறை எண்ணில்
பாசமொடு நின்றதொரு
பான்மைய· தன்றேல்
வாசவனும் ஆகமிசை

மாலிகையு மாமால்
வீசுபழு மாமர
விலங்கலும்அவ்
வீழும். 188

1096 மாநிலமெ லாந்தனை
வழுத்தவரு மன்னற்
கூனமுறு காலைதனில்
ஒண்குருதி வாரி
வானமுகில்
கான்றனைய
மாண்டதொன் மரத்தின்
மேனிதரு செய்யபல
வீழின்விரி மாலை. 189

(182. புலவர் - அறிஞர்.
தாரு - கல்லால
விருட்சம்.
183. இது முதல் ஆல

மரத்தின் வருணனை
ஆகும்.
உலவ¨திதிரன் -
கிளைகள். வீழின் நிரை
- விழுதின் வரிசை.
தசும்பு - குடம்.
வசுந்தரை - பூமி.
184. வடம் அன்ன -
அந்த ஆலேபோல.
185. கரி - இங்குப்
பெண் யானை.
186. படலை - மாலை.
பழுமரம் - ஆலமரம்.
பூசல் - சிறுசண்டை.
187. ஆல்வரை -
ஆலமரமாகிய மலை.
ஆசுகம் - காற்று.
இரவிபாகன் -

அருணன். கந்துகம் -
சத்தமா என்னும்
குதிரைகள்.
மத்திகை - குதிரைச்
சம்மட்டி; சவுக்கு.
188. தெனாதுதிசை
யாளும் இறை - எமன்.
மாலிகை - பூமாலை.
பழுமாமர விலங்கல் -
ஆலமரமாகிய மலை.
189. ஊனம் - அழிவு.
கான்றல் - பெய்தல்.
மாண்ட - மாட்சிமை
வாய்ந்த.)
1097 இரும்பறை ஆலமிசை
எம்முருவு கொள்ளா
வம்புலவு தண்டுவள
மாயன்வரும் என்னா

வெம்பணிகள்
தம்பதியின் மேவுவன
போலாம்
தம்பமென வேதரை
புகுந்ததனி வீழ்கள். 190

1098 கடித்தன
எயிற்றின்அழல்
காலவர வின்மேல்
நடிக்குமொரு கட்செவி
நமைக்குறுகும் என்னாத்
துடித்தன எனத்தலை
துளக்கின உரோமம்
பொடித்தன நிகர்த்துள
புனிற்றினுறு புன்காய். 191

1099 கிளர்ப்புறு கவட்டிலை
கிடைத்த கிளையாவும்
அளப்பில்புகை சுற்றிட

அனற்கெழுவு கற்றை
துளக்குறு தரக்குழுவு
தோன்றியது போன்ற
விளக்கழல் நிகர்த்துள
விரிந்தமுகை
யெல்லாம். 192

1100 செருப்புகு சினத்தெதிர்
செறுத்தமத வெற்பின்
மருப்பின் ஒசிப்பவன்
வரத்தினியல் காணா
விருப்பமலி வுற்றதன்
விழித்தொகைகள்
எங்கும்
பரப்பிய நிகர்த்துள
பயங்கழுவு
பைங்காய்.

193

1101 வெள்¢ளிபடு கின்றமதி

விண்படர் விமானங்
கள்ளிபடு பால்கெழு
கவட்டினிடை
தேய்ப்பத்
துள்ளிபடு கின்றளவி
லோர்திவலை தொத்தப்
புள்ளிபடு மாறுமுயல்
என்பர் புவிமேலோர். 194
1102 காவதமொ ரேழுள
பராரை கணிப்பின்றால்
தாவறும் உயர்ச்சியத
னுக்குமதி சான்றே
பூவுலகம் எங்குநிழல்
போக்கிநெடி தோம்புங்
கோவதென நின்றதுயர்
கோளியெனுங் குன்றம். 195
1103 அவ்வகைய
தாருவினை

நோக்கினன்
அணைந்தான்
பவ்வநிற வண்ணல்
துயில் பாசடை
கள்தம்மோ
டெவ்வகை கமத்திரென
வேவினவ என்றே
வெவ்வரவி
னுக்கிறைவன்
மேவியது மான. 196
1104 அந்தமில் பெருங்கடல்
வளாகம்அனைத்
துந்தன்
உந்தியில்
அடைந்ததென
ஒங்கல்கெழும்
ஒள¢வாள்
வந்துறை யினிற்புகுவ

தென்ன வடதாருப்
பொந்தினிடை
யேயணுகி னான்உலகு
பூத்தோன். 197
(190. வெம்பணிகள் -
கொடிய பாம்புகள்.
தம்பதி - பாதாளம்.
191. கட்செவி -
கண்ணே காதாக
உடையது; பாம்பு.
புனிறு - இளமை.
192. கவடு -
பெருங்கிளை. முகை -
மொட்டு.
193. பயம் - பால்.
கெழுவு - பொருந்திய.
194. கள்ளிபடு -
கள்ளியிலும் அதிகமாக

உண்டாகின்ற.
தொத்த - பட. முயல் - முயல் என்னும் களங்கம்.
195. மதிசான்று என்றது ஆல மரக்கிளைகள் சந்திர மண்டலத்தை முட்டியதை.
கோ - இறைவன். அது : பகுதிப்பொருள் விகுதி.
கோளி - ஆலமரம்.
196. நோக்கினன் - நோக்கி. வினவஎன்றே - வினவி அறிதற்கு என்றே.
அரவினுக்கு இறைவன் - ஆதிசேடன்.
197. உந்தியில் -

வயிற்றில். ஓங்கல் -
உயர்ந்த. வாள் -
வாட்படை.
ஓங்கல் கெழும்
ஒள¢வாள்
வந்துறையினில்
புகுவதென்ன - உதயி
கிரியில் உதித்து
விளங்கிய சூரியன்
சென்று கடலுள்
புகுந்தாற்போல எனவும்
பொருள்கொள்ளலாம்.)

1105 சத்தியுரை யால்அரி
தனிப்பணிய தான
இத்திறமி சைத்தனம்
இனிச்சுரரை வாட்டும்
அத்திமுக

வெய்யவனை
ஆதியருள் செய்யும்
வித்தக முதற்புதல்வன்
வென்றமை 198
உரைப்பாம்.

1106 வேறு
முந்து வேழ முகத்தவன்
ஏவலால்
நொந்து சிந்தை
நுணங்கிய தேவரும்
இந்தி ராதிபர் யாவரும்
ஐங்கரன்
வந்த தோர்ந்து
மகிழ்ச்சியின்
மேயினார்.
199

1107 ஏத மில்மகிழ் வெய்திய
இந்திரன்

ஆதி யோர்கயி லாயத்
தணுகியே
போத கத்துப் புகர்முகப்
புங்கவன்
பாத முற்றுப் பணிந்து 200
பரவினார்.

1108 பரவல் செய்திடுக
பான்மையை
நோக்கியே
கருணை செய்த
கயமுகத் தெம்பிரான்
உரையும் நுங்கட்
குறுகுறை என்றலும்
வரன்மு றைப்பட
வாசவன் கூறுவான். 201

1109 தொல்லை நாண்மதி
சூடிய சோதிபால்
எல்லை நீங்கும்

வரந்தனை எய்தினான்
கல்லென் வெஞ்சொற்
கயாசுரன் என்பவன்
அல்லல் செய்தனன்
ஆற்றவும் எங்களை. 202
1110 பின்னும் நங்களைப்
பீடற வைகலுந்
தன்னை வந்தனை
செய்யவுஞ்
சாற்றினான்
அன்ன செய்தனம்
அன்றியும் எங்கள்
பால்
மன்ன வேபுதி தொன்று
வகுத்தனன். 203

1111 கிட்டித் தன்முன்
கிடைத்துழி நெற்றியிற்

குட்டிக் கொண்டு
குழையிணை யிற்கரந்
தொட்டுத் தாழ்ந்தெழச்
சொற்றனன் ஆங்கதும்
பட்டுப் பட்டுப்
பழியிடை மூழ்கினேம். 204
1112 கறுத்து மற்றவன்
கட்டுரைக் கின்றசொல்
மறுத்த லஞ்சி
வரும்பழி தன்னையும்
பொறுத்து நாணமும்
போகஇின் றந்தமுஞ்
சிறப்பி லாவச்
சிறுதொழில்
செய்தனம். 205
(198. சத்தி உரை -
தேவியின் சாபமொழி.
ஆதி - சிவன்.

விததக முதற்புதல்வன்
- ஞானவடிவினனாகிய
விநாயகன்.
199. ஐங்கரன் -
விநாயகன். 200.
போதகம் - இளமை.
புகர் - புள்ளி.
204. கிடைத்துழி -
அடைந்தபோது.
குழைஇணை - இரு
காது.)

1113 ஆங்க வன்தன்
தாவியொ டெங்குறை
நீங்கு வித்திட நீவரு
வாயென
ஓங்கல் நல்கும்
உமையவள்

தன்னொரு
பாங்கர் வைகும்
பராபரன் கூறினான். 2063

1114 ஆத லால்நின்
னடைந்தனம்
எம்முடை
ஏத மாற்றுதி என்று
வழிபடீஇ
மோத காதிகள்
முன்னுற வார்த்திடப்
பூத நாதன் அருளில்
புகலுவான். 207

1115 அஞ்சல் அஞ்சல்
அவுணர்க் கரசனாம்
விஞ்சு வேழ
முகமுடை வீரனைத்
துஞ்சு வித்துந்
துயர்தவிர்ப்

போமெனாக்
குஞ்ச ரத்திரு மாமுகன்
கூறவே. 208
1116 இறைவ னோடும்
இமையவர் எம்முடைச்
சிறுமை நீங்கின
செல்லலும் நீங்கின
மறுமை இன்பமும்
வந்தன வால்இனிப்
பெறுவ தொன்றுள
தோவெனப் பேசினார். 209

1117 வேறு
துன்பினை உழந்திடு
சுரர்கள் இவ்வகை
இன்புறு காலையில்
ஈசன் தந்திடும்
அன்புடை முன்னவன்

ஆனை மாமுக
முன்பனை யடுவது
முன்னி னானரோ. 210

1118 பொருக்கெனத்
தவிசினின் றெழுந்து
பூதர்கள்
நெருக்குறு வாய்தலின்
எய்தி நீள்கதிர்
அருக்கனின் இலகிய
அசலன் என்பவன்
தருக்கிய
புயத்தின்மேற்
சரண்வைத் தேறினான். 211

1119 ஏறியங் கசலன்மே
லிருந்து செல்லுழிக்
காறொடர் முகிலினங்
கவைஇய காட்சிபோல்
மாறில்வெம் பூதர்கள்

வந்து சுற்றியே
கூறினர் அவன்புகழ்
குலாய கொள்கையார். 212

1120 சாமரை வீசினர்
தணப்பில் பன்மணிக்
காமரு தண்ணிழல்
கவிகை ஏந்தினர்
பூமரு மதுமலர்
பொழிதல் மேயினர்
ஏமரு பூதரில் எண்ணி
லோர்களே. 213

1121 துடியொடு சல்லரி
தோமில் தண்ணுமை
கடிபடு கரடிகை
கணையம் சல்லிகை
இடியுறழ் பேரிகை
இரலை காகளங்

குடமுழ வியம்பினர்
கோடி சாரதர். 214

(206. ஓங்கல் - இமயமலை.
207. ஏதம் - துன்பம். மோதகாதிகள் - மோதகம் முதலியபொருள்கள்.
208. துஞ்சுவித்து - இறக்கச்செய்து. 210. முன்னவன் - விநாயகப்பெருமான்.
211. அசலன் - பூதகணங்களில் ஒருவன். 213. ஏமரு - மகிழ்வுற்ற.
214. துடி - உடுக்கை.

தோம்இல் -
குற்றமில்லாத.
தண்ணுமை - மத்தளம்.
இரலை, ஊதுகொம்பு,
சல்லரி, கரடிகை,
கணையம், சல்லிகை
காகளம் குட முழவு
- இவைகள் வாத்திய
வகைகள்.)

1122 சிந்தையில் உன்னினர்
தீமை தீர்ப்பவன்
வந்திடு காலையின்
மகத்தின் வேந்தனும்
அந்தர அமரரும்
அடைந்து போற்றியே
புந்திகொள்
உவகையால் போதல்

மேயினார். 215

1123 தாருவின் நறுமலர்
தத்தங் கைகொடு
பேரருள் நுதல்விழிப்
பிள்ளை மீமிசை
சேருற வீசியே
புடையிற் சென்றனர்
காரினை யடைதரு
கடவுள் வில்லென. 216

1124 விரைந்தெழு சாரத
வெள்ளம் எண்ணில
நிரந்தன சூழ்தர
நிமலன் மாமகன்
பெருந்தரை ஏகியே
பிறங்கு தோல்முகன்
புரந்திடு மதங்கமா
புரமுன் போயினான். 217

1125 ஆயது கயமுகத்
தவுணர் கோடியே
வேயினர் புகறலும்
வெகுட்சி
கொண்டெழீஇ
ஏயதன் படையெலாம்
எடுத்து மற்றவன்
சேயுயர் தனதுபொற்
றேரில் ஏறினான். 218

1126 பல்லியம் இயம்பின
பரிகள் சுற்றின
சில்லிகொள் ஆழியந்
தேர்கள் சூழ்ந்தன
எல்லையில் இபநிரை
யாவும் மொய்த்தன
வல்லியல் அவுணர்கள்
வரம்பின் றீண்டினார். 219

1127 ஆயிர வெள¢ளமாம்
அனிகஞ் சுற்றிடக்
காய்கனல் விழியுடைக்
கயமு காசுரன்
ஏயெனும்
அளவையில் ஏகிக்
கண்ணுதல்
நாயகன் மதலைதன்
படைமுன்
நண்ணினான். 220

1128 நண்ணிய காலையின்
நவையில் பூதரும்
அண்ணலங் கழலடி
அவுண ருங்கெழீஇப்
பண்ணினர்
பெருஞ்சமர் படையின்
வன்மையால்

விண்ணவர் யாவரும்
வியந்து நோக்கவே. 221

1129 புதிதெழு வெயிலுடன்
பொங்கு பேரிருள்
எதிர்பொரு மாறுபோல்
இனங்கொள் தானவர்
அதிர்கழற் பூதரோ
டமர்செய் தாற்றலர்
கதுமென அழிந்தனர்
கலங்கி ஓடினார். 222

1130 ஓடினர் அளப்பிலர்
உயிரைச் சிந்தியே
வீடினர் அளப்பிலர்
மெய்கு றைந்துபின்
ஆடினர் அளப்பிலர்
அகலு தற்கிடந்
தேடினர் அளப்பிலர்

தியக்கம் எய்தினார். 223
(216. கடவுள்வில் -
இந்திரவில்.
218. வேயினர் -
ஒற்றர். சேய் -
செவ்விய.
219. சில்லிகொள் -
தகடுகள் பதித்த. 223.
தியக்கம் - கலக்கம்.)
1131 ஒழிந்தன கரிபரி
உலப்பில் தேர்நிரை
அழிந்தன இத்திறம்
அவுணர் தம்படை
குழிந்திடு கண்ணுடைக்
குறள்வெம் பூதர்கள்
மொழிந்திட
அரியதோர் விசய
முற்றினா£¢.

224

1132 உயர்தரு தானவர்
உடைந்த தன்மையும்
புயவலி கொண்டுள
பூதர் யாவருஞ்
சயமுடன் மேல்வரு
தகவு நோக்கியே
கயமுக அவுணர்கோன்
கனலிற் சீறினான். 225

1133 உளத்தினில்
வெகுண்டுசென்
றொருதன் கைச்சிலை
வளைத்தனன்
அத்துணை வளைத்துப்
பேரமர்
விளைத்தனர் பூதர்கள்
அனையர்

மெய்யெலாந்
துளைத்தனன்
கணைமழை சொரிந்து
துண்ணென. 226

1134 அரந்தெறு பகழிகள்
ஆகம் போழ்தலும்
வருந்தினர் திறலொடு
வன்மை நீங்கினர்
இரிந்தனர் பூதர்கள்
யாரும் ஓடினார்
புரந்தரன் இமையவர்
பொருமல் எய்தவே. 227

1135 கணநிரை சாய்தலுங்
கண்டு மற்றது
மணிகிளர் கிம்புரி
மருப்பு மாமுகன்
இணையறும்

அசலன்மேல் ஏகி
வல்லையில்
அணுகினன் இபமுகத்
தவுணர் கோனையே. 228

1136 காருடை இபமுகக்
கடவுள் மேலையோன்
ஏருற வருதலும் நின்ற
தூதரைச்
சீருறு கயமுகத் தீயன்
நோக்கியே
யாரிவண் பொருவதற்
கணுகுற் றானென. 229

1137 பரவிய ஒற்றர்கள்
பணைம ருப்புடைக்
காரிமுக முடையன்முக்
கண்ணன் ஐங்கரன்
உருகெழு பூதன்மேல்

உறுகின் றான்சிவன்
பெருமக னாகும்இப்
பிள்ளைதான் என்றார். 230

1138 அன்னது கேட்டலும்
அவணன் சீறியே
பன்னருங் கலைதெரி
பாகை நோக்கிநம்
பொன்னி ரதத்தினை
புழைக்கை மாமுகன்
முன்னுறக் கடவுதி
மொய்ம்ப என்னவே. 231

1139 கேட்டிடு
கலவையோன் கிஞ்சு
கக்குரத்
தாட்டிறற் பரியினந்
தன்னின் மத்திகை
காட்டினன் தவறிலாக்
கனகத் தேரினை

ஓட்டினன் ஐங்கரத்
தொருவன் முன்னுற. 232

(224. குறள் - குறுகிய.
விசயம் - வெற்றி.
227. அரம்தெறு -
அரத்தால் கூராக்கிய.
ஆகம் - உடல். 228.
கிம்புரி - பூண். 230.
பணை - பருமை.
231. கடவுதி -
செலுத்து வாயாக.)

1140 ஆயிடைக் கரிமுகத்
தவுணன் ஐங்கரத்
தூயனை யழல்விழ
சுழல நோக்கியே
காயெரி எயிறுகக்
கறைகொள் பற்களால்

சேயிதழ் அதுக்கியே
இனைய செப்புவான். 233
1141 நுந்தையென் மாதவம்
நோக்கி முன்னரே
தந்திடு பெருவரந்
தன்னைத் தேர்கிலை
உய்ந்தனை போதிநின்
னுயிர்கொண்
டென்னெதிர்
வந்தனை இறையது
மதியி லாய்கொலோ. 234

1142 அன்றிநீ யமர்செய
அமைதி யென்னினும்
வன்றிறல் உனக்கிலை
மைந்த என்னெதிர்
பொன்றினர் அல்லது

போர்செய்
தென்னைமுன்
வென்றவர் இவரென
விளம்ப வல்லையோ. 235
1143 தேன்பெறு தருநிழல்
திருவின் வைகிய
வான்பெறு தேவரால்
மக்க ளாலவர்
ஊன்பெறு படைகளால்
ஒழிந்தி டேன்இது
நான்பெறு வரத்தியல்
நவிலக் கேட்டியேல். 236
1144 பின்னரும் பலவுள
பெற்ற தொல்வரம்
என்னைவெல்
பவர்எவர் இந்தி
ராதிபர்
தன்னிடர் தணிப்பவர்

போலச் சார்ந்தனை
உன்னைவென்
றன்னவர் உயிரும்
உண்பனால். 237

1145 பொருதெனை
வென்றனை போக
வல்லையேல்
வருதியென்
றுரைத்தலும் வானு
லாவிய
புரமெரி படுத்தவன்
புதல்வன் அவ்விடை
அருளுட
னொருமொழி அறைவ
தாயினான். 238

1146 வேறு

நிரந்தபல் படையும்
நாளும் நிலைபெற
நினக்குத் தொன்னாள்
வரந்தரு கின்ற எந்தை
வல்லைநின் னுயிரை
வவ்விப்
புரந்தரன் முதவி
னோர்க்குப்
பொன்னினா டுதவி
அன்னார்
அரந்தையும் அகற்றிச்
செல்கென் றருளினன்
எனக்கும் அன்றே. 239

1147 உன்னுயிர் காத்தி
என்னின் உறுதியொன்
றுரைப்பன் கேண்மோ
பொன்னக ரதனை

இந்தப் புரந்தரன் புரக்க
நல்கி
இந்நிலத் தரசு செய்தே
இருத்திய· திசையா
தென்னின்
நின்னுயிர் முடிப்பான்
நேர்ந்து நின்றனன்
இனைவென்
னென்றான். 240

(232. வலவையோன் -
சாரதி. கிஞ்சுகம் -
செந்நிறம்.
234. நுந்தை - உனது
தந்தை. இறையது -
சிறிதும்.
236. ஊன் - மாமிசம்.
படை - ஆயுதம்.
239. நிரந்த -

வரிசையான. எந்தை -
சிவன். அரந்தை -
துன்பம்.)

1148 என்னலும் அவுணன்
பொங்கி எரியுக
விழிழிழித்துச்
சென்றோர்
பொன்னெடுஞ்
சிலையை வாங்கிப்
பொருக்கெனப்
புரிநாண் ஏற்றி
மின்னுடை வடிம்பின்
வாளி வீசலும் விமலன்
நல்கும்
முன்னவன் எழுவொன்
றேந்தி முரணொடு
சிந்தி நின்றான்.

241

1149 பொற்றனு முரிந்து
வீழப புழைக்கையிற்
பிடித்த தண்டால்
எற்றினன் அனைய
காலை இபமுகத்
தசுரன் என்போன்
மற்றொரு சிலையைக்
கையால் வாங்கினன்
வாங்கு முன்னர்ச்
செற்றனன் அதனை
மைந்தன் திசைமுகன்
முதலோர் ஆர்ப்ப.

242

1150 திண்டிறல் பெற்ற வீரச்
சிலைமுரிந் திட்ட
பின்னர்த்
தண்டமொன் றேந்தி

ஈசன் தனயனோ
டெதிர்த லோடும்
விண்டது சோரும்
வண்ணம் வெய்தெனப்
புடைத்து மாயாக்
கண்டகன் உரத்தில்
தாக்கக் கையற வெய்தி
நின்றான். 243

1151 நடுங்கினன் சிந்தை
ஒன்று நவில்கிலன்
நாணத் தாலே
ஒடுங்கினன் கயவெஞ்
சூரன் உலந்தனன்
போல நின்றான்
அடும்பரி களிறு
திண்டேர் அணிகெழு
தானை பாரிற்

படும்படி நினைந்து
முன்னோன் பாரம்ஒன்
றுய்த்தான் அன்றே. 244
1152 விட்டவெம் பாசம்
அங்கண் வெய்யதோர்
சேனை முற்றுங்
கட்டிய தாக மைந்தன்
கணிச்சியும் அதற்பின்
ஏவ
அட்டதால் அதனை
நோக்கி ஆடினர்
அமரர் தானை
பட்டன உணர்ந்து
தீயோன் பதைபதைத்
துயிர்த்து நொந்தான்.
245
1153 முந்துதன் கரத்தி லுள்ள
முரண்கெழு படைகள்

யாவுஞ்
சிந்தினன் அவைகள்
எல்லாஞ் சேர்ந்தன
திங்கள் சூடும்
எந்தையை வலஞ்செய்
தேத்தி ஏவலின்
இயன்ற மாதோ
வெந்திறல் அவுணன்
மேன்மேல்
வெகுளித்தீக் கனல
நின்றான். 246

1154 நின்றவன் தன்னை
நோக்கி நெடியபல்
படைகள் ஏவில்
சென்றிவன் தன்னைக்
கொல்லா சிவனருள்
வரத்தின் சீரால்
இன்றினிச் செய்வ

தென்னென் றிறைவரை
உன்னி எந்தை
யூன்றிருக் கோட்டில்
ஒன்று தடக்கையின்
முரித்துக் கொண்டான். 247
1155 தடக்கையி லேந்து
கோட்டைத் தந்தியாம்
அவுணன் மீது
விடுத்தலும் அனையன்
மார்வை வெய்தெனக்
கீண்டு போகி
உடல்படி மிசையே
வீழ்த்தி ஒல்லையில்
ஓடித் தெண்ணீர்க்
கடல்படிந் தமலன்
மைந்தன் கரத்தில்வந்
திருந்த தன்றே. 248
1156 புயலினத் தொகுதி

ஒன்றிப் புவிமிசை
வழுக்கிற் றென்னக்
கயமுகத் தவுணன்
முந்நீர்க் கடலுடைந்
தென்ன ஆர்த்திட்
டியலுடைத் தேர்மேல்
வீழா எய்த்தனன்
அவன்தன் மார்பில்
வியனதித் தாரை
என்ன விரிந்தன குருதி
வெள¢ளம். 249

(241. பொன் - அழகு.
எழு - ஓர் ஆயுதம்.
முரண் - வலிமை.
243. கண்டகன் -
கொடியன்; கயமுகன்.
கையறவு - துன்பம்.

244. பாசம் - கயிறு.
245. அட்டது -
அழித்தது.
247. எந்தை -
எந்தையாகிய
விநாயகர். தன்
திருக்கோட்டில் ஒன்று -
தனது கொம்புகளில்
ஒன்றான வலது
கொம்பை.
248. கரத்தில் - வலது
கரத்தில்.)

1157 ஏடவிழ் அலங்கல்
திண்டோள் இபமுகத்
தவுணன் மார்பின்
நீடிய குருதிச் செந்நீர்
நீத்தமாய் ஒழுகும்
வேலைப்

பாடுற வருங்கான்
ஒன்றில் பரத்தலின்
அதுவே செய்ய
காடெனப் பெயர்பெற்
றின்னுங் காண்டக
இருந்த தம்மா. 250
1158 ஆய்ந்தநல் லுணர்வின்
மேலோர் அறிவினும்
அணுகா அண்ணல்
ஈந்ததொல் வரத்தால்
மாயா இபமுகத்
தவுணன் வீழ்ந்து
வீந்தனன் போன்று
தொல்லை
மெய்யொரீஇ
விண்ணும் மண்ணுந்
தீந்திட எரிகண்
சிந்தைச் சீற்றத்தோ

ராகு வானான். 251

1159 தேக்கிய நதிசேர் கின்ற
சென்னியன் செம்மல்
தன்னைத்
தாக்கிய வருத
லோடுஞ் சாரதன்
தோளின் நீங்கி
நீக்கருந் துப்பின் தாக்கி
நீநமைச் சுமத்தி என்று
மேக்குயர் பிடரில்
தாவி வீற்றிருந் தூர்தல்
உற்றான். 252

1160 மற்றது கண்ட தேவர்
வாசவன் முதலோர்
யாரும்
இற்றனன் கயவெஞ்
சூரன் எம்மிடர்

போயிற் றன்றே
அற்றதெம் பகையும்
என்னா ஆடினர் பாடா
நின்றார்
சுற்றிய கலிங்கம் வீசித்
துண்ணென விசும்பு
தூர்த்தார். 253

1161 காமரு புயலின்
தோற்றங் காண்டலுங்
களிப்பின் மூழ்கி
ஏமரு கலாப மஞ்ஞை
இனமெனக் குலவு
கின்றார்
தேமரும் இதழி
அண்ணல் சிறுவனைத்
தெரியா வண்ணம
பூமலர் பொழிந்து

நின்று புகழினைப்
போற்றல் உற்றார். 254
11621 காப்பவன் அருளும்
மேலோன் கண்ணகல்
ஞாலம் யாவுந்
தீப்பவன் ஏனைச்
செய்கை செய்திடும்
அவனும் நீயே
ஏப்படுஞ் செய்கை
யென்ன எமதுளம்
வெதும்பும் இன்னல்
நீப்பது கருதி யன்றோ
நீயருள் வடிவங்
கொண்டாய். 255

1163 உன்னிடைப் பிறந்த
வேதம் உன்பெரு
நிலைமை தன்னை

இன்னதென் றுணர்ந்த
தில்லை யாமுனை
அறிவ தெங்ஙன்
அன்னையும்
பயந்தோன் தானும்
ஆயினை அதனால்
மைந்தர்
பன்னிய புகழ்ச்சி
யாவும் பரிவுடன்
கேட்டி போலாம். 256

1164 என்றிவர் எகினம்
ஊரும் இறையொடும்
இறைஞ்சி ஏத்தி
நன்றிகொள் சிந்தை
யோடு நகையொளி
முகத்த ராகி
மன்றவர் குமரன்
தன்பால் வந்தனர்

சூழ்த லோடும்
ஒன்றிய கருணை
நோக்கால் உலப்பிலா
அருள்பு ரிந்தான். 257

(250. செய்யகாடு -
செங்காடு; இது
தற்போது
திருச்செங்காட்டாங்குடி
என வழங்குகிறது.
251. தொல்லைமெய் -
யானைவடிவு. ஒரீஇ -
நீங்கி.
ஆகு - பெருச்சாளி.
252. பிடரி - முதுகு.
253. இற்றனன் -
இறந்தனன்.
கலிங்கம் - ஆடை.

254. கலாபம் -
தோகை. மஞ்ஞை -
மயில்.
257. எகினம் -
அன்னம்.)

1165 உய்ந்தனம் இனிநாம்
என்னா ஓதிமம்
உயர்த்தோன்
வெள¢ளைத்
தந்தியன் யாரும்
பேற்றிச் சார்தலுஞ
சமரின் முன்னம்
வெந்தொழில்
அவுணன் காயம்
வீந்திடு பூதர் தம்மை
எந்தையங் கினிது
நோக்கி எழுதிரென்
றருளிச் செய்தான்.

1166 அவ்வகை அருள
லோடும் அரவென
எழுந்து போற்றி
மைவரை மிடற்றுப்
புத்தேள் மைந்தனை
வணங்கி ஏத்தி
எவ்வமில் பூதர் யாரும்
ஈண்டினர் இனைய
எல்லாஞ்
செவ்விதில் உணர்ந்து
கொண்டான் தேசிலா
நிருதர்க் கீசன்.

259

1167 மந்திரி யோடுஞ்
சூழ்ந்து வருந்தினன்
புலம்பி மாழகி
உய்ந்தனன் போவல்

யானென் றுன்னிஓர்
பறவை யாகி
அந்தரத் திறந்த
புள்ளோ டணுகியப்
பதியை நீங்கிச்
சிந்தையிற் செல்லல்
கூரச் செம்பொன்மால்
வரையிற் சென்றான்.

1168 தாழுறு சார லூடு
தபனனும் உணராத்
தாருச்
சூழலொன் றுண்டால்
அங்கட் சுருங்கையோ
டிருந்த சேமப்
புழையுட் புலம்பி
உற்றான் பொன்னகர்
இறைக்கும் அங்கண்

ஊழிவெங் காலிற்
சூழும் உலப்பில்பூ
தர்க்கும் அஞ்சி. 261

1169 வானவர் பகைஞன்
அந்த மதங்கமா
புரியை நீங்கிப்
போனதோர் காலை
மற்றைப் புகருமோர்
புள்ள தாகித்
தானுறை உலகு
நண்ணித் தவமறைந்
தல்ல தாற்றி
ஊனுட லோம்பு
வார்போல் ஒருப்படா
யோகில் உற்றான்.
262

1170 பூதரும் அன்ன
வேலைப் புரிசைசூழ்

நகரம் போகி
நீதியில் அவுண ராகி
நிறங்கிளர்
படைகொண் டோரைக்
காதிவெஞ் சினப்போர்
முற்றிக் களத்திடை
வருத லோடும்
ஆதிதந் தருளும்
மைந்தன் அவ்விடை
அகன்று மீண்டான்.
263

1171 மீண்டுசெங் காட்டி
லோர்சார்
மேவிமெய்ஞ் ஞானத்
தும்பர்
தாண்டவம் புரியுந்
தாதை தன்னுருத்
தாபித் தேத்திப்

பூண்டபே ரன்பிற்
பூசை புரிந்தனன்
புவியு ளோர்க்குக்
காண்டகும் அனைய
தானங் கணபதீச் சரம 264
தென்பார்.

1172 புரமெரி படுத்தோன்
தன்னைப் பூசனை
புரிந்த பின்னர்
எரிவிழி சிதறும் ஆகு
எருத்தமேல் இனிதின்
ஏறிச்
சுரபதி அயன்விண்
ணோர்கள்
தொழுதுடன் சூழந்து
போற்ற
அரவென மாலோன்
வைகும் ஆலமா

வனத்திற் புக்கான். 
(258. ஓதிமம் -
அன்னம். வெள¢ளைத்
தந்தியன் - இந்திரன்.
259. அரவென -
ஹரஹர என்ற
ஒலியுடன்.
260. மந்திரி - இங்குச்
சுக்கிரன். பதியை -
மங்கத புரத்தை.
செல்லல் - வருத்தம்.
261. சாரல் - மலை
அடிவாரம். தபனன் -
சூரியன். சுருங்கை -
சிறு துவாரம்.
சேமம் - காவல்.
புழையுள் -
மரப்பொந்தில். 262.

வானவர் பகைஞன் -
அசுரேந்திரன்.
264. கணபதீச்சரம் -
இது திருச்செங்
காட்டாங்குடியில்
உள்ள சிவாலயத்தின்
பெயர்.)

ஆகத் திருவிருத்தம் - 1172

------

## 15. அனந்தன் சாப நீங்கு படலம் (1173- 1210)

1173 புக்கதொரு
பொழுதிலங்கண் முந்தோ
ராலம்
பொந்தினிடை

இருந்தமலன் பொற்றாள்
உன்னி
மிக்கதவம் புரிமாலைங்
கரத்து முன்னோன்
மேவியது
மனங்கொண்டு விரைவின்
ஆங்கே
அக்கணமே எதிர்சென்று
வழுத்திக் காண
அம்மையளித்
தருள்சாபம் அகற
லோடுஞ்
சக்கரமே முதலியஐம்
படைக ளேந்தித்
தனாதுதொல்லைப்
பேருருவந் தன்னைப் 1
பெற்றான்.
1174 மாலோன்தொல்

லுருவுதன்பால் மேவக்
கண்டு
        மகிழ்சிறந்து
சிவனருளை மனங்கொண்
டேத்தி
மேலோன்தன்
முன்னரெய்தி வணக்கஞ்
செய்து
        மீண்டுமவன்
தனைத்துதித்து விமல
நீயென்
பாலோங்கு பூசனைகொண்
டருளல் வேண்டும்
        பணித்தருள்க ஆதிபரா
பரத்தின் பாலாய்
மூலோங்கா
ரப்பொருளாய் இருந்தாள்
ன்னம்

மொழிந்தருள்சா
பந்தொலைத்த முதல்வ
என்றான். 2
1175 ஐங்கரன்றான் மாலுரைத்த
மாற்றங் கேளா
அன்னதுசெய்
கெனஅருளி அங்கண்
மேவக்
கொங்குலவு மஞ்சனநீர்
சாந்த மாலை
கொழும்புகையே
முதலியன கொண்டு
போந்து
சங்கரனார் மதலைதனை
அருச்சித் தன்பால்
தாவறுபண்
ணியம்பலவுஞ் சால்பில்
தந்து

பொங்கியபால்
அவியினொடு முன்ன
மார்த்திப்
போற்றியே
இ·தொன்று புகலல்
உற்றான். 3
1176 விண்ணாமம் புகல்கின்ற
திங்கள் தன்னில்
மிக்கமதி தனிலாறாம்
பக்க மாகும்
இந்நாளில் யானுன்னை
அருச்சித் திட்ட
இயறகைபோல்
யாருமினி ஈறி லாவுன்
பொன்னாரும் மலரடியே
புகலென் றுன்னிப்
பூசைபுரிந் திடவுமவர்
புன்கண் எல்லாம்

அந்நாளே அகற்றிநீ
யுலவாச் செல்வம்
அளித்திடவும்
வேண்டுமி· தருள்க
வென்றான்.

(1. அமலன் - சிவன்.
ஐம்படை - சங்கு, சக்கரம்,
வாள், வில்,
கதை என்பன.
2. மேலோன் - இங்கு
விநாயகக் கடவுள். 3.
பண்ணியம் -
பலகாரங்கள்.
பாலவி - பாற்சோறு.
ஆர்த்தி - நிவேதித்து.
4. வில் நாமம் புகல்கின்ற
திங்கள் - மார்கழி மாதம்.

மிக்கமதி - சுக்கிலபட்சம்.
ஆறாம் பக்கம் -
சஷ்டிதிதி.) 4

1177 மாயனுரை கேட்டலுநீ
மொழிந்தற் றாக
மகிழ்ந்தனநின்
பூசையென மதித்துக் கூறி
ஆயவனும் அயன்முதலா
வுள்ளோர் யாரும்
அன்பினொடு
வாழ்த்திசைப்ப ஆகு
என்னுந்
தூயதொரூர் தியிலெய்திக்
கணங்க ளானோர்
சூழ்ந்துரக்
கயிலையெனுந் துகடீர்
வெற்பின்

நேயமுடன் போந்தரனை
வணக்கஞ் செய்து
நீடருள்பெற்
றேதொல்லை நிலையத்
துற்றான். 5

1178 வேறு
அற்றை நாளில் அரியயன்
ஆதியோர்
நெற்றி யங்கண் நிமலன்
பதங்களின்
முற்று மன்பொடு
மும்முறை தாழ்ந்தருள்
பெற்று நீங்கினர் பேதுறல்
நீங்கினார். 6

1179 கரிமு கம்பெறு கண்ணுதற்
பிள்ளைதாள்
பரவி முன்னம் பணிந்தனர்
நிற்புழி

அருள்பு ரிந்திட
அன்னதொர் வேலையில்
பரிவி னாலொர்
பரிசினைக் கூறுவார். 7

1180 எந்தை கேண்மதி எம்மை
அலைத்திடுந்
தந்தி மாமுகத் தானவற்
செற்றியால்
உய்ந்து நாங்கள் உனதடி
யோமிவண்
வந்து நல்குகைம் மாறுமற்
றில்லையே. 8
1181 நென்னல் காறும் நிகரில்
கயாசுரன்
முன்ன ராற்று முறைப்பணி
எந்தைமுன்
இன்ன நாட்டொட்

டியற்றுதும் யாமென
அன்ன செய்திரென்
றான்அருள் நீர்மையான். 9
1182 இத்தி றம்படும்
எல்லையின் நின்றிடும்
அத்த லைச்சுரர் யாவரும்
அன்புறீஇக்
கைத்த லத்தைக் கபித்தம
தாக்கியே
தத்தம் மத்தகந் தாக்கினர்
மும்முறை. 10
1183 இணைகொள் கையை
யெதிரெதிர் மாற்றியே
துணைகொள் வார்குழை
தொட்டனர் மும்முறை
கணைகொள் காலுங்
கவானுஞ் செறிந்திடத்
தணிவி லன்பொடு

தாழந்தெழுந் தேத்தினார். 11

1184 இணங்கும் அன்புடன்
யாருமி தாற்றியே
வணங்கி நிற்ப மகிழ்சிறந்
தான்வரை
அணங்கின் மாமகன்
அவ்வியல் நோக்கியே
கணங்க ளார்த்தன
கார்க்கட லாமென.

(6. செற்றி -
கொன்றருளினீர். மதி -
முன்னிலையசை.
10. கபித்த மது ஆக்கி -
மூடிக்கொண்டு. மத்தகம் -
நெற்றி.
11. துணை - இரண்டு.
கணைகொள்கால் -

கணைக்கால். கவான் -
தொடை.) 12

1185 நின்ற தேவர் நிமலனை
நோக்கியே
உன்றன் முன்னம்
உலகுளர் யாவரும்
இன்று தொட்டெமைப்
போலிப் பணிமுறை
நன்று செய்திட நல்லருள்
செய்கென. 13

1186 கடனி றத்துக் கயமுகன்
அத்திற
நடைபெ றும்படி நல்கிஅ
மரர்கோன்
நெடிய மாலயன் நின்றுள
ருக்கெலாம்
விடைபு ரிந்து விடுத்தனன்

என்பவே. 14

1187 அம்பு யக்கண் அரியயன்
வாசவன்
உம்பர் அவ்வரை
ஒல்லையின் நீக்குறாத்
தம்ப தந்தொறுஞ்
சார்ந்தனர் வைகினார்
தும்பி யின்முகத் தோன்றல்
அருளினால். 15

1188 முந்தை வத முதலெழுத்
தாகிய
எந்தை தோற்றம்
இயம்பினம் இங்கினி
அந்த மில்குணத்
தாண்டகைக் கோர்குணம்
வந்ததென் னென்றி மற்றது
கேட்டிநீ.
16

1189 வேறு

நற்குண முடைய
நல்லோரும் நாடொணாச்
சிற்குணன் ஆகுமச்
சிவன்ப ராபரன்
சொற்குண மூவகைத்
தொடர்பும் இல்லதோர்
நிர்க்குணன் அவன்செயல் 17
நிகழ்த்தற் பாலதோ.

1190 பரவிய வுயிர்க்கெலாம்
பாசம் நீக்குவான்
அருளினன் ஆகியே
அமலன் மாலயற்
கிருதொழின் முறையினை
ஈந்து மற்றவைக்
குரியன குணங்களும்
உள்ள வாக்கினான். 18

1191 முடித்திடல் இயற்றுஎம

முதல்வன் அத்தொழில்
தடுப்பரும் வெஞ்சினந்
தன்னில் முற்றுமால்
அடுத்தவப் பான்மையால்
அதன்கண் தாமதம்
படுத்தினன் அத்திறம்
பலருந் தேர்வரால். 19
1192 மாமறை அளப்பில
வரம்பில் ஆகமந்
தோமற உதவியோர்
தொன்ம ரத்திடைக்
காமரு முனிவரர்
கணங்கட் கன்னவை
தாமத குணத்தனேல் சாற்ற
வல்லனோ.

(13. நிமலனை -
விநாயகப் பெருமானை.

இப்பணிமுறை -
குட்டிக்கொண்டு
தோப்புக்கரணம் போட்டு
வழிபடுதலை.
15. தும்பியின்
முகத்தோன்றல் - கணபதி.
16. அந்தமில் குணத்து
ஆண்டகை -
சிவபெருமான்.
17. மூவகைக் குணம் -
சாத்து விதம், இராசதம்,
தாமதம் என்னும்
மூவகைக் குணம்.
18. இருதொழில் -
காத்தல், படைத்தல்
என்பன.
19. சங்காரத் தொழில்
தாமத குணம்

அமைந்துள்ளது என்க.
20. அன்னவை -
வேதசிவாகமங்கள். தாமத
குணத்தனேல் -
தாமதகுணத்தராயின்.) 20

1193 வாலிய நிமலமாமம்
வடிவங் கண்ணுதல்
மேலவன் எய்துமோ
வேதம் விஞ்சையின்
மூலமென் றவனையே
மொழியு மோவிது
சீலமில் லார்க்கெவன்
தேற்றும் வண்ணமே. 21
1194 இமையவர் யாவரும்
இறைஞ்சுங் கண்ணுதல்
விமலன்அன் றிறுதியை
விளைக்கும் பண்பினால்

தமகுணன் என்றியத்
தன்மை செய்கையால்
அமைகுண மியற்குணம்
அறியற் பாலதோ. 22

1195 ஈத்தலும் அளித்தலும்
இயற்று வோர்க்குவ
சாத்திக ராசதந் தத்தஞ்
செய்கையின்
மாத்திரை யல்லது மற்ற
வர்க்கவை
பார்த்திடின் இயற்கையாப்
பகர லாகுமோ. 23

1196 அக்குண மானவை
அளிக்குஞ் செய்கையால்
தொக்குறும் இயற்கையத்
தொல்லை யோர்கள்பால்
இக்குண மல்லதோர்
இரண்டுஞ் சேருமால்

முக்குண நெறிசெலும்
முனிவர் தேவர்போல். 24

1197 நேமியாற் குருவெலாம்
நீல மாயதுந்
தோமறு கடலிடைத்
துயில்கொள் பான்மையும்
மேமுறும் அகந்தையும்
பிறவு மெய்துமேல்
தாமத ராசதந் தானு 25
முற்றவே.

1198 அறிவொருங் குற்றுழி
அனையன் கண்ணுதல்
இறைவனை வழிடீஇ
ஏத்தி இன்னருள்
நெறிவரு தன்மையும் நீடு
போதமும்
பெறுதலிற் சாத்திக

முறையும் பெற்றுளான். 26
1199 மேனிபொற் கென்றலின்
விமல வான்பொருள்
நானெனும் மருட்கையின்
நவையில் ஈசனைத்
தானுணர் தெள¤வினில்
தவத்திற் பூசையில்
ஆனது குணனெலாம்
அயன்ற னக்குமே.
27

1200 ஆதலின் விருப்புடன்
அல்ல தெய்தினோர்
ஓதிய குணவிதத் துவர்
கண்ணுதல்
நாதனுக் கனையது நணுகு
றாமையால்
பேதைமை ஒருகுணம்
அவன்கட் பேசுதல். 28

1201 மூன்றென உளபொருள்
யாமும் முன்னமே
ஈன்றவன் கண்ணுதல்
என்னும் நான்மறை
சான்றது வாகுமால்
தவத்தர்க் கென்னினும்
ஆன்றதோர் அவன்செயல்
அறியற் பாலதோ.

(23. படைத்தல் தாழிலில்
சாத்துவித குணமும்,
காத்தல் தொழிலில்
இராசத குணமும் உள்ளன
என்க. 27. மருட்கை -
மயக்கம்.
28. மூன்றென உள
பொருள் யாவும் -
மும்மாயா தத்துவப்

பொருள்
அனைத்தையும்.) 29

1202 செங்கண்மால் முதலிய
தேவர் ஏனையோர்
அங்கவர் அல்லவை
அகத்துள் வைகியே
னுங்குமா யாவையும்
இயற்று கின்றதோர்
சங்கரன் ஒருகுணச்
சார்பின் மேவுமோ. 30

1203 ஈறுசெய் முறையினை
எண்ணித் தாமதங்
கூறினர் அல்லது
குறிக்கொள் மேலையோர்
வேறொரு செய்கையின்
விளம்பி னாரலர்
ஆறணி செஞ்சடை அமல

னுக்கரோ. 31
1204 வேறு
என்றிவை பலவுந்
தூயோன் இசைத்தலும்
இனைய வெல்லம்
வன்றிறல் வெறுக்கை
எய்தி மயங்கலால் தக்கன்
என்னும்
புன்றொழில் புரியுந்
தீயோன் பொறுத்திலன்
புந்தி மீது
நன்றென அறிதல்
அதற்றான் ஒருசில
நவிலல் உற்றான். 32
1205 முனிவகேள் பலவும்
ஈண்டு மொழிவதிற்
பயனென் வெள¢ளிப்
பனிவரை உறையும்

நுங்கோன் பகவனே
எனினு மாக
அனையவன் தனக்கு
வேள்வி அவிதனை
உதவேன் நீயும்
இனியிவை மொழியல்
போதி என்செயல்
முடிப்பன் என்றான். 33

1206 வேறு
வளங்குலவு தக்கனிது
புகன்றிடலுந்
ததீசிமுனி மனத்திற்
சீற்றம்
விளைந்ததுமற்
றவ்வளவில் வெருவியது
வடவையழல்
விண்ணோர் நெஞ்சந்
தளர்ந்ததுபொன்

மால்வரையுஞ் சலித்தந்தக்
குலகிரியுந் தரிப்பின்
றாகி
உளைந்தனவே
லைகள்ஏழும் ஒடுங்கியன
நடுங்கியதிவ் வுலகம்
எல்லாம். 34

1207 அக்கணமே முனிவரன்தன்
பெருஞ்சீற்றந்
தனைநோக்கி அந்தோ
என்னால்
எக்குவடும் எக்கிரியும்
எக்கடலும்
எவ்வுலகும் யாவும்
யாருந்
தக்கன்ஒரு
வன்பொருட்டால்

தளர்ந்திடுமோ
எனமுனிவு தணிந்து
தற்சூழ்
ஒக்கலாடும்
அவணெழுந்து
சிறுவிதியின்
முகநோக்கி ஒன்று
சொல்வான்.
1208 சங்கரனை விலக்கியின்று
புரிகின்ற
மகஞ்சிதைக தக்க
நின்னோ
டிங்குறையும்
அமரரெலாம் அறிவுறவின்
னேயென்னா
இசைத்துப் பின்னர்
அங்கணுறு மறையோர்தம்
முகநோக்கி

அந்தணரில் அழிதூ
வானீர்
உங்கள்குலத்
தலைமைதனை
இழந்திட்டீர்
கேண்மினென
உரைக்கல் உற்றான். 36
1209 பேசரிய மறைகளெலாம்
பராபரன்நீ
எனவணங்கிப் பெரிது
போற்றும்
ஈசனையும் அன்பரையும்
நீற்றொடுகண்
டிகையினையும்
இகழ்ந்து நீவிர்
காசினியின் மறையவராய்
எந்நாளும்
பிறந்திறந்து கதியு

றாது
பாசமத னிடைப்பட்டு
மறையுரையா
நெறியதனிற் படுதிர்
என்றான். 37

1210 இனையநெறி யாற்சாபம்
பலவுரைத்துத்
ததீசிமுனி இரண்டு
பாலும்
முனிவர்தொகை தற்சூழத்
தானுறையும்
ஆச்சிரம முன்னிச்
சென்றான்
அனையவன்தன்
பின்னாகத்
தக்கனென்போன்
பெருந்தகவும் ஆற்றும்

நோன்பும்
புனைபுகழுஞ்
செழுந்திருவும்
ஆற்றலுமாம்
    மனச்செருக்கும்
போயிற் றன்றே.

(31. ஈறு செய்முறை -
சங்காரத் தொழில்.
33. மொழியல் -
உரையாதே.
போதி - போவாய். 35.
முனிவு - கோபம். ஒக்கல் -
சுற்றத்தினர்.
36. அழிதூவானீர் -
பேடியாயுள்ளவர்களே.
37. மறையுரையாநெறி -
அவைதிக மார்க்கம்.

படுதிர் - புகுதிர்.) 

ஆகத் திருவிருத்தம் - 1210

------

## **16.** தானப் படலம் **( 1211- 1256 )**

1211 போனதோர்
பொழுதிலவன் துவசமிற்ற
மகத்தூணிற் பொருக்கென்
றெய்திக்
கானுலா வியகொடியுங்
கழுகுமிடைந்
தனயாருங் கலங்கத் தானே
மானமார் வேதவல்லி
மங்கலநா
ணுங்கழன்ற மற்றித்
தன்மை

ஆனதோர் துன்னிமித்தம்
பலவுண்டால்
முடிவோன்கண் அவையு
றாவோ. 1

1212 வேறு
இந்த வாறுதுன்
னிமித்தங்கள் பலநிகழ்ந்
திடவுஞ்
சிந்தை செய்திலன்
சிறுவதும் அஞ்சிலன்
தீயோன்
தந்தை தன்னையும்
நாரணன் தன்னையுந்
தகவால்
முந்து பூசனை புரிந்தனன்
முகமன்கள் மொழியா. 2

1213 மற்றை வானவர்

யாவர்க்கும் முனிவர்க்கும்
மரபால்
எற்று வேண்டிய
அவையெலாம் நல்கியே
இதற்பின்
பெற்ற மங்கையர்
தமக்கும்மா மருகர்க்கும்
பெரிதும்
அற்ற மில்லதோர் மங்கலத்
தொல்சிறப் பளித்தான். 3
1214 நாலு மாமுகக் கடவுள்சேய்
இத்திறம் நல்கி
மாலும் யாவருங்
காத்திடத் தீத்தொழில்
மகஞ்செய்
வேலை நோக்கியே
தொடங்கினன் அவ்விடை
வேள்விச்

சாலை தன்னிடை
நிகழ்ந்தன சாற்றுவன்
தமியேன். 4

1215 முன்னரே தக்கன் ஏவலும்
வினைசெயல் முறையால்
மன்னு தேனுவோ ராடகச்
சாலையின் மாடே
பொன்னின் மால்வரை
நடுவுசேர் வெள்ளியம்
பொருப்பை
அன்ன தாமென
அன்னமாம் பிறங்கலை
அளித்த. 5

1216 ஏதம் நீங்கிய தீயபால்
அடிசிலும் எண்ணில்
பேத மாகிய முதிரையின்
உண்டியும் பிறவாம்

ஒத னங்களும் வீற்றுவீற்
றாகவே உலகின்
மாதி ரங்களிற் குலகிரி 6
யாமென வகுத்த.
1217 நெய்யி னோடளாய்
விரைகெழு நுண்டுகள்
நீவிக்
குய்யின் ஆவியெவ்
வுலகமும் நயப்புறக்
குழுமி
வெய்ய தாகிய கருனைகள்
திசைதொறும் மேவும்
மையல் யானைக ளாமென
வழங்கிற்று மாதோ. 7
1218 அண்ணல் சேர்வெந்தை
(1)தோயவை
நொலையலே ஆதிப்
பண்ணி யங்களுந்

தாரமுங் கனிவகை
பலவும்
மண்ணின் மேலுறு
கிரியெலாங் குலகிரி
மருங்கு
நண்ணி னாலெனத்
தொகுத்தன யாவரும்
நயப்ப.
*பா-ம் - (1) தோசையே) 8
1219 விருந்தி னோர்கொள
விழுதுடன் பால்தயிர்
வெள¢ளந்
திருந்து கங்கையும்
யமுனையு மாமெனச்
செய்த
அருந்தும் உண்டிகள்
யாவையும் வழங்குகோ
அதனில்

பொருந்து கின்றது
தந்ததென் றாலது புகழோ. 9
தாவில் பாளித மான்மதஞ்
சாந்துதண் பனிநீர்
நாவி வெள¢ளடை
செழும்பழுக் காயொடு
நறைமென்
பூவு மேனைய
பொருள்களும் நல்கின
புகழ்சேர்
தேவர் கோமகன் பணிபுரி
கின்றதோர் தேனு. 10

(1. துவசம் - கொடி. கொடி - காகம். மங்கல நாண் - திருமங்கலியம்.
2. சிறுவதும் - சிறிதும். மொழியா - மொழிந்து. 4. தமியேன் - அடியேன்.

5. ஆடகச்சாலை - பொன்மயமான பாகசாலை. அன்னமாம் பிறங்கல் - சோறாகிய மலை. 6. முதிரை - கடலை. ஓதனம் - சோறு. 7. நீவி - கலந்து. குய் - தாளிப்பு. கருனைகள் - பொரிக்கறிகள். 8. வெந்தை - பிட்டு. தோயவை - தோசை. நொலையல் - அப்பம். பண்ணியங்கள் - பலகாரங்கள். தாரம் - அருமைப் பண்டங்கள். 9. விழுது - நெய். கோ - காமதேனு. 10. பாளிதம் -

கர்ப்பூரம்.
மான்மதம் - கஸ்தூரி. நாவி
புனுகு. வெள¢ளேடை -
வெற்றிலை.
பழுக்காய் - பாக்கு. நறை -
தேன். தேனு - காமதேனு.)

1221 ஆவ திவ்வகை யாவது
நல்கியே அங்கண்
மேவு கின்றது
மணியும்அச் சங்கமும்
வியன்சேர்
காவும் அம்புய நிதியமுந்
தக்கனாங் கடியோன்
ஏவ லாலருட் சாலையில்
அடைந்தன இமைப்பில். 11

1222 கணித மில்லதோர்
பரிதிகள் மேனியிற்

கஞுலும்
மணிக ளோர்புடை
தொகுத்தன ஆடக
வரைபோல்
அணிகொள் காஞ்சன
மோர்புடை தொகுத்தன
அம்பொற்
பணிக ளாடைக
ளோர்புடை தொகுத்தன
படைத்தே. 12
1223 மற்றும் வேண்டிய
பொருளெலாம் உதவிஅம்
மருங்கில்
உற்ற வேலைஅத் தக்கன
தேவலின் ஒழுகா
நிற்றல் போற்றிய
முனிவரர் யாவரும்
நிலத்தோர்க்

கிற்றெ லாமிவண்
வழங்குதும் யாமென
இசைத்தார். 13

1224 வேறு
இன்ன வேலையில்
இச்செயல் யாவையும்
முன்ன மேயுணர் முப்புரி
நூலினர்
துன்னி மேயமனந்
தூண்டவந் தொல்லையில்
அன்ன சாலை
தனையணைந் தாரரோ. 14

1225 சாலை காண்டலுந்
தக்கனை ஏத்தியே
பாலர் தன்மையிற் பாடினர்
ஆடினர்
கோல மார்பிற் குலாவிய

வெண்டுகில்
வேலை யாமென வீசிநின்
றார்த்துளார். 15
1226 மிண்டு கின்றஅவ்
வேதியர் தங்களைக்
கண்டு வம்மின் கதுமென
நீரெனாக்
கொண்டு சென்று
குழுவொடி ருத்தியே
உண்டி தன்னை உதவுதல் 16
மேயினார்.
1227 மறுவில் செம்பொன்
மணிகெழு தட்டைகள்
இறுதி யில்லன
யாவர்க்கும் இட்டுமேல்
நறிய உண்டிகள் நல்கியின்
னோர்தமக்
குறவி னாரென ஊட்டுவித்

தார்அவண். 17
1228 அன்ன காலை அரும்பசி
தீர்தரத்
துன்ன வுண்டுஞ்
சுவையுடைத் தாதலால்
உன்னி உன்னியிவ்
வுண்டிகள் சாலவும்
இன்னம் வேண்டு
மெனவுரைப் பார்சிலர். 18

(11. மணி - சிந்தாமணி.
சங்கம் - சங்கநிதி. கா -
கற்பகத்தரு.
அம்புயநிதி - பதுமநிதி.
12. கஞலும் -
விளங்குகின்ற. ஆடகம்,
காஞ்சனம் - இவைகள்
பொன்களின் வகைகள்.

17. தட்டைகள் - தாம்பாளங்கள்.)

1229 குற்ற மொன்றுள கூறுவ தென்னினி
நற்றவஞ் செய்து நான்முக னால்இவண்
உற்ற உண்டி யெலாமுண ஓர்பசி
பெற்றி லோமெனப் பேதுறு வார்சிலர். 19

1230 வீறு முண்டி மிசைந்திட வேண்டும்வாய்
நூறு நூற தெனநுவல் வார்தமை
ஏற வேண்டு மிதிலமை யாதெனச்
சீறி யேயிகல் செய்திடு வார்சிலர்.

20

1231 புலவர் கோன்நகர்
போற்றிய தேனுவந்
தலகில் இவ்வுண வாக்கிய
தாலெனாச்
சிலர்பு கன்றனர் தேக்கிட
உண்மினோ
உலவ லீரென ஓதுகின்
றார்சிலர்.
21

1232 அறிவி லாத அயன்மகன்
யாகம்இன்
றிறுதி யாமென்
றிசைத்தனர் அன்னது
பெறுதி யேனுமிப் பேருண
வேநமக்
குறுதி வல்லையில்
உண்மினென் பார்சிலர். 22

1233 உண்டி லேம்இவண்
உண்டதில் ஈதுபோற்
கண்டி லேம்ஒரு காட்சியும்
இன்பமுங்
கொண்டி லேம்இன்று
கொண்டதில் ஈசனால்
விண்டி லேம்எனின்
மேலதென் பார்சிலர். 23

1234 எல்லை யில்லுண
வீயும்இத் தேனுவை
நல்ல நல்லதொர்
நாண்கொடி யாத்திவண்
வல்லை பற்றிநம் மாநக
ரிற்கொடு
செல்லு தும்மெனச்
செப்புகின் றார்சிலர். 24

1235 மக்கள் யாவரும் வானவர்

யாவரும்
ஒக்கல் யாவரும் உய்ந்திட
வாழ்தலால்
தக்கன் நோற்ற தவத்தினும்
உண்டுகொல்
மிக்க தென்று விளம்புகின் 25
றார்சிலர்.
1236 மைந்தன் இட்டன மாந்திட
நான்முகன்
தந்தி லன்வயின் சாலவும்
ஆங்கவன்
சிந்தை மேலழுக் காறுசெய்
தானெனா
நொந்து நொந்து
நுவலுகின் றார்சிலர். 26
1237 குழுவு சேர்தரு குய்யுடை
உண்டிகள்
விழைவி னோடு

மிசைந்தன மாற்றவும்
பழுதி லாவிப் பரிசனர்
தம்மொடும்
எழுவ தெப்படி என்றுரைப்
பார்சிலர். 27

(20. வீறும் - மிக்க. இகல் -
சண்டை.
21. புலவர்கோன் -
இந்திரன்.
25. ஒக்கல் - சுற்றம்.
27. குழுவு - (வாசனைப்)
பொருள்களின்
கூட்டம்.பரிசனர் -
நட்பினர்.)

1238 இந்த நல்லுண வீண்டு
நுகர்ந்திட

நந்தம் மைந்தரை
நம்மனை யாங்கொடு
வந்தி லம்மினி வந்திடு
மோவெனாச்
சிந்தை செய்தனர் 28
செப்புகின் றார்சிலர்.
1239 அன்ன பற்பல ஆர்கலி
யாமெனப்
பன்னி நுங்கும் பனவர்கள்
கேட்டனர்
என்ன மற்றவை
யாவையும் ஆர்தர
முன்ன ளித்து முனிவர்
அருத்தினார். 29
1240 அருத்தி மிச்சில் அகற்றி
அருந்தவ
விருத்தி மேவிய வேதியர்

தங்களை
இருத்தி மற்றொர்
இருக்கையில் வாசநீர்
கரைத்த சந்தின் கலவை
வழங்கினார். 30

1241 நளிகு லாவிய நாவி
நரந்தம்வெண்
பளிதம் வெள்ளடை
பாகுடன் ஏனவை
அளியு லாவும் அணிமலர்
யாவையும்
ஒளிறு பீடிகை உய்த்தனர்
நல்கினார். 31

1242 அரைத்த சாந்தம்
அணிந்துமெய் எங்கணும்
விரைத்த பூந்துணர்
வேய்ந்துபைங் காயடை
பரித்து நின்ற பனவர்புத்

தேளுறுந்
தருக்க ளாமெனச்
சார்ந்தனர் என்பவே. 32

1243 ஆன பான்மையில்
அந்தணா யாவரும்
மேன காதலின் வெய்தென
ஏகியே
வான மண்ணிடை
வந்தென ஏர்கெழு
தான சாலை தனையடைந்
தார்களே. 33

1244 அடையும் வேலை
அயனருள் காதலன்
விடையி னால்அங்கண்
மேவு முனிவரர்
இடைய றாதவர்க் கீந்தனர்

ஈந்திடுங்
கொடையி னால்எண்ணில்
கொண்டலைப் 34
போன்றுளார்.
1245 பொன்னை நல்கினர்
பூணொடு பூந்துகில்
தன்னை நல்கினர் தண்சுட
ரோனென
மின்னை நல்கும்
வியன்மணி நல்கினர்
கன்னி யாவுங் கறவையும்
நல்கினார். 35
1246 படியி லாடகப் பாதுகை
நல்கினர்
குடைகள் நல்கினர்
குண்டிகை நல்கினர்
மிடையும் வேதியர்
வேண்டிய வேண்டியாங்

கடைய நல்கினர்
அங்கைகள் சேப்பவே. 36

(29. ஆர்கலி - கடல்.
பன்னி - கூறி. நுங்கும் - உண்ணும்.
பனவர்கள் - அந்தணர்கள்.
30. மிச்சில் - எச்சில்.
31. நாவி - புனுகு. நரந்தம் - கஸ்தூரி.
33. தானசாலை - தானம் வழங்கும் இடம்.
34. இங்குத் தானங்களை வரையறை இன்றி வழங்கினார்கள் என்க.
35. கன்னிஆ - கன்னிப் பசு; கடாரி. கறவை - கன்றுடைய பசு.)

1247 இந்த வண்ணம்
இறையதுந் தாழ்க்கிலர்
முந்து நின்ற முனிவரர்
ஆண்டுறும்
அந்த ணாளர்க் கயினியொ
டாம்பொருள்
தந்து நின்று தயங்கினர்
ஓர்புடை. 37

1248 அற்ற மில்சிறப் பந்தணர்
ஆயிடைப்
பெற்ற பெற்ற பெருவளன்
யாவையும்
பற்றி மெல்லப் படர்ந்தனர்
பற்பல
பொற்றை செய்தனர்
போற்றினர் ஓர்புடை. 38

1249 வரத்தி னாகும் வரம்பில்

வெறுக்கைதம்
புரத்தி னுய்த்திடும்
புந்தியில் அன்னவை
உரத்தி னால்தமக்
கொப்பரும் வேதியர்
சிரத்தின் மேற்கொடு 39
சென்றனர் ஓர்புடை.

1250 அரிதன் ஊர்தியும்
அன்னமும் கீழ்த்திசை
அரிதன் ஊர்தியும்
ஆங்கவன் மாக்களும்
அரிதன் ஊர்தியும்
ஆருயிர் கொண்டிடும்
அரிதன் ஊர்தியும்
ஆர்ப்பன ஓர்புடை. 40

1251 தான மீது தயங்கிய
தேவரும்
ஏனை யோர்களும்

இவ்விடை ஈண்டலின்
மீன மார்தரு விண்ணென
வெண்ணிலா
மான கோடி மலிகின்ற
ஓர்புடை. 41

1252 நரம்பின் வீணை ஞரலுறும்
வேய்ங்குழல்
பரம்பு தண்ணுமை
பண்ணமை பாடல்நூல்
வரம்பின் ஏய்ந்திட
வானவர் வாடவே
அரம்பை மார்கள்நின்
றாடினர் ஓர்புடை. 42

1253 தேவர் மாதருஞ் சிற்சில
தேவருந்
தாவி லாமகச் சாலையின்
வைகிய

காவு தோறுங் கமல
மலர்ந்திடும்
ஆவி தோறும்உற் றாடினர் 43
ஓர்புடை.
1254 வேத வல்லி வியப்புடன்
நல்கிய
காதல் மாதருங் காமரு
விண்ணவர்
மாத ராருஞ் சசியும்
மகத்திரு
ஓதி நாடியங் குற்றனர்
ஓர்புடை. 44
1255 இனைய பற்பல எங்கணும்
ஈண்டலிற்
கனைகொள் பேரொலி
கல்லென ஆர்த்தன
அனையன் வேள்விக்
ககன்கடல் யாவையுந்

துனைய வந்தவண்
சூழ்ந்தன போலவே. 45 18

1256 ஊன மேலுறும் உம்பரும்
இம்பரும்
ஏன காதலின் மிக்கவண்
ஈண்டுவ
வான யாறு வருந்தி
யும்புவித்
தான யாறுந் தழீஇயின
போன்றவே.
46

(37. அயினி - சோறு. 38.
பொற்றை - மலை.
39. வெறுக்கை - செல்வம்.
40. கீழ்த்திசை அரி -
இந்திரன்; இவன்
ஊர்தி ஐராவதம். மாக்கள் -

இங்கு உச்சைச் சிரவ
முதலிய குதிரைகள்.
அரிதன் ஊர்தி அக்கினி
தேவன் வாகனமான
ஆட்டுக்கடா.
41. தானமீது -
சுவர்க்கத்தில். 42.
ஞரலுறும் - ஒலிக்கும்.
43. மகச்சாலை -
யாகசாலை. ஆவி -
வாவிகள்.
46. ஊனம் மேலுறும் -
வருங்காலத்தில்
துன்பமடையும்.)

ஆகத் திருவிருத்தம் - 1256

-----

## 17. வேள்விப் படலம் (1257-

1257 இகந்த சீர்பெறும்
இப்பெருஞ் சாலையில்
அகந்தை மிக்க
அயன்பெருங் காதலன்
மகம்பு ரிந்தது மற்றது
சிந்திடப்
புகுந்த வாறும்
பொருக்கெனக் கூறுகேன். 1
1258 வேறு
மருத்து ழாய்முடி மாலயன்
பாங்குற மகத்தின்
கருத்த னாகிய தீயவன்
முன்னமே கருதி
வரித்த மேலவர் தங்களை
நோக்கியே மரபின்
இருத்து முத்தழல் என்றலும்

நன்றெனா இசைந்தார்.
2

1259 முற்றும் நாடிய
இருத்தினோர் அரணியின்
முறையால்
உற்ற அங்கியை வேதிகைப்
பறப்பைமேல் உய்த்துச்
சொற்ற மந்திர மரபினால்
பரிதிகள் சூழ்ந்து
மற்று முள்ளதோர்
விதியெலாம் இயற்றினர்
மன்னோ.
3

1260 ஆங்கு முத்தழல் விதிமுறை
செய்தலும் அயன்சேய்
பாங்கர் உற்றிடும்
இருத்தினர் யாரையும் பாரா
நீங்கள் உங்களுக் காகிய

செய்கையை நினைந்து
தூங்கல் இன்றியே
புரிமினோ கடிதெனச் 4
சொன்னான்.

1261 சொன்ன வாசகங்
கேட்டலும் இருத்தினோர்
தொகையின்
முன்ன மாகிய அம்மகந்
தனக்கவி முழுதும்
வன்னி யாதியாஞ்
சமிதையுந் தருப்பையும்
மற்றும்
இன்ன போல்வதுங்
கொடுவழங் கினர்களா
றிருவர். 5

1262 அந்த வேள்விசெய்
வித்தனர் ஒருவரால்
அவிகள்

எந்தை எல்லவர்
கொள்ளவே அவரவர்க்
கிசைத்த
மந்தி ரந்தனைப் புகன்றனர்
ஒருவர்அவ் வானோர்
தந்த மைக்குறித் தழைத்தனர் 6
ஒருவர்பேர் சாற்றி.
1263 மற்ற வார்க்கெலாம்
அமைந்திடும் அவிகளை
மலர்க்கை
பற்றி யங்கிவாய்
அளித்தனர் ஒருவர்அப்
பரிசின்
அற்றம் நோக்கியே
இருந்தனர் ஒருவர்அங்
கதற்கு
முற்றும் நல்லருள் புரிந்தனர்
ஒருவரம் முதல்போல். 7

1264 இருத்தி னோர்களும்
பிறரும்ஈ றியற்றுழி யாக
கருத்த னாகிய தக்கன்அத்
தேவரைக் கருதிப்
பரித்து நுங்குதிர் என்றவி
புரிதொறும் பகர்ந்தே
அருத்தி உற்றனன் கடவுளர்
தமக்கெலாம் அமுதின். 8

1265 திருந்து கின்றநற்
சுவையினால் தூய்மையால்
திகழும்
மருந்து போன்றன
என்னினும் உயிர்தொறும்
மனத்தும்
இருந்த எம்பிரான்
அன்றியே மிசைதலின்
இமையோர்க்
கருந்தும் நீரலா நஞ்சென

லாகிய அவிகள்.



(1. இகந்த - அளவு கடந்த.
2. மரு - வாசனை. மகத்தின் கருத்தன் -
யாக கருத்தா.
3. இருத்தினோர் - வேள்வியில் ஆசாரியனுக்கு ஒத்தாசை செய்பவர்; சாதகாசாரியர். அரணி - தீக்கடைக்கோல். அங்கி - அக்கினி.
பறப்பை - நெய் விடு கருவிகள். பரிதிகள் - யாக மேடைகள்.
5. வன்னியாதியாம் சமிதை - வன்னி முதலிய சமித்துக்கள்.

இருத்தினோர் ஆறு இருவர் என்க.
7. அங்கிவாய் அளித்தனர் - அக்கினிமூலமாக அளித்தனர்.
9. உயிர்தொறும் மனத்தும் இருந்த எம்பிரான் - சிவபெருமான்.
அருந்தும் நீரலா - உண்ணத்தகாத.)

ஆகத் திருவிருத்தம் - 1265

-------

## 18. உமைவரு படலம் (1266 - 1326 )

1266 பேசுமிவ் வேள்வி
பிதாமகன் மைந்தன்
நாசம் விளைந்தட நாடி
இயற்ற
மாசறு நாரத மாமுனி
யுற்றே
காசினி மேலிது கண்டனன்
அன்றே. 1

1267 கண்டனன் ஆலமர்
கண்டனை நீக்கிப்
புண்டரி கந்திகழ் புங்கவன்
மைந்தன்
அண்ட ருடன்மகம்
ஆற்றினன் அன்னான்
திண்டிறல் கொல்லிது
செய்திடல் என்னா. 2

1268 எண்ணிய நாரதன் எவ்வு
லகுஞ்செய்

புண்ணிய மன்னதொர்
பூங்க யிலாயம்
நண்ணிமுன் நின்றிடு
நந்திகள் உய்ப்பக்
கண்ணுதல் சேவடி
கைதொழு துற்றான். 3
1269 கைதொழு தேத்திய
காலஅன் னானை
மைதிகழ் கந்தர
வள்ளல்கண் ணுற்றே
எய்திய தென்னிவண்
இவ்வுல கத்தில்
செய்திய தென்னது
செப்புதி என்றான். 4
1270 எங்கணு மாகி இருந்தருள்
கின்ற
சங்கரன் இம்மொழி
சாற்றுத லோடும்

அங்கது வேலையில்
அம்முனி முக்கட்
புங்கவ கேட்டி
யெனப்புகல் கின்றான். 5

1271 அதிர்தரு கங்கை
அதன்புடை மாயோன்
விதிமுத லோரொடு
மேதகு தக்கன்
மதியிலி யாயொர்
மகம்புரி கின்றான்
புதுமையி தென்று
புகன்றனன் அம்மா. 6

1272 ஈங்கிது கூறலும் எம்பெரு
மான்றன்
பாங்கரின் மேவு பராபரை
கேளா
ஆங்கவன் மாமகம்
அன்பொடு காண்பான்

ஓங்கு மகிழ்ச்சி
உளத்திடை கொண்டாள். 7

1273 அங்கணன் நல்லரு
ளால்அனை யான்றன்
பங்குறை கின்றனள்
பாங்கரின் நீங்கி
எங்கள் பிரானை எழுந்து
வணங்கிச்
செங்கை குவித்திது
செப்புத லுற்றாள். 8

1274 தந்தை எனபடு தக்கன்
இயற்றும்
அந்த மகந்தனை
அன்பொடு நோக்கி
வந்திடு கின்றனன்
வல்லையில் இன்னே
எந்தை பிரான்விடை ஈகுதி
என்றாள்.

9

1275 என்றலும் நாயகன்
ஏந்திழை தக்கன்
உன்றனை எண்ணலன்
உம்பர்க ளோடும்
வன்றிறல் எய்தி மயங்குறு
கின்றான்
இன்றவன் வேள்வியில்
ஏகலை என்றான். 10

1276 இறையிது பேசலும்
ஏந்திழை வேதாச்
சிறுவ னெனப்படு
தீயதொர் தக்கன்
அறிவிலன் ஆகும்
அவன்பிழை தன்னைப்
பொறுமதி என்றடி
பூண்டனள் மாதோ. 11

1277 பூண்டனள் வேள்வி
பொருக்கென நண்ணி
மீண்டிவண் மேவுவல்
வீடருள் செய்யுந்
தாண்டவ நீவிடை
தந்தருள் என்றாள்
மாண்டகு பேரருள் வாரிதி 12
போல்வாள்.

1278 மாதிவை கூறலும்
வன்மைகொள் தக்கன்
மேதகு வேள்வி
வியப்பினை நோக்குங்
காதலை யேலது
கண்டனை வல்லே
போதுதி என்று புகன்றனன்
மேலோன். 13

(1. பிதாமகன் - பிரமன். 4.

மைதிகழ் கந்தரம் -
நீலகண்டம்.
6. கங்கை அதன்புடை -
கங்கா நதிக்கரையில்.
7. பராபரை - அம்பிகை.
10. ஏந்திழை -
உமாதேவியே!
வன்திறல் - மிக்க செருக்கு.
ஏகலை - போகாதே.
11. இறை -
சிவபெருமான். பொறுமதி
பொறுப்பாயாக.மதி :
முன்னிலையசை.
12. மாண்டகு - மாட்சிமை
மிக்க. வாரிதி - கடல்.)

1279

வேறு

அரன்பிடை புரிதலும்
அம்மை ஆங்கவன்
திருவடி மலர்மிசைச்
சென்னி தாழ்ந்தெழா
விரைவுடன் நீங்கியோர்
விமானத் தேறினாள்
மரகத வல்லிபொன் 14
வரையுற் றாலென.

1280 ஐயைதன் பேரருள்
அனைத்தும் ஆங்கவள்
செய்யபொன் முடிமிசை
நிழற்றிச் சென்றெனத்
துய்யதொர் கவுரிபாற்
சுமாலி மாலினித்
தையலார் மதிக்குடை
தாங்கி நண்ணினார்.

15

1281 துவரிதழ் மங்கலை

சுமனை யாதியோர்
கவரிகள் இரட்டினர் கவுரி
பாங்கரில்
இவர்தரும் ஓதிமம்
எண்ணி லாதஓர்
அவிர்சுடர் மஞ்ஞைபால்
அடைவ தாமென. 16

1282 கால்செயும் வட்டமுங்
கவின்கொள் பீலியும்
மால்செயும் நறுவிரை
மல்க வீசியே
நீல்செயும் வடிவுடை
நிமலை பாற்சிலர்
வேல்செயும் விழியினர்
மெல்ல ஏகினார். 17

1283 கோடிகம்
அடைப்பைவாள் குலவு

கண்ணடி
ஏடுறு பூந்தொடை ஏந்தி
யம்மைதன்
மாடுற அணுகியே மானத்
தேகினார்
தோடுறு வரிவிழித் 18
தோகை மார்பலர்.

1284 நாதன தருள்பெறு நந்தி
தேவியாஞ்
சூதுறழ் பணைமுலைச்
சுகேசை என்பவள்
மாதுகை திருவடி மலர்கள்
தீண்டிய
பாதுகை கொண்டுபின்
படர்தல் மேயினாள்.
19

1285 கமலினி அனிந்திதை
என்னுங் கன்னியர்

அமலைதன் சுரிகுழற் கான
பூந்தொடை
விமலமொ டேந்தியே
விரைந்து செல்கின்றார்
திமிலிடு கின்றதொல் சேடி
மாருடன். 20

1286 அடுத்திடு முலகெலாம்
அளித்த அம்மைசீர்
படித்தனர் ஏகினர் சிலவர்
பாட்டிசை
எடுத்தனர் ஏகினர் சிலவர்
ஏர்தக
நடித்தனர் ஏகினர் சிலவர்
நாரிமார். 21

(15. ஐயை - அம்பிகை.
16. துவர் - செந்நிறம்.
இவர்தரு - செல்லாநின்ற.

17. கால் - காற்று. பீலி - மயில்விசிறி. நீல் - நீலநிறம். நிமலை - அம்பிகை.
18. கோடிகம் - பூந்தட்டு; அணிகலச் செப்புமாம். கண்ணடி - கண்ணாடி. தோடு - காதணி. 19. சூது - சொக்கட்டான் காய்.
20. அமலை - அம்பிகை. விமலம் - தூய்மை. திமில் - திமிலம் : பேரொலி.
21. சிலவர் - சிலர். நாரிமார் - பெண்கள்.)

1287 பாங்கியர் சிலதியர்
பலரும் எண்ணிலா
வீங்கிய பேரொளி
விமானத் தேறியே

ஆங்கவள் புடையதாய்
அணுகிச் சென்றனர்
ஓங்கிய நிலவுசூழ்
உடுக்கள் போன்றுளார். 22

1288 தண்ணுறு நானமுஞ்
சாந்துஞ் சந்தமுஞ்
சுண்ணமுங் களபமுஞ்
சுடரும் பூணகளும்
எண்ணருந் துகில்களும்
இட்ட மஞ்சிகை
ஒண்ணுத லார்பரித்
துமைபின் போயினார். 23

1289 குயில்களுங் கிள்ளையுங்
குறிக்கொள் பூவையும்
மயில்களும் அஞ்சமும்
மற்றும் உள்ளவும்
பயிலுற ஏந்தியே

பரைமுன் சென்றனர்
அயில்விழி அணங்கினர்
அளப்பி லார்களே. 24

1290 விடையுறு துவசமும்
வியப்பின் மேதகு
குடைகளும் ஏந்தியுங்
கோடி கோடியாம்
இடியுறழ் பல்லியம்
இசைத்தும் அம்மைதன்
புதைதனில் வந்தனர் பூதர்
எண்ணிலார். 25

1291 அன்னவள் அடிதொழு
தருள்பெற் றொல்லையில்
பன்னிரு கோடிபா
ரிடங்கள் பாற்பட
முன்னுற ஏகினன் மூரி
ஏற்றின்மேல்
தொன்னெறி அமைச்சியற்

சோம நந்தியே. 26

1292 இவரிவர் இத்திறம் ஈண்ட
எல்லைதீர்
புவனமும் உயிர்களும்
புரிந்து நல்கிய
கவுரியம் மானமேற் கடிது
சென்றரோ
தவலுறு வோன்மகச்
சாலை நண்ணினாள். 27

1293 ஏலுறு மானநின் றிழிந்து
வேள்வியஞ்
சாலையுள் ஏகியே தக்கன்
முன்னுறும்
வேலையில் உமைதனை
வெகுண்டு நோக்கியே
சீலமி லாதவன் இனைய
செப்பினான்.

28

(22. உடுக்கள் - நட்சத்திரங்கள்.
23. நானம் - கஸ்தூரி.
சாந்து - கலவைச் சந்தனம்.
சந்தம் - சந்தனம்.
மஞ்சிகை - பேழை; பெட்டி. 24. பூவை - நாகணவாய்ப்பறவை.
அஞ்சம் - அன்னம். பரை - உமை.
26. சோமநந்தி - இவன் ஒரு தலைமைக் கணாதிபன்.
28. சீலமிலாதவன் - ஒழுக்கமற்ற தக்கன்.)

1294

வேறு

தந்தை தன்னொடுந் தாயி

லாதவன்
சிந்தை அன்புறுந் தேவி
யானநீ
இந்த வேள்வியான்
இயற்றும் வேலையில்
வந்த தென்கொலோ
மகளிர் போலவே. 29

1295 மல்லல் சேரும்இம் மாம
கந்தனக்
கொல்லை வாவென
உரைத்து விட்டதும்
இல்லை ஈண்டுநீ ஏக
லாகுமோ
செல்லும் ஈண்டுநின்
சிலம்பில் என்னவே.

30

1296 மங்கை கூறுவாள் மருகர்
யார்க்குமென்

தங்கை மார்க்கும்நீ தக்க
தக்கசீர்
உங்கு நல்கியே உறவு
செய்துளாய்
எங்கள் தம்மைஓர்
இறையும் எண்ணலாய். 31

1297 அன்றி யும்மிவண் ஆற்றும்
வேள்வியில்
சென்ற என்னையுஞ்
செயிர்த்து நோக்குவாய்
நன்ற தோவிதோர் நவைய
தாகுமால்
உன்தன் எண்ணம்யா
துரைத்தி என்னவே. 32

1298 ஏய முக்குணத் தியலுஞ்
செய்கையுள்
தீய தொல்குணச் செய்கை

ஆற்றியே
பேயொ டாடல்செய்
பித்தன் தேவியாய்
நீயும் அங்கவன் நிலைமை 33
எய்தினாய்.

1299 அன்ன வன்தனோ
டகந்தை மேவலால்
உன்னை எள்ளினன் உனது
பின்னுளோர்
மன்னு கின்றவென் மருகர்
யாவரும்
என்னி னும்மெனக்
கினியர் சாலவும்.
34

1300 ஆத லாலியா னவர்
பாங்கரே
காத லாகியே கருது
தொல்வளன்

யாது நல்கினன் இந்த
வேள்வியில்
ஓது நல்லவி யுளது
நல்கினேன். 35

1301 புவனி உண்டமால் புதல்வ
னாதியாம்
எவரும் வந்தெனை ஏத்து
கின்றனர்
சிவனும் நீயுமோர் சிறிதும்
எண்ணலீர்
உவகை யின்றெனக்
குங்கள் பாங்கரில். 36

1302 ஏற்றின் மேவுநின் இறைவ
னுக்கியான்
ஆற்றும் வேள்வியுள்
அவியும் ஈகலம்
சாற்று கின்றவே தத்தின்

வாய்மையும்
மாற்று கின்றனன் மற்றென் 37
வன்மையால்.

1303 அனைய தன்னிஈண்
டடுத்த நிற்கும்யான்
தினையின் காறுமோர்
சிறப்புஞ் செய்கலன்
எனவி யம்பலும் எம்பி
ராட்டிபால்
துனைய வந்ததால்
தோமில் சீற்றமே.
38

(30. மல்லல் - வளப்பம்.
நின்சிலம்பில் - உனது
கயிலை மலைக்கு.
33. தீயதொல் குணம் -
தாமதகுணம.
36. உவகை இன்று -

விருப்பம் இல்லை.
37. சாற்றுகின்ற -
சிவபரமாக உரையாநின்ற.
வாய்மை - உண்மைப்
பொருளை.
38. தினை - ஒரு
தானியம்; இது அளவில்
சிறியது. துனைய -
விரைவாக.)

1304 சீற்ற மாயதீச் செறியு
யிர்ப்பொடே
காற்றி னோடழல் கலந்த
தாமெனத்
தோற்றி அண்டமுந்
தொலைவில் ஆவியும்
மாற்று வானெழீஇ மல்கி
ஓங்கவே. 39

1305 பாரும் உட்கின பரவு

பௌவமுந்
சீரும் உட்கின நெருப்பும்
உட்கின
காரும் உட்கின கரிகள்
உட்கின
ஆரும் உட்கினர் அமர
ராயுளார். 40

1306 பங்க யாசனப் பகவன்
தானுமச்
செங்கண் மாயனுஞ்
சிந்தை துண்ணென
அங்கண் உட்கினார்
என்னின் ஆங்கவள்
பொங்கு சீற்றம்யார் புகல
வல்லரே. 41
1307 வேலை அன்னதில்
விமலை என்பவள்

பாலின் நின்றதோர் பாங்கி
தாழ்ந்துமுன்
ஞாலம் யாவையும் நல்கும்
உன்றனக்
கேலு கின்றதோ இனைய
சீற்றமே. 42
1308 மைந்தர் யாரையும்
வளங்கள் தம்மொடுந்
தந்து நல்கிய தாய்சி
னங்கொளா
அந்த மாற்றுவான்
அமைந்து ளாயெனின்
உய்ந்தி டுந்திறம் உண்டு
போலுமால். 43
1309 அறத்தை ஈங்கிவன்
அகன்று ளானெனச்
செறுத்தி அன்னதோர்
சீற்றம் யாரையும்

இறைக்கு முன்னரே ஈறு
செய்யுமால்
பொறுத்தி ஈதெனப்
போற்றல் மேயினாள். 44

1310 போற்றி நிற்றலும் புனிதை
தன்பெருஞ்
சீற்ற மாய்எழுந் தீயை
யுள்ளுற
மாற்றி வேள்விசெய்
வானை நோக்கியே
சாற்று கின்றனள் இனைய
தன்மையே. 45

1311 என்னை நீயிவண் இகழ்ந்த
அன்மையை
உன்ன லேன்எனை
யுடைய நாயகன்
தன்னை எள்ளினாய்

தரிக்கி லேன்அதென்
கன்னம் ஊடுசெல் கடுவு 46
போலுமால்.
1312 நிர்க்கு ணத்தனே நிமல
னன்னவன்
சிற்கு ணத்தனாய்த் திகழு
வானொரு
சொற்கு ணத்தனோ
தொலைக்கு நாள்அடு
முற்கு ணத்தினை முன்னு
மாறலால். 47

(42. வேலை அன்னதில் -
அந்தச்சமயத்தில். விமலை
- ஒரு சேடி.
43. வளங்கள் தம்மொடு -
தனுகரணபுவன
போகங்களாகிய

வளப்பங்களுடன்.
45. புனிதை -
உமாதேவியார். 46.
கன்னம்ஊடு - காதினுள்.
கடுவு - விஷம்.
47. ஒரு
சொற்குணத்தனோ - ஒரு
குணமுடையவனோ.
தொலைக்கு நாள்
அடு முற்குணத்தினை
முன்னு மாறலால் - சங்கார
காலத்திற்கு முன் உள்ள
குணத்தினைக்
கருதுவதன்றித்
தாமதமாகிய ஒரு
குணமுடையனோ இல்லை
என்றபடி. நிமலன்
(சிவபெருமான்)

நிற்குணத்தனே; அவனே
சிற்குணனாகவும்
விளங்குவான்; சங்கார
காலத்தில் சங்கரிக்கு முன்
குணத்தினை எண்ணுவதே
அல்லாமல் மற்றைய
காலத்துத் தாமத
குணமுடையவனோ
அல்லன் என்பது கருத்து.)

1313 துன்று தொல்லுயிர்
தொலைவு செய்திடும்
அன்று தாமதத் தடுவ
தன்றியே
நன்று நன்றது ஞான
நாயகற்
கென்று முள்ளதோர்
இயற்கை யாகுமோ..

1314 தீய தன்றடுஞ் செயலும்
நல்லருள்
ஆயில் ஆவிகள் அழிந்துந்
தோன்றியும்
ஓய்வி லாதுழன் றுலைவு
றாமலே
மாய்வு செய்திறை வருத்த 49
மாற்றலால்..
1315 ஆன வச்செயல் அழிவி
லாததோர்
ஞான நாயகற் கன்றி
நாமெனும்
ஏனை யோர்களால்
இயற்ற லாகுமோ
மேன காவலும் விதியும்
என்னவே..
50
1316 முன்னரே எலா முடித்த

நாதனே
பின்னும் அத்திறம்
அளிக்கும் பெற்றியான்
அன்ன வன்கணே
அனைத்து மாகுமால்
இன்ன பான்மைதான்
இறைவன் வாய்மையோ.. 51

1317 தோமி லாகமஞ் சுருதி
செப்பியே
ஏம விஞ்சைகட் கிறைவ
னாகியே
நாம றும்பொருள் நல்கும்
எந்தையைத்
தாம தன்னெனச் சாற்ற
லாகுமோ.. 52

1318 ஆத லால்அவன் அனைவ
ருக்குமோர்
நாத னாமரோ அவற்கு

நல்லவி
ஈதல் செய்திடா திகழ்தி
அஞ்சியே
வேதம் யாவையும்
வியந்து போற்றவே.. 53
1319 சிவனெ னுந்துணைச் சீரெ
ழுத்தினை
நுவலு வோர்கதி நொய்தி
லெய்துவார்
அவனை எள்ளினாய் ஆரி
தாற்றுவார்
எவனை உய்குதி இழுதை
நீரைநீ. . 54

(49. உயிர்கள் பிறப்பு
இறப்புக்களில் வருந்தாமல்
இளைப்பாறும்
பொருட்டே

இறைவன்
சங்காரத்தொழில்
புரிகின்றார்ன; இச்செயல்
அருட்டிறமே ஆகுமென்க.
50. நாம் எனும் -
அகங்காரம் பொருந்திய.
மேன - முன் உரைத்த.
காவலும் விதியும் -
காத்தலும் படைத்தலும்.
51. இறைவன் வாய்மை -
சிவபெருமானின்
உண்மைநிலை. 52. ஏம
விஞ்சை - உயிர்க்குப்
பாதுகாவலான
வித்தை. நாம் அறும் -
நிந்தை இல்லாத. 54.
சிவன் எனும் -
மங்களாகரம்

பொருந்திய. துணைச்சீர்
எழுத்து - 'சிவ' என்னும்
இரண்டெழுத்து. கதி -
சிவகதி.)

1320 வேறு

முண்டக மிசையினோன்
முகுந்தன் நாடியே
பண்டுணர் வரியதோர்
பரனை யாதியாக்
தொண்டிலர் எள்யி
கொடுமை யோர்க்கெலாந்
தண்டம்வந் திடுமென
மறைகள் சாற்றுமால்.. 55

1321 ஈதுகேள் சிறுவிதி இங்ங
னோர்மகம்
வேதநா யகன்தனை
விலக்கிச் செய்தனை
ஆதலால் உனக்கும்வந்

தடைக தண்டமென்
றோதினாள் உலகெலாம்
உதவுந் தொன்மையாள். 56

1322 இன்னன கொடுமொழி
இயம்பி வேள்விசெய்
அந்நிலம் ஒருவிஇவ்
வகிலம் ஈன்றுளாள்
முன்னுள பரிசன
முறையின் மொய்த்திடப்
பொன்னெழின் மானமேற்
புகுந்து போந்தனள். 57

1323 அகன்றலை உலகருள்
அயன்தன் காதலன்
புகன்றன உன்னியுட்
புழுங்கி ஐந்துமா
முகன்திரு மலையிடை
முடுகிச் சென்றனள்
குகன்தனை மேலருள்

கொடிநு சுப்பினாள். 58
1324 ஒருவினள் ஊர்தியை
உமைதன் நாயகன்
திருவடி வணங்கினள்
சிறிய தொல்விதி
பெரிதுனை இகழ்ந்தனன்
பெரும அன்னவன்
அரிதுசெய் வேள்வியை
அழித்தி என்னவே. 59
1325 எவ்வமில் பேரருட்
கிறைவ னாகியோன்
நவ்வியங் கரமுடை நாதன்
ஆதலின்
அவ்வுரை கொண்டில
னாக அம்பிகை
கவ்வையொ டினையன
கழறல் மேயினாள். 60

1326 மேயின காதலும் வெறுப்பு
நிற்கிலை
ஆயினும் அன்பினேற்
காக அன்னவன்
தீயதோர் மகத்தினைச்
சிதைத்தல் வேண்டும்என்
நாயக னேயென நவின்று 61
போற்றினாள்.

(55. கொண்டிலர் - கொள்ளாராய். தண்டம் - தண்டனை.
56. வேதநாயகன் - சிவபெருமான். 57. ஒருவி - நீங்கி.
58. ஐந்து மாமுகன் மலை - கயிலாயமலை. ஐந்து மாமுகன் - ஈசானம், தற்புருடம், அகோரம்,

வாமதேவம்,
சத்தியோசாதம் என்னும்
ஐந்து
திருமுகங்களையுடைய
சிவபெருமான். குகன் -
முருகன். நுசுப்பு - இடை.
59. தொல்விதி - தக்கன்.
60. நவ்வி - மான். கவ்வை
- துன்பம்.)

ஆகத் திருவிருத்தம் - 1326

----

## 19. வீரபத்திரப் படலம் (1327 - 1386)

1327 அந்த வெல்லைஎமை
யாளுடைய அண்ணல்

அகிலந்
தந்த மங்கைதன
தன்பினை வியந்து
தளருஞ்
சிந்தை கொண்டசெயல்
முற்றியிடு மாறு சிறிதே
புந்தி யுள்ளுற
நினைநதனன் நினைந்த
பொழுதே. 1
1328 பொன்னின் மேருவின்
இருந்திடு பொலங்கு
வடெலாம்
மின்னும்
வெள¢ளிமுளை
மேற்கொடுவிளங்
கியதென
மன்னு தண்சுடர்
மதிக்குறை மிலைச்சு

மவுலிச்
சென்னி ஆயிரமும்
வான்முகடு சென்றொ
ளிரவே. 2
1329 விண்ட லந்தனில்
இலங்குசுட ரின்மி
டலினைக்
கண்ட லந்தர ஒதுங்குவன
போற்க திருலா
மண்ட லந்திகழ்
முகந்தொறும் வயங்கு
பணியின்
குண்ட லங்களிணை
கொண்டகுழை கொண்டு
லவவே. 3
1330 ஆன்ற திண்கடல்
வறந்திட இறந்த
தனிடைக்

தோன்று கின்றதொர்
மடங்கல்வலி யின்று
தொலைய
மூன்று கண்கள்முக
மாயிரமு மேவி
முனிவால்
கான்ற அங்கிகளின்
அண்டமுழு துங்க
ரியவே. 4
1331 சண்ட மாருதமும்
அங்கியும் ஒதுங்கு
தகவால்
துண்ட மீதுறுங்
உயிர்ப்புடன் எழுந்த
சுடுதீ
அண்ட கோளமுடன்
அப்புறமு மாகி அழியாக்
கொண்ட லூடுதவழ்

மின்னுவென வேகு
லவவே. 5

1332 மலரின் வந்துறையும்
நான்முகன் முகுந்தன்
மகவான்
புலவர் தம்புகழ்
அனைத்தையும் நுகர்ந்த
பொழுதில்
சிலவொ ழுங்கொடித
ழின்புடைகள் சிந்தி
எனவே
நிலவு செய்தபிறை
வாள்எயிறு நின்றி
லகவே. 6

1333 துண்ட மீதின்அழ
லோஇதழின் வீழ்ந்த
சுசியோ

மண்டு தீவிழிகள்
கான்றகனலோம
னமிசைக்
கொண்டதோர் வெகுளி
யாகிய கொடுந்த ழலதோ
எண்டி சாமுகமு
மாகிஅடு கின்ற
தெனவே. 7
1334 தண்ட லின்றுறையும்
ஆவிகள் வெரீஇத்
தளரமேல்
அண்ட ரண்டநிரை
விண்டிட அவற்றி
டையுறுந்
தெண்டி ரைக்கடல்
கலங்கஅடல் உற்ற
சிவனின்
கொண்ட ஆர்ப்புமுழு

தெண்டிசை குலாய்நி
மிரவே. 8

(2. குவடு - சிகரம்.
மிலைச்சு - சூடிய. மவுலி
- கிரீடம்.
3. பணியின் குண்டலம் -
சர்ப்பகுண்டலம். குழை -
காது.
5. சண்ட மாருதம் -
பெருங்காற்று. துண்டம் -
மூக்கு. 6. நுகர்ந்த -
உண்ட.
7. எண்டிசா முகம் -
எட்டுத் திக்கு. 8.வெரீஇ -
பயந்து.)

1335 தராத லங்கண்முழு

துண்டுமிழு கின்ற
தகைசேர்
அராவி னங்கடமை
யங்கடக மங்க தமொடே
விராய மென்றொடிக
ளாவிடுபு விண்ணு
றநிமிர்க்
திராயி ரங்கொள்புய 9
மெண்டிசையெ லாஞ்செ
றியவே.
1336 வரத்தின் மேதகைய
வேதன்முத லான
வலியோர்
சிரத்தின் மாலிகை
அடுக்கல்அவ ரென்பு
செறிபூண்
பெரத்த கேழலின்
மருப்பினுடன் ஆமை

பிறவும்
உரத்தின் மேவுபுரி
நூலொடு பெயர்ந்தொ
ளிரவே. 10

1337 குந்தம் வெம்பலகை
தோமரமெ ழுக்கு
லிசம்வாள்
செந்த ழற்கழுமுள்
சூலமொடு பீலி
சிலைகோல்
முந்து தண்டம்அவி
ராழிவசி யால முதலாம்
அந்த மில்படைகள்
அங்கைக டொறுங்கு
லவவே. 11

1338 ஐய மாழைதனின்
மாமணியி னாகி
அறிவார்

செய்ய லாதுவரு
பேரணிக ளோடு
சிவணிப்
பையு லாவுசுடர்
வெம்பணிக ளான
பணியும்
மெய்யெ லாமணி
இடந்தொறும் மிடைந்தி
லகவே.
12

1339 நெஞ்ச லஞ்சல
மரும்பிறவி நீடு
வினையின்
சஞ்ச லஞ்சல மகன்றதன
தன்பர் குழுவை
அஞ்ச லஞ்சலெனுமஞ்
சொலென விஞ்சு
சரண்மேற்

செஞ்சி லம்பொடு
பொலுங்கழல் சிலம்ப
மிகவே. 13

1340 வேறு
அந்தி வான்பெரு
மேனியன் கறைமிட
றணிந்த
எந்தை தன்வடி வாயவன்
நுதல்விழி யிடையே
வந்து தோன்றியே
முன்னுற நின்றனன் மா
முந்து வீரபத் திரனெனுந்
திறலுடை முதல்வன். 14

1341 அங்க வேலையில்
உமையவள்
வெகுளியால் அடல்செய்
நங்கை யாகிய பத்திர

காளியை நல்கச்
செங்கை யோரிரண்
டாயிரம் பாதிசெம்
முகமாய்த்
துங்க வீரபத் திரன்றனை
யடைந்தனள்
துணையாய்.
1342 எல்லை தீர்தரு
படைக்கலத் திறையுமவ்
விறைவற்
புல்லு கின்றதோர்
திறலுடைத் துணைவியும்
போலத்
தொல்லை வீரனுந்
தேவியும் மேவரு
தொடர்பை
ஒல்லை காணுறா
மகிழ்ந்தனர் விமலனும்

உமையும்.



9. தராதலங்கள் - உலகங்கள். 10. கேழல் - பன்றி. 11. குந்தம் - ஈட்டி. பீலி - பேரீட்டி. கோல் - அம்பு. வசி - வாள். 12. ஐ - அழகு; அ : சாரியை. மாழை - பொன். 14. அந்தி - அந்திப் பொழுது. 15. பாதி - இங்கு ஆயிரம். துங்கம் - உயர்வு.)

1343 தன்னை வந்தடை
பத்திரை தன்னொடு
தடந்தாள்
மன்னு வார்கழல்
கலித்திட வலஞ்செய்து

வள்ளல்
அன்னை தாதையை
வணங்கியே யவர்தமை
நோக்கி
முன்ன நின்றுகை
தொழுதனன் இவைசில
மொழிவான். 17

1344 மால யன்றனைப்
பற்றிமுன் தந்திடோ
மறவெங்
காலன் ஆவியை
முடித்திடோ அசுரரைக்
களைகோ
மேலை வானவர்
தம்மையுந் தடிந்திடோ
வேலை
ஞாலம் யாவையும்

விழுங்குகோ உலகெலா 18
நடுக்கோ.
1345 மன்னு யிர்த்தொகை
துடைத்திடோ வரம்பில
வாகித்
துன்னும் அண்டங்கள்
தகர்த்திடோ நுமதுதூ
மலர்த்தாள்
சென்னி யிற்கொடே
யாதொன் றென்னினுஞ்
செய்வன்
என்னை இங்குநீர்
நல்கியே தெப்பணிக்
கொன்றான். 19
1346 என்ற வீரனை நோக்கியே
கண்ணுதல் எம்மை
அன்றி வேள்விசெய்
கின்றனன் தக்கன்அவ்

விடைநீ
சென்று மற்றெம
தவியினைக் கேட்டிஅத்
தீயோன்
நன்று தந்தன
னேயெனின் இவ்விடை
நடத்தி. 20
1347 தருத லின்றெனின்
அனையவன்
தலையினைத் தடிந்து
பரிவி னால்அவன்
பால்உறு வோரையும்
படுத்துப்
புரியும் எச்சமுங்
கலக்குதி அங்கது
பொழுதின்
வருதும் ஆயிடை ஏகுதி
என்றனன் வள்ளல். 21

1348 அந்த வேலையில்
பத்திரை தன்னொடும்
அடலின்
முந்து வீரனவ்
விருவர்தம் பதங்களின்
முறையால்
சிந்தை அன்புடன்
வணங்கியே
விடைகொண்டு சிவனை
நிந்தை செய்தவன்
வேள்வியை அழித்திட
நினைந்தான். 22

1349 உன்னி மற்றறண்
நீங்கியே ஆற்றவும்
உருத்துத்
தன்னு யிர்ப்பினால்
அளவையில்

கணங்களைத் தந்து
துன்னு கின்றமெய்
வியர்ப்பினால்
சிலவரைத் தொகுத்து
வன்னி போல்மயிர்க்
கால்தொறுஞ் சிலவரை 23
வகுத்தான்.

1350 மொழியி னிற்பல பூதரை
அளித்தனன் முளரி
விழியி னிற்பல பூதரை
அளித்தனன் வேணி
யுழியி னிற்பல பூதரை
அளித்தனன் உந்திச்
சுழியி னிற்பல பூதரை
அளித்தனன் தூயோன். 24

1351 தோளில் எண்ணிலா
வீரரை அளித்தனன்

சுவையின்
கோளில் எண்ணிலா
வீரரை அளித்தனன்
குளிர்பொற்
றாளில் எண்ணிலா
வீரரை அளித்தனன்
தடக்கை
வாளில் எண்ணிலா
வீரரை அளித்தனன் 25
வலியோன்.
(17. பத்திரை -
பத்திரகாளி. 18.
தந்திடோ - வரவோ.
முடித்திடோ -
முடிக்கவே. நடுக்கோ
நடுங்குமாறு செய்யவோ.
20. கேட்டி - கேள்.
நடத்தி - திரும்பி

வருவாயாக. 21. பரிவு -
அன்பு. எச்சம் - வேள்வி.
வள்ளல் - சிவன். 22.
அவ்விருவர் - அம்மை
அப்பர். 23. தன் - இங்கு
வீரபத்திரர். உயிர்ப்பு -
சுவாசம். 25.
சுவையின்கோள் -
நாக்கு.)

1352 கையி னிற்சில பூதரை
அளித்தனன் களத்தில்
வெய்ய மார்பினிற்
கன்னத்திற் சிலவரை
விதித்தான்
ஐய தோர்முழந்
தாள்தனிற் சிலவரை
அளித்தான்

குய்ய மீதினில் ஊருவிற்
சிலவரைக் கொடுத்தான். 26
1353 இன்ன தன்மையில்
வீரபத் திரனெனும்
இறைவன்
தன்னை நேர்வரும்
எண்ணிலா வீரரைத் தந்து
துன்னு கின்றுழிப்
பத்திரை என்பதோர்
துணைவி
அன்ன பண்பினிற்
காளிகள் தொகையினை
அளித்தாள். 27
1354 வீர பத்திர உருத்திரன்
வேறுவே றளித்த
சார தர்க்குளங் கோர்சிலர்
நீனிறந் தழைப்போர்
கோர பத்திரம்

மணிக்கலன் மின்னுவிற்
குலவக்
காரெ னப்பொலிந்
துருமெனக் கழறுகின்
றனரால். 28

1355 அக்கு மாலையும்
மணிகளும்
உடுக்கள்போல் அவிரப்
பக்க பாணிலா எயிறுகள்
பிறையெனப் பயில
மிக்கு நீடிய வடிவின
ராகியே மேலாஞ்
செக்கர் வானெனச்
சேர்ந்தெழு பூதர்கள்
சிலரே. 29

1356 அண்ட ரைத்தொலை
வித்திடும் வீரனை

அடைந்தோர்
பிண்ட முற்றும்வான்
நிறத்தினர் பூதரில்
பெரியோர்
பண்டி ரைத்தொரு
முனிமகன் பின்றொடர்
பாலின்
தெண்டி ரைக்டற்
றொகையெனக்
கிளர்ந்தனர் சிலரே.
1357 வெம்பொன் மேனியர்
அணுகுறின் அவர்தமை
விரைவில்
பைம்பொன் மேனியர்
ஆக்குமத் திருநிழல்
பரப்பி
அம்பொன் மார்புடை
மகுந்தனில் வடிவுடை

யவராய்ச்
செம்பொன் மால்வரை
நிரையெனத் தோன்றினர்
சிலரே. 31

1358 மேய வான்பசப் பூ£தரு
மேனிய ராகிக்
காய மித்துணை
யெனப்படாக் கணக்கின
ராகி
மாயர் கண்டுயில்
சேக்கையைத் தங்கணே
வகுத்துச்
சேய தொன்மரத்
தொகையெனக்
கெழீஇயினர் சிலரே. 32

1359 வேறு
அங்க வர்க்குள்

அடல்விடை ஆனனந்
தங்கி நின்று தயங்கினர்
ஓர்சிலர்
பொங்கு சீற்றப்
பொருதிறல் வாலுளைச்
சிங்க மாமுக 33
மாய்த்தெழித் தார்சிலர்.
புழைகொள் கையுடைப்
போர்வலி யாளியின்
முழைகொள் மாமுக
மாகிமொய்த் தார்சிலர்
வழுவை யானனம்
மன்னினர் ஓர்சிலர்
உழுவை யின்முக
மாகியுற் றார்சிலர். 33
(26. குய்யம் -
அபானவாயில். ஊரு -
தொடை. 28. பத்திரம் -

பாட்படை.
29. அக்கு மாலை - என்புமாலை; உருத்திராட்ச மாலையுமாம்.
30. அண்டர் - தேவர். பிண்டம் - உடல். முனிமகன் - இங்கு உபமன்னியு.
32. பசப்பு - பசலை நிறம். மாயர் - திருமால்.
34. புழை - துவாரம். முழை - குகை. வழுவை - யானை. ஆனனம் - முகம். உழுவை பலி.)

அலைமு கப்பரி
ஆனனம் எய்தியே
கொலைமு கத்துக்

குழீஇயினர் ஓர்சிலர்
மலைமு கத்து மரைகளி
றெண்குடன்
கலைமு கத்துக்
கவினடைந் தார்சிலர்.

1362 இனையர் தங்குழு
எண்ணில அன்னர்கைப்
புனைய நின்ற
பொருபடை எண்ணில
வினைகொள்
வன்மையும் வீரமும்
இற்றென
நினைவ தற்கரி தெங்ஙன்
நிகழ்த்துகேன். 36

1363 கையில் எண்ணில்
படையினர் காய்கனல்
செய்ய பூணினர் தீக்கலுழ்

கண்ணினர்
வெய்ய சொல்லர்
வெருவரு மேனியர்
வையம் யாவும்
மடுக்குறும் வாயினார். 37
1364 கட்டு செஞ்சடைக்
கற்றையர் காய்ந்தெழு
நெட்ட ழற்கு நிகர்வரு
நாவினர்
வட்டி மாலைகள் மானும்
எயிற்றினர்
தொட்ட மூவிலைச் சூலந்
துளக்குவார். 38
1365 துண்ட மீது சொரிதருந்
தீயினர்
அண்ட கூடம்
அலைத்திடுங் கையினர்
சண்ட மாருதந் தாழ்க்குஞ்

செலவினர்
உண்டு போரென்
றுளந்தளிர்ப் பெய்துவார். 39
1366 மடித்த வாயினர்
வானவர் என்பினால்
தொடுத்த கண்ணி
துயல்வரு மார்பினர்
தடித்த தோளர்
தனித்தழல் என்னினும்
பிடித்து நுங்கும்
பெரும்பசி மிக்குளார். 40
1367 நச்சில் தீயவர் நானில
மங்கையும்
அச்சுற் றெஞ்ச அடிகள்
பெயர்த்துளார்
கச்சைத் தோல்மிசை
கட்டிய தட்டியர்
உச்சிட் டம்மென்

றுலகினை உண்கிலார். 41

1368 சூழி யானை துவன்றிய
மால்வரைப்
பாழி யாகப் படர்செவி
வாயினர்
ஊழி மாருதம் உட்கும்
உயிர்ப்பினர்
ஆழி யாக அகன்ற
அகட்டினார். 42

(35. அலை முகப்பரி -
கடலிடத்துள்ள வடவை
என்னும் குதிரை.
மறை - மான். எண்கு -
கரடி. கலை - குரங்கு. 38.
வட்டி - பலகறை.
40. நுங்கும் - தின்னும்.
41. நச்சில் -

விடத்தைக்காட்டிலும்.
தட்டி - அரையில் கட்டும்
உடை விசேடம்; அரைச்
சல்லடம்.
உச்சிட்டம் - (திருமால்
உண்ட) எச்சில். 42. சூழி
- முகபடாம்.)

1369 ஆழ்ந்த சூர்ப்பசுங்
கண்ணர் அடித்துணை
தாழ்ந்த கையர் தடக்குறுந்
தாளினர்
வீழ்ந்து மிக்க வியன் அத
ரத்தினர்
சூழ்ந்த பூதத்
தொகையினர் யாவரும். 43

1370 வேறு
அத்தகை நின்றிட
அண்ண லுடன்சேர்

பத்திர காளி பயந்திடு
கின்ற
கத்து கடற்புரை காளிகள்
தம்மை
இத்துணை யேயென
எண்ணரி தாமால். 44

1371 அந்தமில் பல்படை
அங்கையில் ஏந்தி
உந்திய தும்பைகள் உச்சி
மிலைச்சிச்
சுந்தர மெய்திய தோற்றம
தாகி
விந்தை யெனச்சிலர்
மேவினர் அன்றே. 45

1372 தோளின் மிசைத்திரி
சூலம் இலங்கக்
கோளில் உயிர்ப்பலி

கொள்கலன் ஏந்தித்
தாளிடை நூபுர சாலமி
லங்கக்
காளிகள் போற்சிலர் 46
காட்சி மலிந்தார்.

1373 வாகினி எங்குள
வென்றிட மல்கு
மோகினி போற்சிலர்
மொய்த்தனர் மாயச்
சாகினி போற்சிலர்
சார்ந்தனர் அல்லா
யோகினி போற்சிலர்
உற்றனர் அம்மா. 47

1374 அயிருற அண்டம்
அனைத்தையும் ஏற்றா
உயிரவி நுங்கிய உன்னி
யெழுந்தே
செயிரவி யாது

தெழித்திடு தொன்னாள்
வயிரவி போற்சிலர்
மன்னினர் மாதோ. 489

1375 நீடலை மாலை
நிலத்திடை தோய
ஆடுறு பாந்தள்
அணிக்கலன் மின்ன
ஈடுறு வானுரும் ஏறென
ஆர்த்தே
மோடிக ளாமென
மொய்த்தனர் சில்லோர். 49

1376 இவ்வகை மாதர்கள்
யாவரும் வெவ்வே
றைவகை மேனிய
ராய்வத னங்கள்
கைவகை எண்ணில
ராய்க்கவின் மாட்சிச்

செவ்விய ராய்ச்செரு
மேற்கிளர் கின்றார். 50

1377 வேறு
கணந்திகழ் அனைய பூதர்
காரிகை மார்கள் யாரும்
அணங்குறு காளி
தன்னோ டாண்டகை
வீரன் தாளில்
பணிந்தனர் பரசி
அன்னார் பாங்கரில்
விரவிச் சூழ்ந்து
துணங்கைகொ டாடிப்
பாடித் துள்ளியே போத
லுற்றார்.
51

1378 ஈட்டுமிக் கெழுந்து
செல்லும் இன்னதோர்
பூதர் தம்மில்

மோட்டிகல் பானு கம்பன்
முதலிய கணங்கள் முத்தி
வீட்டுடைத் தலைவ
னான வீரபத் திரன்முன்
னாகி
ஈட்டுடைப் பல்லி யங்கள்
யாவையும் இயம்பிச்
சென்றார். 52
1379 கொண்டபே ராற்ற
லோடுங் குலவிய வீரன்
தன்பால்
அண்டமேல் உரிஞ்சப்
பல்வே றணிப்பெருங்
கவிகை கொண்டும்
விண்டுலாங் கவரி
யீட்டம் வீசியுஞ் சேற
லுற்றார்
தண்டனே பினாகி

சிங்கன் ஆதியாம் தறுகட்
பூதர். 53
1380 பாசிழை மகளிர்
சில்லோர் பத்திரை பாங்க
ராகித்
தேசுடைக் கவிகை ஈட்டந்
திருநிழல் பரப்ப ஏந்தி
மாசறு கவரி வட்டம்
பரம்பில இரட்டிப்
பல்வே
றாசிகள் புகன்று
செம்பொன் அணிமலர்
சிதறிப் போந்தார். 54
1381 படர்ந்திடு புணரி போலப்
பார்முழு தீண்டித் தானை
அடங்கலும் ஆர்க்கும்
ஓதை அகிலமுஞ் செறிய
விண்ணும்

உடைந்ததவ் வண்டங்
கொல்லோ உதுகொலோ
இதுவோ என்னா
மிடைந்தபல் லண்டத்
தோரும் விதிர்ப்பொடும்
விளம்பல் உற்றார். 55

1382 பூமிகள் எழுந்த அம்மா
புவியெலாம் பரவித்
தொல்பேர்
ஆழியும் அடைத்து
வான்புக் கச்சுதன் பதங்கா
றேகி
ஊழியின் முதல்வ
னார்க்கும் ஒலியினால்
உடைந்த அண்டப்
பாழிக டொறுமுற்
றெல்லாம் புவனமும்
பரந்த அன்றே. 56

1383 அங்கெழு பூழி தன்னால்
அவர்விழி கலுழுந்
தீயால்
செங்கையிற்
படைக்தேய்ப்பச் திறிய
கனலால் வையம்
எங்கணும் எரிகள் துன்னி
இரும்புகைப் படலம்
ஈண்டிக்
கங்குலும் பகலுங்
காணாக் கடைக்கப்பல்
போன்ற தன்றே.
57

1384 இப்பெருந் தானை சூழ
எம்பிரான் எழுந்து சீற்றத்
துப்புடன் ஏகித் தக்கன்
தொல்மகம் புரியுஞ்
சாலை

வைப்பினை அணுகித்
தன்பால் வருடைத்
தலைவர்க் கொன்று
செப்பினன் என்ப
மன்னோ சேணுரு மேறு
நாண். 58
1385 பற்றலர் புரமூன் றட்ட
பரமனை இகழ்ந்து நீக்கிச்
சிற்றினம் பொருளென்
றுன்னிச் சிறுவிதி என்னுந்
தீயோன்
இற்றிடு நெறியால்
வேள்வி இயற்றும்இச்
சாலை வாயில்
சுற்றொடு சேமஞ் செய்து
துயக்கறக் காத்தி
ரென்றான். 59

1386 என்றலுந் தானை
யோர்கள் எயிற்புற
முற்றுஞ் சூழ்ந்து
நின்றனர் வானி னூடு
நெருங்கினர் வாய்தல்
தோறுஞ்
சென்றனர் கொடிய
தக்கன் சேனையாய்
எதிர்ந்தோர் தம்மைக்
கொன்றனர் அவரூன்
துய்த்துக் கூற்றனும் உட்க
ஆர்த்தார்.

(54. பாசிழை - பசிய ஆபரணம். 57. பூழி - புழுதி. கடைப்பகல் - ஊழிநாள்.
58. எம்பிரான் - வீரபத்திரன். 59. சேமம் -

பாது காவல். துயக்கு சோர்வு.
60. எயில் - மதில். ஊன் - மாமிசம். உட் - அஞ்சுமாறு.)

ஆகத் திருவிருத்தம் - 1386

------------

## 20. யாகசங்காரப் படலம் (1387 -1562 )

1387 ஆர்த்தலும் இறைவி
தன்னோ டாண்டகை
வீரன் வாசத்
தார்த்தொகை தூங்கும்
யாக சாலையுள் ஏக
லோடுந்

தீர்த்தனைத் தலைவி
தன்னைத் திசைமுகன்
முதலோர்யாரும்
பார்த்தனர் உளந்துண்
ணென்று பதைபதைத்
தச்சங் கொண்டார். 1
1388 மடங்கலின் வரவு கண்ட
மானினம் போன்றும்
வானத்
தடங்கிய உருமே றுற்ற
அரவினம் போன்றும
யாக்கை
நடுங்கினர் ஆற்றல்
சிந்தி நகையொரீஇ
முகனும் வாடி
ஒடுங்கினர் உயிரி
லார்போல் இவைசில
உரைக்க லுற்றார்.

2

1389 ஈசனும் உஆஆயு
மேவந் தெய்தினர்
என்பார் அன்னார்
காய்சினம் உதவ வந்த
காட்சியர் காணும்
என்பார்
பேசரி தந்தோ அந்தோ
பெரிதிவர் சீற்றம்
என்பார்
நாசம்வந் திட்ட தின்றே
நம்முயிர்க் கெலாம்
என்பார். 3

1390 தக்கனுக் கீறும் இன்றே
சார்ந்தது போலும்
என்பார்
மிக்கதோர் விதியை

யாரே விலக்கவல்
லார்கள் என்பார்
முக்கணெம் பெருமான்
தன்னை முனிந்திகழ்
கின்ற நீரார்
அக்கண முடிவர் என்றற்
கையமும் உண்டோ
என்பார். 4

1391 விமலனை இகழு
கின்றான் வேள்வியேன்
புரிந்தான் என்பார்
நமையெலாம்
பொருளென் றுன்னி
நடத்தினன் காணும்
என்பார்
இமையவர் குழுவுக்
கெல்லாம் இறுதி
யின்றாமோ என்பார்

உமையவள்
பொருட்டால் அன்றோ
உற்றதீங் கிதெலாம்
என்பார். 5

1392 ஈடுறு பூதர் யாரும்
எங்கணும் வளைந்தார்
என்பார்
ஓடவும் அரிதிங்
கென்பார் ஒள¤த்திடற்
கிடமே தென்பார்
வீடினங் காணும்
என்பார் மேலனிச்
செயலென் னென்பார்
பாடுசூழ் அங்கி
நாப்பண் பட்டபல்
களிறு போன்றார். 6

1393 அஞ்சினர் இனைய கூறி
அமரர்கள் அரந்தை
கூரச்
செஞ்சரண் அதனை
நீங்காச் சிலபெரும் பூதர்
சூழப்
பஞ்சுறழ் பதுமச்
செந்தாட் பத்திரை
யோடு சென்று
வெஞ்சின வீரன்
வெய்யோன்
வேள்விசெய் வதனைக்
கண்டான். 7

(1. இறைவி -
பத்திரகாளி. தீர்த்தனை -
பரிசுத்தனான
வீரபத்திரனை.

தலைவி தன்னை - பத்திரகாளியை. 2. மடங்கல் - சிங்கம். உரும் ஏறு - இடியேறு. 4. ஈறும் - அழிவும். 5. நமை - நம்மை; இங்கு பிரமன் முதலிய தேவர்களை. பொருள் என்று - சிறந்த கடவுள் என்று. 6. ஈடு - வன்மை. பாடு - பக்கம். 7. அரந்தை - துன்பம். பஞ்சு - செம்பஞ்சு.)

1394 இடித்தென நக்குப்
பொங்கி எரிவிழித்
திகலி ஆர்த்துப்
பிடித்தனன் வயக்கொம்
போதை பிளந்தது

செம்பொன் மேரு
வெடித்தது மல்லல்
ஞாலம் விண்டன
அண்டம் யாவும்
துடித்தன உயிர்கள்
முற்றும் துளங்கினர்
சுரர்க ளெல்லாம்.
8

1395 எழுகின்ற ஓசை கேளா
இடியுண்ட அரவிற்
கோரா
விழுகின்றார்
பதைக்கின்றார் றார்வாய்
வெருவுகின் றார்கள்
ஏங்கி
அழுகின்றார் ஓடு
கின்றார் அழிந்ததோ
வேள்வி என்று

மொழிகின்றார் மீளு
கின்றார் முனிவரும்
இமையோர் தாமும். 9

1396 வானவர் பிறரிவ் வாறு
வருந்தினர் என்னின்
அங்கண்
ஏனையர் பட்ட தன்மை
இயம்பரி தெவர்க்கும்
என்றால்
நானது புகல வற்றோ
நளிர்புனல் வறந்த
காலத்
தானதோ ருருமே றுற்ற
அசுணமாத் தன்மை
பெற்றார். 10

1397 வேலையங் கதனின்

மேலாம் வீரருள் வீரன்
ஏகி
மாலயன் தானும் உட்க
மகத்தின்முன் அடைத
லோடுஞ்
சீலம தகன்ற கொள்கைச்
சிறுவிதி அவற்கண்
டேங்கிச்
சாலவு நடுக்குற் றுள்ளந்
தளர்ந்தனன் தலைமை
நீங்கி. 11

1398 சாரதர் வளைந்த வாறும்
சாலைய துடையு மாறும்
ஆருமங் குற்ற வானோர்
அயர்வுறு மாறு
நோக்கிப்
பேரஞர் உழந்து தேறிப்

பெருந்திற லாளன்
போல
வீரபத் திரனை நோக்கி
விளம்பினன் இனைய
தொன்றே. 12

1399 இங்குகுந் தடைந்த
தென்கொல் யாரைநீ
என்ன லோடுஞ்
சங்கரன் தனது சேயான்
தக்கநின் வேள்வி
தன்னின்
அங்கவற் குதவும் பாகம்
அருளுதி அதற்கா
அந்தப்
புங்கவன் அருளி
னாலே போந்தனன்
ஈண்டை யென்றான். 13

1400 இத்திறம் வீரன் கூற
இருந்தவத் தக்கன்
உங்கள்
அத்தனுக் குலகம்
வேள்வி அதனிடை
அவியின் பாகம்
உய்த்திடா தென்ன
அங்கண் உறைதரு
மறைகள் நான்குஞ்
சுத்தமார் குடிலை தானுந்
துண்ணென எழுந்து
சொல்லும். 14

1401 ஈறிலா உயிர்கட்
கெல்லாம் இறையவன்
ஒருதா னாகும்
மாறிலா அரனே
அல்லால் மகத்தினுக்

கிறையா யுள்ளோன்
வேறொர்வா னவனும்
உண்டோ வேள்வியில்
அவற்கு நல்குங்
கூறுநீ பாணி யாது
கொடுத்தியால் என்ற
அன்றே.
(8. வயக் கொம்பு -
வெற்றிக்கு ஊதும்
கொம்பு.
9. அசுணமா - இ·து
இனிய இசையைக்
கேட்டுக்களிக்கும் ஒரு
மிருகம்;
பறவை என்பாரும்
உளர். 14. உங்கள்
அத்தன் - இங்குச்
சிவபெருமான்.

உலகம் - உலக மக்கள்.
குடிலை - பிரணவம்.)

1402 தேற்றமில் சிதட னாகுஞ்
சிறுவிதி கேட்ப இன்ன
கூற்றினால் மறைகள்
நாங்குங் குடிலையும்
ஒருங்கு கூடிச்
சாற்றலும் அன்னான்
நல்காத் தலைமைகண்
டிறவன் தொல்சீர்
போற்றியங் ககன்று
தத்தம் புகலிடம் போய
அன்றே. 16

1403 போதலுந் தக்கன்
தன்னைப் பொலங்கழல்
வீரன் பாரா
வேதமும் பிறவுங் கூறும்
விழுப்பொருள் கேட்டி

அன்றே
ஈதியெம் பெருமாற்
குள்ள இன்னவி
எனலுங் கானில்
பேதையொ டாடல்
செய்யும் பித்தனுக்
கீயேன் என்றான். 17

1404 ஆங்கது கேளா
அண்ணல் அம்புய னாதி
யாகிப்
பாங்குற விரவும்
வானோர் பல்குழு
அதனை நோக்கி
நீங்களும் இவன்பா
லானீர் நிமலனுக்
கவிநல் காமல்
ஈங்கிவன் இகழுந்

தன்மை இசைவுகொல்
உமக்கும் என்றான். 18

1405 என்றலும் அனையர்
தொல்லூர் இசைவினால்
அதுகே ளார்போல்
ஒன்றுமங் குரையா ராகி
ஊமரின் இருத்த
லோடும்
நின்றதோர் வீரன்
வல்லே நெருப்பெழ
விழித்துச் சீறி
நன்றிவர் வன்மை
என்னா நகையெயி
றிலங்க நக்கான். 193

1406 கடித்தனன் எயிறு
செந்தீக் கானற்னன்
கனன்று கையில்

பிடித்திடு மேரு வன்ன
பெருந்திறல் கதைய
தொன்றால்
தடித்திடும் அகல
மார்பத் தடவரை அகடு
சாய
அடித்தனன் தக்கன்
உள்ளம் வெருவர
அரிமுன் வீழ்ந்தான். 20
1407 விட்டுமுன் வீழத
லோடும் வீரருள் வீரத்
தண்ணல்
மட்டுறு கமலப் போதில்
வான்பெருந் தவிசில்
வைகுஞ்
சிட்டனை நோக்கி
அன்னான் சிரத்திடை
உருமுற் றென்னக்

குட்டினன் ஒருதன்
கையால் மேல்வருங்
குமர னேபோல். 21

1408 தாக்குத லோடும் ஐயன்
சரணிடைப் பணிவான்
போல
மேக்குறு சென்னி சோர
விரிஞ்சனும் வீழ
அன்னான்
வாக்குறு தேவி தன்னை
மற்றவர் தம்மை
வாளால்
மூக்கொடு குயமுங்
கொய்தான் இறுதிநாள்
முதல்வன் போல்வான். 22

1409 ஏடுலாந் தொடையல்
வீரன் இத்திறம் இவரை

முன்னஞ்
சாடினான் அதுகண்
டங்கட் சார்தரும்
இமையோர் யாரும்
ஓடினார் உலந்தார்
வீழ்ந்தார் ஒள¤த்திடற்
கிடமே தென்று
தேடினார் ஒருவர்
இன்றிச் சிதறினார் கதறு
கின்றார். 23

(16. புகலிடம் -
இருப்பிடம். போய -
போயின.
17. பேதை - காளி.
பித்தன் - சிவன். ஈயேன்
- கொடேன்.
19. தொல் ஊழ் -

பழைய ஊழ்வினை.
இசைவினால் -
தொடர்பால்.
அது - வீரபத்திரன்
கூறியதை. ஊமரின் -
ஊமைகள் போல.
20. அரி முன் - திருமால்
முன்பு. 21. விட்டு -
விட்டுணு.
கமலப்போதில்...
...சிட்டன் -
பிரமதேவன்.
மேல்வரும் - பின்வரும்.
குமரன் போல் - குமரக்
கடவுள் போல்.
22. அன்னான் வாக்குறு
தேவி - சரசுவதி.
மற்றவர் - இலக்குமி

முதலியோர். குயம் -
முலை.)

1410

வேறு

இன்னதோர் காலையில்
இரிந்து போவதோர்
மெய்ந்நிறை மதியினை
வீரன் காணுறாத்
தன்னொரு பதங்கொடே
தள்ளி மெல்லெனச்
சின்னம துறவுடல்
தேய்த்திட் டானரோ. 24

1411 அடித்ததங் கொடுமதி
அதனைத் தேய்த்தபின்
விடுத்தனன் கதிரவன்
வெருவி ஓடலும்
இடித்தெனக் கவுளிடை

எற்றி னானவன்
உடுத்திரள் உதிர்ந்தென
உகுப்பத் தந்தமே. 25

1412 எறித்தரு கதிரவன்
எயிறு பார்மிசைத்
தெறித்திட உயிரொரீஇச்
சிதைந்து வீழ்தலும்
வெறித்தரு பகனெனும்
வெய்ய வன்விழி
பறித்தனன் தகுவதோர்
பரிசு நல்குவான்.
26

1413 தொட்டலும் பகன்விழித்
துணையை இத்திறம்
பட்டது தெரிந்துயிர்
பலவும் பைப்பைய
அட்டிடு கூற்றுவன்
அலமந் தோடலும்

வெட்டினன்
அவன்தலை வீர
வீரனே. 27

1414 மடிந்தனன் கூற்றுவ
னாக வாசவன்
உடைந்தனன் குயிலென
உருக்கொண் டும்பரில்
அடைந்தனன்
அதுபொழு தண்ணல்
கண்ணுறீஇத்
தடிந்தனன் வீட்டினன்
தடக்கை வாளினால். 28

1415 அண்டர்கோன்
வீழ்தலும் அலமந்
தோடிய
திண்டிறல் அங்கியைத்
திறல்காள் சேவகன்

கண்டனன் அங்கவன்
கரத்தை ஒல்லையில்
துண்டம தாகவே
துணித்து வீட்டினான். 29

1416 கறுத்திடு மிடறுடைக்
கடவுட் டேவனை
மறுத்தவன் நல்கிய
வரம்பில் உண்டியும்
வெறுத்திலை
உண்டியால் என்று
வீரனும்
அறுத்தனன் எழுதிறத்
தழலின் நாக்களே. 30

1417 துள்ளிய நாவொடுந்
துணிந்த கையொடுந்
தள்ளுற வீழந்திடுந்

தழலின் தேவியை
வள்ளுகி ரைக்கொடு
வலங்கொள் நாசியைக்
கிள்ளினன் வாகையால்
கிளர்பொற்
றோளினான். 31

1418 அரிதுணைக்
கின்னதோர் ஆணை
செய்திடும்
ஒருதனித் திறலினான்
உம்பர் மேலெழு
நிருதியைக் கண்டனன்
நிற்றி யாலெனாப்
பொருதிறல் தண்டினால்
புடைத்திட் டானரோ. 32

(24. சின்னம் - சிதைவு.
25. கதிரவன் - சூரியன்.

கவுள் - கன்னம்.
26. பகன் எனும்
வெய்யவன் - பகன்
என்னும் மற்றொரு
சூரியன்.
28. நாகம் - சுவர்க்கம்.
உடைந்தனன் - மனம்
உடைந்து.
29. அங்கியை -
அக்கினி தேவனை.
சேவகன் - வீரபத்திரன்.
30. ஏழு திறந்து - ஏழு
பகுதியினை யுடைய.)
1419 வீட்டினன் நிருதியை
வீரன் தன்பெருந்
தாட்டுணை வீழ்தலுந்
தடிதல் ஓம்பினான்
ஒட்டினன் போதிரென்

றுரைத்துச் செல்நெறி
காட்டினன் உருத்திர
கணத்தர்க் கென்பவே. 33

1420 ஒழுக்குடன் உருத்திரர்
ஒருங்கு போதலும்
எழு¢கொடு வருணனை
எற்றிச் செங்கையின்
மழுக்கொடு காலினை
மாய்த்து முத்தலைக்
கழுக்கொடு தனதனைக்
கடவுள் காதினான். 34

1421 எட்டெனுந்
திசையினோன் ஏங்கி
வெள¢கியே
அட்டிடுங் கொல்லென
அஞ்சிப் போற்றலுங்
கிட்டி வைதனன் கேடு

செய்திலன்
விட்டனன் உருத்திரர்
மேவும் தொல்நெறி. 35
1422 தாணுவின் உருக்கொடு
தருக்கு பேரினான்
நாணொடு போதலும்
நடுந டுங்கியே
சோணித புரத்திறை
துண்ணென் றோடுழி
வேணுவின் அவன்தலை
வீரன் வீட்டினான். 36

1423 மணனயர் சாலையின்
மகத்தின் தெய்வதம்
பிணையென
வெருக்கொடு பெயர்ந்து
போதலுங்
குணமிகு வரிசிலை

குனித்து வீரனோர்
கணைதொடுத்
தவன்தலை களத்தில்
வீட்டினான். 37

1424 இரிந்திடு கின்றதோர்
எச்சன் என்பவன்
சிரந்துணி படுதலும்
செய்கை இவ்வெலாம்
அரந்தையொ டேதெரிந்
தயன்தன் காதலன்
விரைந்தவண்
எழுந்தனன்
வெருக்கொள்
சிந்தையான். 38

1425 விட்டனன் திண்மையை
வெய்ய தோர்வலைப்
பட்டதொர்

பிணையெனப்
பதைக்குஞ் சிந்தையான்
மட்டிட அரியஇம்
மகமும் என்முனங்
கெட்டிடு மோவெனா
இவைகி ளத்தினான். 39

1426 ஊறகல் நான்முகத்
தொருவன்
வாய்மையால்
கூறிய உணர்வினைக்
குறித்து நோற்றியான்
ஆரணி செஞ்சடை
அமலன் தந்திட
வீறகல் வளம்பல
வெய்தி னேனரோ. 40

1427 பெருவள நல்கிய

பிரானைச் சிந்தையிற்
கருதுதல் செய்திலன்
கசிந்து போற்றிலன்
திருவிடை மயங்கினன்
சிவையை நல்கியே
மருகனென்
றவனையான் மன்ற
எள்ளினேன். 41

(33. செல்நெறி - போம் வழி. 34. எழு - எழுவாயுதம். காலினை - வாயு தேவனை. தனதனை - குபேரனை.
35. எட்டெனும் திசையினோன் - ஈசானன்.
36. வேணுவின் -

பாட்படையினால். 37.
பிணைஎன - மான்
வடிவங் கொண்டு.
38. எச்சன் - யாகத்தின்
அதி தேவதை. 39.
மட்டிட - அளவிடுதற்கு.
40. ஊறு அகல் - குற்றம்
அற்ற. ஈறு அகல் -
எல்லையற்ற.
41. மன்ற - மிகவும்.
எண்ணினேன் -
இகழ்ந்தேன்.)

1428 வேதநூல் விதிமுறை
விமலற் கீந்திடும்
ஆதியாம் அவிதனை
அளிக்கொ ணாதெனத்
தாதையோன்

வேள்வியில் தடுத்தி
யானுமிவ்
வேதமாம் மகந்தனை
இயற்றி னேனரோ. 42
1429 தந்தைசொல் லாமெனுந்
ததீசி வாய்மையை
நிந்தனை செய்தனன்
நீடு வேள்வியில்
வந்தவெண் மகள்தனை
மறுத்துக் கண்ணுதல்
முந்தையை
இகழ்ந்தனன் முடிவ
தோர்கிலேன். 43
1430 அன்றியும் வீரன்நின்
றவியை ஈதியால்
என்றலும் அவன்தன
தெண்ணம் நோக்கியும்
நன்றென ஈந்திலன்

மறையும் நாடிலேன்
பொன்றிட வந்தகொல்
இனைய புந்தியே. 44
1431 அல்லியங் கமலமேல்
அண்ணல் ஆதியாச்
சொல்லிய வானவர்
தொகைக்கு நோற்றிட
வல்லபண்
ணவர்க்கும்வே
தியர்க்கும் மற்றவர்
எல்லவர் தமக்குமோர்
இறுதி தேடினேன். 45
1432 துதிதரு மறைப்பொருள்
துணிபு நாடியும்
நதிமுடி அமலனை
நன்று நிந்தியா
இதுபொழு திறப்பதற்
கேது வாயினேன்

விதிவழி புந்தியும் மேவு
மேகொலாம். 46

1433 எனத்தகு பரிசெலாம்
இனைந்து தன்னுடை
மனத்தொடு கூறியே
மாளும் எல்லையில்
நினைத்தறி வின்மையை
நிகழ்த்தின் ஆவதென்
இனிச்செய லென்னென
எண்ணி நாடினான். 47

1434 பாடுறு சாரதர் பரப்பும்
வேள்வியின்
ஊடுறு வீரன துரமுஞ்
சீற்றமுஞ்
சாடுறு பத்திரை தகவுங்
கண்ணுறீஇ
ஓடுவ தரிதென உன்னி

யுன்னிமேல். 48

1435 சென்றதோர் உயிரொடு
சிதைந்த தேவர்போல்
பின்றுவன் என்னினும்
பிழைப்ப தில்லையால்
வன்றிறல் வீரன்முன்
வன்மை யாளர்போல்
நின்றிடல் துணிபெனத்
தக்கன் நிற்பவே. 43

(42. இவ்வேதமாம் -
இந்தத் துன்பத்திற்குரிய.
45. ஓர் இறுதி - ஒரு
அழிவுக் காலத்தினை.
46. நிந்தியா - நிந்தித்து.
48. சாடுஉறு -
கொலைபுரிகின்ற.) 43

1436

வேறு
கண்டு மற்றது வீரபத்
திரனெனுங் கடவுள்
கொண்ட சீற்றமொ
டேகியே தக்கனைக்
குறுகி
அண்ட ரோடுநீ ஈசனை
இகழ்ந்தனை அதனால்
தண்ட மீதென
வாள்கொடே
அவன்தலை தடிந்தான். 50

1437 அற்ற தோர்சென்னி
வீழுமுன் இறைவன்அங்
கையினால்
பற்றி ஆயிடை
அலமரும் பாவகற்
பாராத்

திற்றி ஈதெனக்
கொடுத்தனன்
கொடுத்தலுஞ் செந்தீ
மற்றொர் மாத்திரைல்
போதினில் மிசைந்தது
மன்னோ. 51

1438 மெல்ல வேயெரி
யத்தலை நுகர்தலும்
வேத
வல்லி யாதியாந்
துணைவியர் தக்கன்மா
மகளிர்
சில்லி ருங்குழல்
தாழ்வரச் செங்கரங்
குலைத்தே
ஒல்லை யத்திறங்
கண்டனர் புலம்பிவந்
துற்றார். 52

1439 அந்த வேலையின்
மறைக்கொடி
தன்னைமுன் னணுகி
முந்தி வார்குழை
இறுத்தனன் ஏனையர்
முடியுந்
தந்த நங்கையர்
சென்னியும் வாள்கொடு
தடிந்து
கந்து கங்கள்போல்
அடித்தனள் பத்திர காளி. 53
1440 காளி யாம்பெயர்த்
தலைவியுங் கருதலர்
தொகைக்கோர்
ஆளி யாகிய வீரனும்
ஏனைஅண் டர்களைக்
கேளி ராகிய

முனிவரைத் தனித்தனி
கிடைத்துத்
தாளில் ஆர்ப்பினில்
தடக்கையில் படைகளில்
தடிந்தார். 54

1441 மருத்தும் ஊழியில்
அங்கியும் உற்றென
மாதும்
உருத்தி ரப்பெரு
மூர்த்தியும் வந்தென
உயர்சீர்
தரித்த வீரனும் பத்திர
காளியுந் தக்கன்
திருத்தும் வேளவியைத்
தொலைத்தனர்
தனித்தனி தெரிந்தே. 55

1442 அண்ணல் தன்மையுந்

தேவிதன் நிலைமையும்
அயரும்
விண்ணு ளோர்சிலர்
நோக்கியே யாங்கணும்
விரவி
அண்ணு கின்றனர்
யாரையுந்
தொலைக்குநர் அம்மா
எண்ணி லார்கொலாம்
வீரனும் இறைவியும் 56
என்றார்.
1443 இற்றெ லாம்நிகழ்
வேலையில் வீரன
திசையால்
சுற்று தானையர்
இத்திறம் நோக்கியே
சூழ்ந்த
பொற்றை போலுயர்

காப்பினை வீட்டியுள்
புகுந்து
செற்ற மோடுசென்
றார்த்தனர் வானுளோர்
தியங்க. 57

1444 சூர்த்த நோக்குடைப்
பூதருங் காளிகள்
தொகையும்
ஆர்த்த காலையின்
முனிவருந் தேவரும்
அயர்ந்து
பார்த்த பார்த்ததோர்
திசைதொறும் இரிதலும்
படியைப்
போர்த்த வார்கட
லாமென வளைந்தடல்
புரிய.

(50. தண்டம் - தண்டனை. 51. அலமரும் - சுழலுகின்ற. பாவகன் - அக்கினி. ஈது திற்றி - இதனைத் தின்னுவாய்.
52. சில் - தலையில் அணியும் ஓர் ஆபரணம்.
53. வார்குழை - நீண்ட காதினை. கந்துகம் - பந்து.
54. ஆளி - சிங்கம். கேளிர் - சுற்றத்தினர்.
57. காப்பினை வீட்டி - மதிலினை இடித்து. 58. சூர்த்த - அச்சம் தரும்.)

1445

வேறு

தியக்குற்றனர்

வெருளுற்றனர்

திடுக்கிட்டனர்

தெருள்போய்த்

துயக்குற்றனர்

பிறக்குற்றனர்

தொலைவுற்றனர்

மெலியா

மயக்குற்றனர்

கலக்குற்றனர்

மறுக்குற்றனர் மனமேல்

உயக்குற்றனர்

இமையோர்களும்

உயர்மாமுனி வரரும். 59

1446 அளிக்கின்றனர்

தமைத்தம்முனை
அருண்மக்களை
மனையைக்
களிக்கின்றதொ
ரிளையோர்தமைச்
சுற்றந்தனைக் கருதி
விளிக்கின்றனர்
பதைக்கின்றனர்
வெருக்கொண்டனர்
பிணைத்தூ
டொளிக்கின்றனர்
அவன்வேள்வியில்
உறைகுற்றதொர்
மறையோர். 60
1447 அலக்கட்படும்
இமையோர்களும்
அருமாமுனி வரரும்
நிலக்கட்படு

மறையோர்களும்
நெடுநீர்க்கட லாகக்
கலக்குற்றனர்
வரையாமெனக்
கரத்தாற்புடைத்
துதிர்த்தார்
உலக்கிற்றிர ளாகச்சினத்
துயர்மால்கரி ஒத்தே. 61

1448 முடிக்குந்திறல்
பெருங்கோளரி
முழங்கிற்றென
முரணால்
இடிக்கின்றனர்
கலைமானென
இமையோர்தமை
விரைவில்

பிடிக்கின்றனர்
அடிக்கின்றனர்
பிறழ்பற்கொடு
சிரத்தைக்
கடிக்கின்றனர்
ஒடிக்கின்றனர்
களத்தைப்பொரு
களத்தில். 62
1449 முறிக்கின்றனர்
தடந்தோள்களை
முழுவென்புடன்
உடலங்
கறிக்கின்றனர்
அடிநாவினைக்
களைகின்றனர்
விழியைப்
பறிக்கின்றனர்
மிதிக்கின்றனர்

படுக்கின்றனர் சங்கங்
குறிக்கின்றனர்
குடிக்கின்றனர்
குருதிப்புனல் தனையே. 63

எடுக்கின்றனர்
பிளக்கின்றனர்
எறிகின்றர் எதிர்போய்த்
தடுக்கின்றனர்
உதைக்கின்றறர்
தடந்தாள்கொடு
துகைத்துப்
படுக்கின்றனர்
தலைசிந்திடப்
படையாவையுந்
தொடையா
விடுக்கின்றனர்
மடுக்கின்றனர்

மிகுமுனினைப்
பகுவாய். 64

1451 நெரிக்கின்றனர்
சிலர்சென்னியை
நெடுந்தாள்கொடு
மிதியா
உரிக்கின்றனர்
சிலர்யாக்கையை
ஒருசிற்சிலர் மெய்யை
எரிக்கின்றனர்
மகத்தீயிடை
இழுதார்கடத் திட்டே
பொரிக்கின்றனர்
கரிக்கின்றனர்
புகைக்கின்றனர் அம்மா. 65

1452 அகழ்கின்றனர்
சிலமார்பினை

அவர்தங்குடர் சூடி
மகிழ்கின்றனர்
நகைக்கின்றனர்
மதர்க்கின்றனர்
சிவனைப்
புகழ்கின்றனர்
படுகின்றதொர்
புலவோர்தமைக் காணா
இகழ்கின்றனர்
எறிந்தேபடை
ஏற்கின்றனர் அன்றே. 66
1453 கரக்கின்றதொர்
முனிவோர்களைக்
கண்டேதொடர்ந் தோடித்
துரக்கின்றனர்
பிடிக்கின்றனர்
துடிக்கும்படி படிமேல்
திரக்குன்றுகொ

டரைக்கின்றனர்
தெழிக்கின்றனர்
சிலவூன்
இரக்கின்றதொர்
கழுகின்றொகைக்
கீகின்றனர் மாதோ.
(61. அலக்கண் -
துன்பம். 62. பெருங்
கோளரி - பெருஞ்
சிங்கம்.
களத்தை - கழுத்தை. 63.
கறிக்கின்றனர் -
மெல்லுகின்றனர்.
சங்கங் குறிக்கின்றனர் -
வெற்றிச் சங்கு
ஊதுகின்றனர்.
67. தெழிக்கின்றனர் -
பேரொலி

செய்கின்றனர்.) 67
1454 நெய்யுண்டனர்
ததியுண்டனர்
பாலுண்டனர் நீடுந்
துய்யுண்டனர்
இமையோர்கடந்
தொகைக்காமென
உய்க்கும்
ஐயுண்டதொர்
அவியுண்டனர்
மகவேள்வியில் வந்தே
நையுண்டவர்
உயிர்கொண்டிடு
நாளுண்டவ ரெல்லாம். 68

1455 உலகத்துக்கடை
அனலைக்கடல்
உவர்நீர்தணித் தெனவே

மகத்தில்திரி
விதவேதியில்
வைகுங்கனல் அதனை
மிகத்துப்புர
வுளதென்றுகொல்
வியப்பார்தம துயிரின்
அகத்துப்புனல்
விடுத்தேவிரைந்
தவித்தார்மகம்
அழித்தார். 69

1456 தடைக்கொண்டதொர்
சிறைதோறுள
சாலைக்கத வெல்லாம்
அடைக்கின்றனர்
தழலிட்டனர்
அவனுற்றவர் தம்மைத்
துடைக்கின்றனர்
கலசத்தொடு

தொடர்கும்பமும்
விரைவால்
உடைக்கின்றனர்
தகர்க்கின்றனர்
உதிர்க்கின்றனர்
உடுவை.

1457 தவக்ககண்டகத்
தொகையார்த்திடத்
தனிமாமகத் தறியில்
துவக்குண்டய
ரணிமேதகு துகடீர்பசு
நிரையை
அவிழ்க்கின்றனர்
சிலர்கங்கையின்
அலையிற்செல
விடுவார்
திவக்கும்படி

வானோச்சினர்
சிலவெற்றினர் 71
படையின்.
1458 பங்கங்கள்
படச்செய்திடு
பதகன்மகந்
தனிற்போய்க்
கங்கங்களை
முறிக்கின்றனர்
கவின்சேரா மகளிர்
அங்கங்களைக்
கறிக்கின்றனர்
அறுக்கின்றனர் அதனை
எங்கெங்கணும்
உமிழ்கின்றனர்
எறிகின்றனர் எவரும். 72

1459 படுகின்றவர்

வருமூர்த்தியும்
படர்மானமுந் தேருஞ்
சுடுகின்றனர்
அவர்கொண்டிடு
தொலைவில்படைக்
கலமும்
இடுகுண்டல
முடிகண்டிகை
எவையுந்தழல் இட்டே
கடுகின்றுக ளாகப்பொடி
கண்டார்திறல்
கொண்டார். 73
அடிக்கொண்டதொர்
மகச்சாலையுள்
அமர்வேதியை
அடியால்
இடிக்கின்றனர்
பொடிக்கின்றனர்

இருந்தோரணத்
தொகையை
ஒடிக்கின்றனர்
பெருந்தீயினை
உமிழ்கின்றனர்
களிப்பால்
நடிக்கின்றனர்
இசைக்கின்றனர்
நமனச்சுறுந் திறத்தோர். 74

1461 தருமத்தினை
அடுகின்றதொர்
தக்கன்றனக் குறவா
மருமக்களைப்
பிடிக்கின்றனர்
வாயாற்புகல் ஒண்ணாக்
கருமத்தினைப்
புரிகின்றனர்

கரத்தாலவர் உரத்தே
உருமுற்றெனப்
புடைக்கின்றனர்
உமிழ்வித்தனர்
அவியே.
(68. ததி - தயிர். துய் -
சோறு.
69. உகத்துக் கடை
அனல் - ஊழிக்
காலத்துப்
பிரளயாக்கினி.
திரிவித வேதி - மூவகை
வேதிகை. உயிர் - இங்கு
ஆண் குறி.
அகத்துப்புனல் - இங்குச்
சிறுநீர். 70. உடுவை -
ஆடுகளை.
71.

தவக்கண்டகத்தொகை
ஆர்த்திட - மிகவும்
கழுத்தில் கண்ணுள்ள
மணிகள் ஒலிக்கவும்;
(யாகத்திற்குரிய
ஆடுகளின் கழுத்தில்
உணவுக்காக,
காரை முதலிய
முட்செடிகளைக்
கட்டுதல் மரபு ஆதலின்,
ஆடுகளுக்குத்)
தவத்திற்குரிய காரை
முட்செடிகளை
உண்பிக்க.
தவக்கண்டகத் தொகை
ஆர்த்திட்ட - மந்திர
செபம் செய்தலாகிய
தவத்துடன்

தோயலிடப்பட்ட
வாளாயுதத்தல்
அறுத்தற்கு. கண்டகம் -
வாள். மகத்தறி -
யூபஸ்தம்பம்.
பசு என்றது
யாகத்திற்குரிய
ஆடுகளை. 72. பங்கம் -
இழிவு.
பதகன் - கீழ்மகன்;
தக்கன். கங்கம் -
பருந்து.) 75

1462 தறிக்கின்றனர்
சிலதேவரைத்
தலைமாமயிர் முழுதும்
பறிக்கின்றனர்
சிலதேவரைப்

பாசங்கொடு தறியில்
செறிக்கின்றனர்
சிலதேவரைச்
செந்தீயிடை வதக்கிக்
கொறிக்கின்றனர்
சிலதேவரைக்
கொலைசெய்திடுங் 76
கொடியோர்.

1463 நாற்றிக்கினும்
எறிகின்றனர்
சிலர்தங்களை நல்லூன்
சேற்றுத்தலைப்
புதைக்கின்றனர்
சிலர்தங்களைச் செந்நீர்
ஆற்றுக்கிடை
விடுக்கின்றனர்
சிலர்தங்களை அண்டப்
பாற்றுக்கிரை

இடுகின்றனர்
சிலர்தங்களைப் பலரும். 77
1464 இடைந்தாரையும்
விழுந்தாரையும்
எழுந்தாரையும் எதிரே
நடந்தாரையும்
இரிந்தாரையும்
நகையுற்றிட இறந்தே
கிடந்தாரையும்
இருந்தாரையுங
கிளர்ந்தாரையும்
விண்மேல்
படர்ந்தாரையும்
அவர்க்கேற்றதொர்
பலதண்டமும் புரிந்தார். 78
1465 உலக்குற்றிடு
மகங்கண்டழு
துளம்நொந்தனர் தளரா

மலக்குற்றிடும்
அணங்கோர்தமை
வலிதேபிடித் தீர்த்துத்
தலக்கட்படு
மலர்ப்பொய்கையைத்
தனிமால்கரி முனிவால்
கலக்கிற்றெனப்
புணர்கின்றனர்
கணநாதரில் சிலரே. 79

1466 குட்டென்பதும்
பிளவென்பதும்
கொல்லென்பதும் கடிதே
வெட்டென்பதும்
குத்தென்பதும்
உரியென்பதும்
விரைவில்
கட்டென்பதும்
அடியென்பதும்

உரையென்பதும்
களத்தே
எட்டென்பதொர்
திசையெங்கணும்
எவரும்புகல் வனவே. 80

1467 கையற்றனர்
செவியற்றனர்
காலற்றனர் காமர்
மெய்யற்றனர்
நாவற்றனர்
விழியற்றனர் மிகவும்
மையுற்றிடு களமற்றனர்
அல்லாமலர் அயன்சேய்
செய்யுற்றிடு
மகத்தோர்களில்
சிரைவற்றவர் இலையே. 81

1468 வேறு

இத்திறம் யாரையும்
ஏந்தல் தானையும்
பத்திரை சேனையும்
பரவித் தண்டியா
மெத்துறும் அளைகெழு
வேலை யில்பல
மத்துறு கின்றென 82
மகத்தை வீட்டவே.

1469 செழுந்திரு வுரத்திடை
தெருமந் துற்றிடத்
தொழுந்திறல் பரிசனந்
தொலைய மாயவன்
அழுந்திடு கவலொடும்
அயர்வு யிர்த்தவண்
எழுந்தனன் மகம்படும்
இறப்பு நோக்கினான். 83

1470 திருத்தகும்
வேள்வியைச் சிதைவின்
றாகயான்
அருத்தியிற் காத்ததும்
அழகி தாலெனாக்
கருத்திடை உன்னினன்
கண்ணன் வெள¢கியே
உருத்தனன் மானநின்
றுளத்தை ஈரவே.

(76. தறித்தல் - வெட்டுதல். பாசம் - கயிறு. தறி - தூண். 77. பாற்று - பாறு - பருந்து. 78. மலக்கு - கலக்கம்.
அணங்கு - தேவமாதர். 82. ஏந்தல் -

வீரபத்திரன்.
83. செழுந்திரு - இலக்குமி. உரம் - மார்பு.
84. திருத்தகும் - செல்வமிகுந்த.
கண்ணன் - திருமால்.) 84

1471 பரமனை இகழ்ந்திடு
பான்மை யோர்க்கிது
வருவது முறையென
மனத்துட் கொண்டிலன்
தெருமரு முணர்வினன்
திறல்கொள் வீரன்மேல்
பொருவது கருதினன்
பொருவில் ஆழியான். 85

1472 உன்னினன் கருடனை
உடைந்த தாதலுந்
தன்னுறு சீற்றமாந்

தழலை ஆங்கொரு
பொன்னிருஞ்
சிறையபுள் ளரசன்
ஆக்கலும்
அன்னது வணங்கியே
அரிமுன் நின்றதே. 86

1473 நிற்றலும் அதன்கையின்
நீல மேனியான்
பொற்றடந்
தாள்வையாப்
பொருக்கென் றேறியே
பற்றினன் ஐம்பெரும்
படையும் வேள்வியுள்
முற்றுறு பூதர்மேல்
முனிவுற் றேகினான். 87

1474 எடுத்தனன் சங்கினை
இலங்கு செந்துவர்

அடுத்திடு பவளவாய்
ஆரச் சேர்த்தியே
படுத்தனன் பேரொலி
பரவைத் தெண்டிரைத்
தடக்கட லுடைந்திடு 88
தன்மை போலவே.

1475 மீச்செலும் அமரர்கள்
புரிந்த வேள்வியந்
தீச்சிகை உதவிய
சிலையை வாங்கியே
தாச்செலும் வசிகெழு
சரங்கள் எண்ணில
ஓச்சினன் வீரன துரவுத்
தானைமேல். 89

1476 காளிகள் தொகைகளுங்
கழுதின் ஈட்டமுங்
கூளிகள் தொகைகளுங்

குழுமி யேற்றெழீஇ
வாளிகள்
தொகைசொரீஇ மாயற்
சூழ்வுறா
நீளிகல் புரிந்தனர் 90
நிகரில் வன்மையார்.

1477 தண்டுள வலங்கலந்
தடம்பொற் றோளுடை
அண்டனுந் தன்படை
அனைத்து நேர்கொடு
மண்டமர் புரிதலை மற்ற
எல்லையில்
கண்டனன் நகைத்தனன்
கடவுள் வீரனே. 91

1473 வெருவரும்
பெருந்திறல் வீரன்
தண்டுழாய்

அரியொடு போர்செய
ஆதி நாயகன்
திரைகடல் உலகமுற்
சிறிது தானென
ஒருபெருந் தேரினை
உய்த்திட் டானரோ.
(85. ஆழியான் -
திருமால். ஆழியான்
மனத்துட் கொண்டிலன்
என்க.
86. உடைந்தது -
வீரபத்திரனுக்குப்
பயந்து ஓடியது.
புள்ளரசன் - கருடன்.
அரி - திருமால். 89.
தீச்சிகை - யாகாக்கினி.
சிலை - வில்.
தாச் செலும் - தாவிச்

செல்லுகின்ற. வசி -
வன்மை.
90. கழுது - பேய்.
சொரீஇ - விடுத்து.
92. ஆதிநாயகன் -
சிவபெருமான்.) 92

1479 பாயிரந் தானெனப்
பகரும் வேதமா
மாயிரம் புரவிகள்
அளப்பில் கேதனங்
காயிரும் படைகள்மீக்
கலந்த தாகிய
மாயிருந் தேரவண்
வல்லை வந்ததே. 93
1480 தேரவண் வருதலுந்
திறல்கொள் வீரனால்
பாரிடை வீழ்ந்தயர்

பங்க யாசனன்
ஆருயிர் பெற்றென
அறிவு பெற்றெழீஇ
நேரறு மகம்படு நிகழ்ச்சி
நோக்கினான். 94

1481 அரிபொரு
நிலைமையும் ஆடல்
வீரன
துருகெழு செற்றமும்
உம்பர் தன்னிடை
இர தம்வந் திட்டதும்
யாவும் நோக்கியே
கருதினன் யானுயுங்
கால மீதெனா. 95

1482 விண்ணிழி தேரிடை
விரைவில் நான்முகன்
நண்ணினன் வலவனின்

நகைமுட் கோல்கொடு
துண்ணென நடத்தியே
தொழுது வீரனாம்
புண்ணியன் தனக்கிது 96
புகறல் மேயினான்.

1483 நீறணி பவளமெய்
நிமலன் நிற்கிதோர்
வீறணி தேர்தனை
விரைவில் உய்த்தனன்
தேறலர் தமையடுந்
திறல்கொள் வீரநீ
ஏறுதி துணைவியோ
டென்று போற்றினான். 97

1484 போற்றினன் இரத்தலும்
பொருவில் வேதன்மேல்
சீற்றமுள் ளதிலொரு
சிறிது நீங்கியே

ஆற்றல்கொள் வீரன்எம்
மன்னை தன்னுடன்
ஏற்றமொ டதன்மிசை
இமைப்பின் 98
மேவினான்.

1485 மேவிய காலையில்
வெலற்க ருந்திறல்
சேவக அடியனேன்
திறத்தைக் காண்கெனத்
தாவகல் தேரினைத்
தண்டு ழாய்முடிக்
காவலன் முன்னுறக்
கடாவி உய்ப்பவே. 99

1486 வரனுறு நான்முக
வலவன் உய்த்திடு
திருமணித் தேர்மிசைத்

திகழ்ந்த வீரன்முன்
ஒருதனி வையமேல்
உம்பர்க் காகவே
புரமட வருவதோர்
புராரி போன்றனன்.

1487 எல்லையில் பெருந்திறல்
இறைவன் ஏறுதேர்
அல்லியங் கமலமேல்
அண்ணல் உய்த்திடச்
சொல்லருந் தானையின்
தொகையை நீக்கியே
வல்லைசென் றிறுத்ததம்
மாயன் முன்னரே.

(93. கேதனம் - கொடி.
95. உம்பர் தன்னிடை -
ஆகாயத்தில்.
97. போற்றினான் -
(பிரமன்)

வணங்கினான்.
98. ஏற்றமொடு -
கவுரவத்துடன்.
99. தாஅகல் -
குதிரைகளை
மிகுதியாகப் பூட்டிய.
தா - பாய்தல்; குதிரை :
ஆகுபெயர். 100.
வலவன் - சாரதி.
புராரி - சிவபெருமான்.
101. அல்லி -
அகவிதழ்.) 101

1488 பாருல களவினும் பரந்த
பைம்பொனந்
தேரவண் எதிர்தலுந்
திருவு லாவிய
காருறழ் மேனியங்

கண்ணன் கண்ணுதல்
வீரனை நோக்கியோர்
மொழிவி ளம்பினான். 102

1489 வேறு
தெழித்த வார்புனற்
கங்கையஞ் சடைமுடிச்
சிவனைப்
பழித்த தக்கனை
அடுவதல் லாலவன்
பாலில்
இழுக்கில் தேவரை
அடுவதென்
வேள்வியை எல்லாம்
அழித்த தென்னைநீ
புகலுதி யாலெனா
அறைந்தான்.
103

1490 பாடல் சான்றிடு மாலிது

புகறலும் பலரும்
நாடு தொல்புகழ
வீரன்நன் றிதுவென
நகையா
ஈடு சேர்இமில் ஏற்றுடன்
வயப்புலி யேறொன்
றாடல் செய்தல்போல்
ஒருமொழி உரைத்தனன்
அன்றே. 104

1491 எல்லை இல்லதோர்
பரமனை இகழ்ந்தவன்
இயற்றும்
மல்லல் வேள்வியில்
அவிநுகர்ந்
தோர்க்கெலாம்
மறைமுன்
சொல்லுந் தண்டமே

புரிந்தனன் நின்னையுந்
தொலைப்பாம்
வல்லை யேல்அது
காத்தியென் றனன்உமை 105
மைந்தன்.

1492 வீரன் இங்கிது புகறலுஞ்
செங்கண்மால்
வெகுண்டு
பார வெஞ்சிலை
குனித்தனன் நாணொலி
படுத்தி
யாரும் விண்முகில்
ஒன்றுதன் வில்லொடும்
அப்பு
மாரி பெய்தெனப்
பகழியால் பூதரை
மறைத்தான்.
106

1493 கணங்கள் தம்மிசை
மால்சரம் பொழிதலுங்
காணுூஉ
அணங்கு தன்னொடு
நகைசெய்து வீரனாம்
அமலன்
பணங்கொள் ப·றலைப்
பன்னகக் கிறைவனாற்
படைத்த
குணங்கொள் மேருவே
அன்னதோர்
பெருஞ்சிலை
குனித்தான். 107

1494 செற்ற மீக்கொள
ஐயன்வில் வாங்கினன்
சிறிதே
பற்றி நாணொலி

எடுத்தலும் ஒடுங்கின
பரவை
பொற்றை யாவையுங்
கீண்டன துளங்கின
புவனம்
இற்றை வைகலோ
இறுதியென் றயர்ந்தனர்
எவரும். 108

1495 கோளி லாகிய புற்றிடை
ஓரராக் குறுகி
மீளில் வெஞ்சினக்
குழவிகொண் டேகலின்
வீரன்
தோளில் வாங்கிய
சிலையினில் தூணியில்
துதைந்த
வாளி வாங்கியுய்த்

தொருதனி மாயனை
மறைத்தான். 109

1496 செங்க ணான்தனை
மறைத்தபின் மற்றவன்
செலுத்துந்
துங்க வெங்கணை
யாவையும் பொடிபடத்
தொலைப்ப
அங்கொ ராயிரம்
பகழியை ஐதெனப்
பூட்டி
எங்கள் நாயகன்
திருமணிப்
புயத்தின்நேர் எய்தான். 110

1497 எய்யும் வெங்கணை
யாவையும் வீரருள்
இறையாம்

ஐயன் ஆசுகம் ஆயிரம்
ஓச்சினன் அகற்றி
ஒய்யெ னக்கரி
யோன்நுதல் மீமிசை
ஒருதன்
வெய்ய பொத்திரம்
ஏவினன் அவனுளம் 111
வெருவ.
1497 ஏவு தொல்கணை
மாயவன் நுதலிடை
இமைப்பின்
மேவு கின்றுழி
அனையவன் தளர்தலும்
வீரன்
வாவு தேர்மிசை
ஊன்றினன்
சிலையைவார்
கணையுந்

தூவு கின்றிலன் மாலிடர்
நீங்குறுந் துணையும். 112
1497 இன்னல் அத்துணை
யகன்றுமால் எதிர்தலும்
எமது
மன்னும் நேர்ந்தனன்
இருவரும் வரிசிலை
வளையாப்
பொன்னின் வாளிகள்
பொழிந்தனர்
முறைமுறை பொருதார்
அன்ன பான்மையர்
செய்தபோர் யாவரே
அறைவார். 113
1497 மாறு கொண்டபோர்
இவ்வகை புரிதலும்
வயத்தால்
வீறு கொண்டுயர்

முக்கணான் வெய்யதீ
வடவைக்
கூறு கொண்டதோர்
படையினை ஒச்சலுங்
குவட்டில்
ஏறு கொண்டலை
அனையவன்
உரத்தில்எய் தியதே. 114
1501 எய்து காலையில்
உளம்பதை பதைத்திட
இரங்கி
வெய்து யிர்ப்புடன்
உணர்வொரீஇ
உளம்நனி மெலிந்து
நொய்தின் மையலை
நீங்கலும் முகுந்தனை
நோக்கிச்
செய்தி போரென

உரைத்தனன் சரபமாந்
திறலோன். 115

1502 மெய்வ தத்தினை
யாவர்க்கும்
விரைவினில்
இழைக்குந்
தெய்வ தப்படை
முழுவதுஞ்
செங்கண்மால் செலுத்த
அவ்வ னைத்தையும்
அனையஅப்
படைகளால் அகற்றிக்
கவ்வை முற்றினன்
நுதல்விழி அளித்திடுங்
கடவுள். 116

1503 வேறு
தேன்றிகழ் பங்கயத்

திருவின் நாயகத்
தோன்றல்தன்
படைக்கலந் தூண்ட
எங்கணுஞ்
சான்றென நின்றவன்
தனயன் வீரமாம்
வான்திகழ் படைதொடா
வல்லை மாற்றவே. 117

1504 பொருகணை அளப்பில
பொழிய மாற்றியோர்
சரமது செலுத்திமால்
சார்ங்கம் ஒன்றையும்
இருதுணி படுத்தினன்
இறைவன் மைந்தனே.

114. கொண்டலை
அனையவன் -
திருமால்.

115. சரபமாம்
திறலோன் -
வீரபத்திரன்.
சரபம் - எண்
கால்களையுடைய ஒரு
பறவை.
116. மெய்வதம் - உடல்
அழிவு. கவ்வை -
அட்டகாசம்;
பேரொலியுமாம். 118.
சார்ங்கம் - சாரங்கம் -
வில்;
இது திருமால் வில்.) 118
1505 பின்னுமத் துணைதனில்
பெருந்தி றற்பெயர்
முன்னவன் இருகணை
முறையின் ஓச்சியே
பன்னக மிசைத்துயில்

பகவன் ஊர்திதன்
பொன்னிருஞ்
சிறையினைப் புவியில்
வீட்டினான். 119

1506 ஆயதோர் அமைதியில்
ஆழி யங்கையான்
மாயவன் ஆதலின்
வரம்பில் கண்ணரை
மேயின காதலின்
விதிப்ப வீரன்முன்
பாயிருள் முகிலெனப்
பரம்பி னாரரோ. 120

1507 அங்கவர் யாரையும்
அமலன் வெய்யகட்
பொங்கழல்
கொளுவிநுண் பொடிய
தாக்கலும்

பங்கய விழியினான்
பரமன் அன்றருள்
செங்கையில் ஆழியைச்
செல்கென் றேவினான். 121

1508 விடுத்ததோர் திகிரியை
வீரன் அங்கையால்
பிடித்தவண்
விழுங்கினன் பெயர்த்து
மாயவன்
எடுத்திடு கதையினை
எறிய அன்னது
தடுத்தனன் தனதுகைத்
தடம்பொற் றண்டினால். 122

1509 வேறு
சங்கார் செங்கைப்
புங்கவன் ஏவுந்
தண்டம்போய்

மங்கா அங்கண் வீழ்வது
காணா வாள்வாங்கிப்
பொங்கா நின்றே
உய்த்திட எய்தும்
பொழுதின்கண்
உங்கா ரஞ்செய்
திட்டனன் அம்மா
உமைமைந்தன். 123

1510 ஒய்யென் றையன்
சீற்றமொ டங்கண்
உங்காரஞ்
செய்யுங் காலத்
தோவியம் என்னச்
செயனீங்கிக்
கையும் வாளு
மாய்அவண் நின்றான்
கடலூடே

வையம் முண்டு
கண்டுயில் கின்ற 124
மாமாயன்.

1511 சான்றகல் மாயன் அச்சுற
வெய்தித் தளர்காலை
மூன்றுகண் வீரன் யாது
நினைந்தோ
முனிவெய்த
ஆன்றதொர் செற்றம்
நீங்குதி என்னா
அண்டத்தே
தோன்றிய தம்மா
கண்ணுதல் ஈசன்
சொல்லொன்றே. 125

1512 அந்தர மீதே வந்திடு
சொல்லங் கதுகேளா
எந்தை மனங்கொள்

வெஞ்சினம் நீங்கி
யிடுபோழ்தில்
அந்தின் மணித்தேர்
உய்த்திடு பாகன்
அதுநோக்கி
வந்தனை செய்தே
போற்றியொர் மாற்றம்
வகுப்பானால். 125
(120. வரம்பில்
கண்ணரை - அளவற்ற
திருமால்களை.
121.
பங்கயவிழியினான் -
திருமால்.
126. அந்தரமீதே
வந்திடு சொல் - அசரீரி. 126
1513

வேறு

அறத்தினை யொருவிச்
செல்லும் அழிதகன்
உலக மெல்லாம்
இறத்தலை யெய்த
இங்ஙன் இயற்றிய
மகத்தின் மேவிப்
பெறத்தகும் அவியை
நுங்கும் பேதையேன்
பிழையை யெல்லாம்
பொறுத்தனை
கொண்மோ என்னாப்
பொன்னடிக் கமலம்
பூண்டான். 127

1514 பூண்டிடும் உலகந் தந்த
புங்கவன் தன்னை
நோக்கி
ஆண்டகை வீரன் அ·தே

ஆகவென் றருள
லோடும்
நீண்டதோர் மாயன்
அன்னான் நீடருள்
நிலைமை காணூஉ
ஈண்டிது காலம் என்னா
ஏத்தினன் இயம்ப 128
லுற்றான்.

1515 பாரவெஞ சிலையும்
வீட்டிப் பல்படைக்
கலமுஞ் சிந்திச்
சேரலர் உயிர்கள் உண்ட
திகிரியுஞ் செல்ல
நுங்கிப்
போரிடை எனையும்
வென்று புகழ்புனைந்
திடுதி யென்றால்
வீரநின் றகைமை யாரே

முடிவுற விளம்ப
வல்லார். 129

1516 ஆசறு நெறியின் நீங்கும்
அயன்மகன் இயற்று
கின்ற
பூசனை விரும்பி
வேள்வி புகுந்தனன்
புந்த யில்லேன்
மாசறு புகழாய்
நின்னால் மற்றிது
பெற்றேன் அந்தோ
ஈசனை இகழ்ந்தோர்
தம்பால் இருப்பரோ
எணணம் மிக்கோர். 130

1517 ஆதிநா யகனை ஒல்லார்
அனையவர்ச்
சேர்ந்தார்க் கெல்லாம்

வேதமே இசையா
நிற்கும் வியன்பெருந்
தண்டம் அன்றோ
ஈதெலாம் எம்ம
னோர்பால் இயற்றிய
இனைய தன்மை
நீதியால் எம்பால் அன்றி
நின்கணோர் குறையும்
உண்டோ.
131

1518 விழிதனில் முறுவல்
தன்னில் செய்துயிர்ப்
பதனில் ஆர்ப்பின்
மொழிதனில் புவன
மெல்லா முதலொடு
முடிக்க வல்லோய்
பழிபடு வேள்வி
தன்னில் பலரையும்

படையி னோடும்
அழிவுசெய் திட்ட
தம்மா அடிகளுக் காடல்
அன்றோ. 132

1519 உறுநர்தந் தொகைக்கு
வேண்டிற் றுதவிய
முதல்வன் ஏவும்
முறையதை உன்னி
வேள்வி முடிப்பதோர்
ஆடல் ஆகச்
சிறிதெனும் அளவை
தன்னில் சிதைத்தனை
அன்றி எந்தாய்
இறுதிசெய் திடநீ
யுன்னின் யார்கொலோ
எதிர்க்கும் நீரார். 133

1520 இறுதிசெய் திடலே
சீற்றம் இன்பமே
யாண்மை என்னா
அறைதரு சத்தி
நான்காம் அரன்தனக்
கையை காளி
முறைதரு கவுரி
இன்னோர் மும்மையும்
பெற்றோர் ஏனைப்
பெறலருஞ் சத்தி
யான்இப் பெற்றியும் 1343
மறைகள் பேசும்.

1521 அன்னதோர் பரிசால்
ஈசன் அரும்பெருஞ்
சத்தி என்னில்
பின்னமன் றவற்கி
யானும் ரெ¤துமன்

புடையேன் முக்கண்
முன்னவன் தன்பால்
ஈண்டென்
மொய்ம்புடன் இழந்த
நேமி
இன்னுமங் கவன்தாள்
அர்ச்சித் திமைப்பினில்
எய்து கின்றேன். 133

(129. நுங்கி - விழுங்கி.
121. ஒல்லார் -
பகைத்தவர்.
132. ஆர்ப்பு -
அட்டகாசம். முதலொடு
அடியொடு.
133. உறுநர் -
அடியடைந்த அன்பர்.
134. இறுதிசெய்திடல்,
சீற்றம், இன்பம்,

ஆண்மை இவை
நான்கும் இறைவனுக்கு
துர்க்கை, காளி, கௌரி,
திருமால்
என்னும் சக்திகளாகும்.
யான் - இங்குத்
திருமால்.)

135

1522 முனிவுடன் அடிகள்
ஈண்டு முறைபுரிந்
ததனுக் கின்னல்
மனனிடை கொள்ளேன்
இன்னான் மற்றிது
பெறுத லாலே
புனிதமாக் கொள்வன்
தண்டம் புரிந்தனை
பொறுத்தி குற்றம்
இனியருள் புரிதி

என்னா இணையடி
இறைஞ்ச லோடும். 136
1523 வீரருள் வீரன் மாலோன்
விளம்பிய மாற்றங்
கேளா
நாரணற் கன்பு செய்து
நணியதோர் காலை
தன்னில்
பாரிடஞ் சூழ நந்தி
பரவிட உமையா ளோடு
மூரிமால் விடை மேற்
கொண்டு தோன்றினன்
முடிவிலாதான். 137
1524 தேங்கிய கங்கை சூடுஞ்
செஞ்சடைக் கடவுள்
தோன்ற
ஆங்கது தெரிந்த வீரன்
அச்சமோ டங்கை

கூப்பிப்
பாங்குற நிற்ப மாலும்
பங்கயத் தயனுந் தாழா
நீங்கிய தாயை நேருங்
குழவியின் நிலைய
ரானார். 138
1525 கண்டனன் கவுரி
வேள்விக் களத்திடைக்
கழலுங் கையும்
துண்டமும் தலையும்
மார்பும் தோள்களும்
துணிந்து வீழ
அண்டருந் தக்கன்
தானும் ஆவிபோய்க்
கிடந்த தன்மை
கொண்டதோர் சீற்றம்
நீங்கி அருள்வரக் கூறு
கின்றாள்.

139

1526 வேறு

பொன்னார் சடையெம்
புனிதன்தனை நோக்கி
முன்னா கியபொருட்டு
முன்னோனே
வேள்விக்கு
மன்னா னவற்கும்
இமையோர்க்கும்
மற்றெவர்க்கும்
என்னால் முடிவெய்திற்
றென்றுரைக்கும்
இவ்வுலகே. 140

1527 மற்ற வர்கள்புந்தி
மயக்குற் றுனதுதொல்சீர்
சற்று முணராது
தவறுசெய்த

தன்மையினால்
செற்ற மிகுவீரத்
திருமகனால்
இஞ்ஞான்று
பெற்றன ரேயன்றோ 141
பெறத்தக்க தோர்பரிசே.

1528 முந்தும் இவரை
முடித்தியென
வெ·தியதும்
தந்து முடித்தாய் தனிவீர
னாலனையர்
உய்ந்து குறைபோய்
உயிர்பெற்
றெழும்வண்ணம்
இந்த வரமும்
எனக்கருளாய்
எங்கோவே. 142

1529 என்று தொழுதாங்
கெமையுடையாள்
கூறுதலும்
நன்றுன் னருளென்று
நகைசெய்து தன்பாங்கர்
நின்ற திறலோனை
நேர்நோக்கி இம்மாற்றம்
ஒன்று பகர்ந்தான்
உயிர்க்குயிராய்
உற்றபிரான். 143

1530 ஈண்டை மகத்தில்
எமையிகழ்ந்து
நின்சினத்தான்
மாண்டு சிதைவுற்ற
வலியிலோர் தம்முயிரை
மீண்டு அளித்துருவு
மேனா ளெனப்புரிதி

ஆண்டகை நீயென்றே
அரனருளிச்
செய்தலுமே.
(137. முடிவிலாதான் -
அழிவில்லாத
சிவபெருமான்.
139. கழலும் - காலும்.
துண்டம் - மூக்கு.
துணிந்து - துண்டுபட்டு.
142. முந்தும் -
முன்னரும். முடித்தி -
அழித்தி.) 144
1531 வீர னதற்கிசைந்து
மேனா ளெனஇறந்தீர்
யாரும் எழுதி
ரெனஉரைப்ப
வானவர்கள்
சோரு முனிவர்

மறையோர்
துயிலுணர்ந்த
நீர ரெனஉயிர்வந்
தெய்த நிலத்தெழுந்தார். 145

1532 தண்டம் இயற்றுந்
தனிவீர னாற்சிதைந்த
பிண்ட முழுதுருவும்
பெற்றார் மகம்புக்கு
விண்ட செயலுமுயிர்
மீண்டதுவுங்
கங்குலிடைக்
கண்ட புதிய கனவுநிலை
போலுணர்ந்தார். 146

1533 அந்தண் முனிவோர்
அனைவோரும்
வானவரும்

இந்திர னேயாதி
இமையோர்
களும்வெருவிச்
சிந்தை மருண்டு
சிவனை இகழ்ந்ததனால்
வந்த பழியுன்னி
வருந்திமிக
வெள¢கினரால். 147
1534 பாணார் அளிமுரலும்
பைந்தார் புனைவீரன்
மாணா கத்தன்னோர்
மருங்காகத் தேவியுடன்
பூணார் அரவப்
புரிசடையெம்
புண்ணியனைச்
சேணார் ககனந் திகழுஞ்
செயல்கண்டார். 148

1535 துஞ்சல் அகன்ற சுரரும்
முனிவரரும்
நஞ்ச மணிமிடற்று
நாயகனைக் கண்ணுற்றே
அஞ்சி நடுங்க அதுகண்
டெவர்இவர்க்குத்
தஞ்சம் எமையல்லால்
என்றுதள ரேலென்றான். 149

1536 என்றாங் கிசைத்த
இறைவன் அருள்நாடி
நன்றா லிதென்று
நனிமகிழ்ந்து
முன்னணித்தாய்ச்
சென்றார் தொழுதார்
திசைமுகன்மா
லாதியராய்
நின்றார் எவரும்

நெறியால் 150
இவைஉரைப்பார்.

1537 சிந்தை அயர்வுற்றுச்
சிறுவிதிதன்
வேள்விதனில்
எந்தை நினையன்றி
இருந்தேங்கள்
கண்முன்னும்
வந்து கருணை
புரிந்தனையால்
மைந்தர்க்குத்
தந்தை யலது
பிறிதொருவர்
சார்புண்டோ. 151

1538 அற்றமில் அன்பில்லா
அடியேங்கள் பாலடிகள்
செற்ற மதுபுரியிற்

செய்கைமுத
லானசெயல்
பற்றி முறைசெய்
பதமுளதோ அஞ்சலென
மற்றொர் புகலுளதோ
மன்னுயிருந்
தானுளதோ. 152
1539 வேதத் திறங்கடந்த
வேள்விப் பலியருந்தும்
பேதைச் சிறியேம்
பெரும்பகலுந்
தீவினையில்
ஏதப் படாமே இமைப்பி
லதுதொலைத்த
ஆதிக் கெவன்கொல்
அளிக்கின்ற
கைம்மாறே.

(147. அம் - அழகிய.
தண் -
தண்ணளியினையுடைய.
உன்னி - நினைத்து.
வெள¢கினர் -
வெட்கமுற்றார்கள்.
149. துஞ்சல் - இறத்தல்.
152. அற்றம் - அழிவு.
இல் - இல்லாத.
செய்கை முதலான
செயல் - படைப்பு
முதலிய
தொழில்கள். 153.
வேள்விப்பலி - அவி.) 153
1540 இங்குன்
னடிபிழைத்தோம்
எல்லோரும்
வீரனெனுஞ்

சிங்கந்தன் கையாற்
சிதைபட்ட வாறெல்லாம்
பங்கங்கள் அன்றே
பவித்திரமாய்
மற்றெங்கள்
அங்கங் கட்கெல்லாம்
அணிந்த அணியன்றோ. 154

1541 கங்கை முடித்ததுவுங்
காய்கனலை ஏந்தியதும்
வெங்கண் மிகுவிடத்தை
மேனாள் அருந்தியதும்
நங்கை யுமைகாண
நடித்ததுவும் முற்பகலும்
எங்கண் மிசைவைத்த
அருளன்றோ
எம்பெருமான். 155

1542 ஐய பலவுண்

டறிவிலேம்
நின்றனக்குச்
செய்ய வருபிழைகள்
சிந்தைமிசைக்
கொள்ளாமல்
உய்யும் வகைபொறுத்தி
உன்னடியேம்
என்றலுமே
தைய லொருபங்கன்
தணிந்தனமால்
அ·தென்றான். 156

1543 ஏற்றுத் தலைவன்
இயம்புந் திருவருளைப்
போற்றித் தொழுதுதம்
புந்தி தளிர்ப்பெய்திக்
கூற்றைத் தடிந்த
குரைகழற்றாள்

முன்னிறைஞ்சித்
தேற்றத் துடன்பாடி
யாடிச் சிறந்தனரே. 157
1544 அன்ன பொழுதத்
தயன்முதலாந்
தேவர்கள்மேல்
உன்ன அரிய
ஒருவனருட்
கண்வைத்து
நுந்நும் மரசும் நுமக்கே
அளித்தனமால்
முன்ன ரெனவே
முறைபுரிதி
ரென்றுரைத்தான். 158

1545 மாலயனே யாதியராம்
வானவர்கள்
எல்லோரும்

ஆல மிடற்றண்ணல்
அருளின் திறம்போற்றி
ஏல மகிழ்வெய்த
இறந்தெழுந்தோர்
தங்குழுவில்
சீலமிலாத் தன்மகனை
காணான் திசைமுகனே. 159

1546 மாண்டதொரு தக்கன்
வயவீரன் தன்னருளால்
ஈண்டுசனந் தன்னோ
டெழாவச்
செயல்நோக்கிக்
காண்டகைய நாதன்
கழலிணைமுன்
வீழ்ந்திறைஞ்சி
ஆண்டு கமலத்
தயன்நின்
றுரைக்கின்றான்.

1547 வேறு

ஐயநின் வாய்மை எள்ளி
அழல்கெழும் மகத்தை
யாற்றுங்
கையன தகந்தை நீங்கக்
கடிதினில் தண்டஞ்
செய்து
மையுறு நிரயப் பேறு
மாற்றினை அவனும்
எம்போல்
உய்யவே அருளு
கென்ன உமாபதி
கருணை செய்தான்.

(154. பங்கங்கள்
அன்றே - குற்றங்கள்
அன்றாம்.

பவித்திரம் - பரிசுத்தம்.
157. ஏற்றுத்தலைவன் - சிவபெருமான்.
159. திசைமுகன் தன் மகனைக் காணான் - பிரமன் தன் மகனான தக்கனைக் கண்டிலன்.
160. மாண்ட - இறந்த. ஆண்டு - அங்கே.
161. கையன் - கீழ்மகனான தக்கன்.) 161

1548 இறையருள் கண்டு
வீரன் எல்லையங்
கதனில் எந்தை
அறைகழல் கண்டு
போற்றி அவற்றியல்
வினவித் தாழாப

பொறியுள தென்று
தக்கன் புன்றலை புகுத்த
வுன்னாக்
குறையுடல் அதனைப்
பானு கம்பனைக் 162
கொணர்தி என்றான்.

1549 வித்தக வலிகொள் பூதன்
வீரபத் திரன்தன்
முன்னர்
உய்த்தலும் அதன்மேல்
வேள்விக் குண்டியாம்
பசுவுள் வீந்த
மைத்தலை கண்ட
சேர்த்தியெழு கென்றான்
மறைகள் போற்றும்
அத்தனை இகழும் நீரர்
ஆவரிப் பரிசே என்னா. 163

1550 என்றலும் உயிர்பெற்
றங்கண் எழுந்தவத்
தக்கன் முன்னம்
நின்றதோர் வீரற் கண்டு
நெஞ்சுதுண் ணென்ன
அஞ்சித்
தன்றக விழந்து பெற்ற
தலைகொடு வணங்கி
நாணி
அன்றுசெய் நிலைமை
நாடி அரந்தையங் 164
கடலுட் பட்டான்.
1551 அல்லல்கூ£ந் திரங்கு
கின்ற அசமுகன்
அடல்வெள¢ ளேற்றின்
மெல்லிய லோடு முற்ற
விமலன் துருவங்
காணூஉ

ஒல்லென
வெருக்கொண் டாற்ற
உற்றனன் அச்ச மற்றவ்
வெல்லையில்
இறைவன் தக்கா
அஞ்சலை இனிநீ
என்றான். 165

1552 அஞ்சலென் றருள
லோடும் அசமுகத்
தக்கன் எங்கோன்
செஞ்சரன் முன்னர்த்
தாழ்ந்து தீயனேன்
புரிந்த தீமை
நெஞ்சினும் அளக்கொ
ணாதால் நினைதொறுஞ்
சுடுவ தையா
உஞ்சனன் அவற்றை
நீக்கி உனதருள் புரிந்த

பண்பால். 166
1553 அடியனேன் பிழைத்த
தேபோல் ஆர்செய்தார்
எனினும் என்போல்
படுவதே சரத மன்றோ
பங்கயத் தயனை
நல்கும்
நெடியவன்
துணையென் றுன்னி
நின்பெரு மாயை யாலே
அடிகளை இகழ்ந்தேன்
யாதும் அறிகிலேன்
சிறியேன் என்றான். 167
1554 காலையங் கதனில்
அம்மை காளிதன்
னோடு போற்றிப்
பாலுற நின்ற வீர

பத்திரன் தனைவம்
மென்றே
வேலவன் றேவி
யென்ன வெரிந்புறம்
நீவி அன்னார்க்
கேலநல் வரங்கள்
ஈந்தாள் ஈசனுக் கன்பு 168
மிக்காள்.
1555 மீத்தகு விண்ணு
ளோரும் வேள்வியந்
தேவும் மாலும்
பூத்திகழ் கமலத்
தோனும் புதல்வனு
முனிவர் தாமும்
ஏத்தினர் வணங்கி நிற்ப
எம்மையா ளுடைய
முக்கண்
ஆத்தனங் கவரை

நோக்கி இவைசில
அருளிச் செய்வான். 169
1556 வம்மினோ பிரம னாதி
வானவர் மகஞ்செய்
போழ்தில்
நம்மைநீர் இகழ்ந்தி
யாரு நவைபெறக்
கிடந்த தெல்லாம்
உம்மையில் விதியாந்
தண்டம் உமக்கிது புரிந்த
வாறும்
இம்மையின் முறையே
நாணுற் றிரங்கலீர்
இதனுக் கென்றான். 170

(162. தாழாப்
பொறியுளது -
குறையாத அடையாளம்

உளது;
கெடாத குறிப்பு
ஒன்றுளது எனினுமாம்.
பானு கம்பன் -
சிவகணங்களில்
ஒருவன்.
163. வீந்த - இறந்த.
மைத்தலை - ஆட்டின்
தலை.
165. அசமுகன் - ஆட்டு
முகத்தனான தக்கன்.
167. சரதம் - உண்மை.
நெடியவன் - திருமால்.
168. வேலவன் தேவி
என்ன - குமரக்
கடவுளையும் அவன்
தேவியையும் போல.
வெரிந் - முதுகு. நீவி -

தடவி.
169. வேள்வியந்
தேவும் - யாகத்
தெய்வமும்.)

1557
வேறு
இனைத்தருள் புரிதலும்
எண்ண லாரையும்
நினைத்தருள் புரிதரு
நிமலன் தாள்தொழாச்
சினத்தொடு
மகத்தைமுன் சிதைத்து
ளோனையும்
மனத்தகும் அன்பினால்
வணங்கிப் போற்றவே. 171

1558 வீரரில் வீரனும் விசய
மேதகு

நாரியும் அயல்வர நந்தி
முன்செலப்
பாரிடம் எங்கணும் பரவ
மாதொடே
போரடல் விடையினான்
பொருக்கென்
றேகினான். 172

1559 கயிலையி லேகியே
கவுரி யோடரன்
வியனகர் மன்றிடை
வீற்றி ருந்துழி
வயமிகு வீரற்கு வான
மேக்குற
இயலுமோர் பதமளித்
திருத்தி யாங்கென. 173

1560 இருவர்தந் தாளையும்
இறைஞ்சி அன்னவர்

தருவிடை பெற்றன
னாகித் தக்கன
துரியதோர் மகம்அடும்
உலப்பில் பூதர்கள்
திரைகட லாமெனத்
திசைதொ றீண்டவே. 174

1561 தந்தைமுன்
விடுத்ததோர் தடம்பொற்
றேரயல்
வந்ததங் கதன்மிசை
வயங்கொள் ஆடலான்
பைந்தொடி
யொடும்புகாப் பானு
கம்பன
துந்திட அரனருள்
உலகிற் போயினான்.
175

1562 போயினன் அதனிடைப்

பொருவில்
தொல்பெருங்
கோயிலின் எய்தியே
குழுக்கொள் சாரதர்
மேயினர் சூழ்தர வீர
பத்திரன்
ஏயதோர் துணைவியோ
டினிது மேவினான். 176

(172. விசயமே தகு நாரி - பத்திரகாளி. 173. பதம் - பதவி.
174. இருவர் - உமாதேவியும் சிவபெருமானும் ஆகிய இருவர்.
175. பானு கம்பன் அது உந்திட - பானு கம்பன்

சாரதித் தொழில்
செய்ய.)

ஆகத் திருவிருத்தம் - 1562

--

---

This file was last revised on 15 October 2008.

Feel free to send corrections to the Webmaster.